



# தமிழரசு

ஆகஸ்ட் 1 - 15, 1998 ரூ.3









## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.

## அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்


- சுதந்திரத் திருநாள் பொன்விழா
- சமுதாயத் திட்டங்களுடன் பொன்விழா கொண்டாட்டம் - கலைஞர் பெருமிதம்
- காவிரி நதிநீர்ப் பங்கீடு - தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. தர உடன்பாடு
- காவிரி நதிப்பிரச்சினை - உச்ச நீதிமன்ற ஆணை
- ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் - முதலமைச்சர் உரை
- காவிரி: இதுவரை நடந்தது
- அனைவருக்கும் மருத்துவ வசதி
- எங்கள் ஊர்ப் பிரச்சினை
- காவிரி உடன்பாடு - பத்திரிகைகள் பாராட்டு



## தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2029

ஆடி

ஆகஸ்ட் 1-15, 1998

மலர் : 30 இதழ் : 3


விலை ரூ.3


### திருக்குறள்

*இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு.*

இல்லறத்தைப் போற்றி வாழ்வது, விருந்தினரை வரவேற்று, அவர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்காகவே.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...



# சுதந்திரத் திருநாள் பொன்விழா

இந்திய சுதந்திரத் திருநாள் பொன் விழாவைச் சென்னை மாநகரில் தமிழ்நாடு அரசும், தென்னகப் பண்பாட்டு மையமும் இணைந்து எழிலுறக் கொண்டாடின.

கடற்கரையில், மாபெரும் அளவில் அந்தமான் சிறைவடிவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அழகிய அரங்கில் 11.8.98 அன்று மாலையில் விழாத் தொடர்பான நிகழ்ச்சிகள் தொடங்கின. முன்னதாக - தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், அந்தமான், புதுச்சேரி ஆகிய மாநிலங்களிலிருந்து ஏந்தி வரப்பட்ட 'சுதந்திரச் சுடர்' இளைஞர்களின் தொடர் ஓட்டத்தை, வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், போர் நினைவுச் சின்னம் அருகே தொடங்கிவைத்தார்.

காந்தியடிகளின் திருவுருவச் சிலை அருகில், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள் சுதந்திரத் திருநாள் ஒளிச்சுடரை ஏற்றிவைத்துப் பொன்விழா உறுதிமொழியை எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.வ.முல்லைவேந்தன் அவர்களும் கலந்துகொண்டார்.

கடற்கரை நிகழ்ச்சி தொடங்குமுன் - 3 விமானங்களும், 3 ஹெலிகாப்டர்களும் வானத்திலிருந்து ரோஜா மலர்மாரி பொழிந்து சென்றன.

நிகழ்ச்சியை - மேதகு தமிழக ஆளுநர் செல்வி.எம்.பாத்திமா பீவி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர், மேதகு கர்நாடக ஆளுநர் குர்ஷித் ஆலம்கான், மேதகு புதுவை துணைநிலை ஆளுநர், ரஜனிராய் ஆகியோர் முரசு கொட்டித் தொடங்கி வைத்தார்கள். அந்த முரசொலி எங்கும் எதிரொலித்தது.

விழாவைத் தொடங்கி வைத்து மேதகு ஆளுநர் பாத்திமா பீவி பேசியதாவது : கடந்த 50 ஆண்டுகளில் இந்தியா தனது பொருளாதாரத் துயர்களிலிருந்து மெல்ல மீண்டு வந்துள்ளது. இந்திய மக்களின் ஒட்டு மொத்த முனைப்பால் இது சாத்தியமானது.

ஐயாமிரம் ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியம் உள்ள நாம், 'இந்தியத் தன்மை'யால் கட்டுப்பட்டுள்ளோம்; சட்டத்தினால் அல்ல.

"21-ம் நூற்றாண்டில் இந்தியாவின் எதிர்காலம் சிறப்பாக இருக்கிறது. அதற்கான சரியான திசையில் செல்கிறோம் என்றார் பாத்திமா பீவி.

கல்வி அமைச்சர் : தேடித்தந்த சுதந்திரத்தை நிலைநாட்ட ஜனநாயகமே சிறந்த முறை என நேரு

**அட்டைப்பட விளக்கம்**

**முதல் அட்டை :** சென்னைக் கடற்கரையில், சீரணி அரங்கையொட்டி அமைக்கப்பட்டிருந்த அந்தமான் செல்லுலர் சிறைச்சாலை வடிவக் கட்டடத்தின் முன் இருந்த அரங்கில் - இந்தியத் திருநாட்டின் 50-வது சுதந்திரத் திருநாள் நிறைவு விழா நிகழ்ச்சிகள்.

**நான்காம் அட்டை :** தருமபுரி மாவட்டத்தில் மக்கள் நலப்பணிகள் தொடக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மற்றும் அமைச்சர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சி.

கீழே : ஒகேனக்கல் அருவி



## 11 தமிழ் எழுத்தாளர் குடும்பத்துக்கு தலா ரூ.5 இலட்சம் பரிவுத் தொகை !

விடுதலை உணர்வூட்டி நூல்கள் எழுதிய மறைந்த தேசியத் தமிழ் எழுத்தாளர்கள் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, ப.ஜீவானந்தம், நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளை, மூதறிஞர் இராஜாஜி, வ.உ.சிதம்பரனார், சுத்தானந்த பாரதியார், அகிலன், ஏ.எஸ்.கே. அய்யங்கார், வ.ரா., நாவலர் சோமசுந்தர பாரதியார், கா.மு.ஷெரீப், பரலி சு.நெல்லையப்பர், வ.வே.சு. அய்யர், காரைக்குடி சா.கணேசன்,ச.து.சு.யோகியார் ஆகிய 15 பேரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும் என்று ஏற்கெனவே முதலமைச்சர் கலைஞர் சட்டப் பேரவையில் அறிவித்திருந்தார்.

இவர்களில் இராஜாஜி, அகிலன் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்படுவதை அவர்கள் குடும்பத்தினர் ஏற்கவில்லை.

எனவே, மற்ற 13 பேருக்கும் பரிவுத் தொகையாகத் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.655 இலட்சம் வழங்கத் தமிழக அரசு ஆணை பிறப்பித்தது.

இவர்களில் வ.ரா., ஏ.எஸ்.கே., அய்யங்கார் ஆகியோரின் வாரிசுதாரர்கள் குறித்து ஆய்வு செய்த பின்னர் வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.



வ.உ.சி., வ.வே.சு.அய்யர், தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர்.



ச.து.சு.யோகி, சுத்தானந்த பாரதியார், சோமசுந்தர பாரதியார், வ.ரா.



பரலி சு. நெல்லையப்பர், ஜீவா, சா.கணேசன், ஏ.எஸ்.கே. அய்யங்கார், கா.மு.ஷெரீப்.

---

நிலைநிறுத்திக் காட்டினார். மாநிலங்கள் மதிக்கப்பட வேண்டும் என்ற உணர்வை அண்ணா உருவாக்கினார். நாம் பெற்ற சுதந்திரம் நிறைவான சுதந்திரமாக விளங்க வேண்டும். சுதந்திரம் பெற்றுத் தந்தவர்களின் தியாகம் நம்மைத் தகுதியுள்ளவர்களாக ஆக்க வேண்டும்.

தமிழ் வளர்ச்சி - பண்பாடுத் துறை அமைச்சர் திரு.மு.தமிழ்க் குடிமகன் : அந்தமான் சிறையில் இருந்த 698 தனி அறைகளிலும் விடுதலைப் போராட்ட வீரர்கள் அடைக்கப்பட்டு, துன்புறுத்தப் பட்டார்கள். தூக்கிலிடப்பட்டார்கள். அதை நினைவுப்படுத்தும் வகையில் இக்கட்ட மைப்பை உருவாக்கி யுள்ளோம். "எங்களுக்காக இன்னுயிர் ஈந்த மக்காள், உங்களுக்காக இன்று உகுக்கின்றோம் கண்ணீர்".



இலட்சத் தீவு மக்களவை உறுப்பினர் : காந்தி படுகொலை செய்யப்பட்ட செய்தி நான்கு மாதங்களுக்குப் பிறகுதான் இலட்சத் தீவுக்குத் தெரிய வந்தது. இப்போது எல்லாத் தீவுகளிலிருந்தும் எல்லா நாடுகளுக்கும் தொலைபேசியில் தொடர்புகொள்ளும் வகையில் இந்தியா வளர்ச்சியடைந்துள்ளது.

இந்த கடற்கரை நிகழ்ச்சியில் செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் வ.முல்லைவேந்தன் வரவேற்றார். தென்னகப் பண்பாட்டு மைய இயக்குநர் கா.ராமமூர்த்தி, மத்திய அரசின் பண்பாட்டு துறைச் செயலர் ரி.வெ.வைத்தியநாத அய்யர் ஆகியோர் பேசினர்.

விழா முடிவில் செய்தித் துறைச் செயலாளர் திரு.எஸ்.ராஜரெத்தினம் நன்றி கூறினார்.

பல்வேறு பள்ளி, கல்லூரி மாணவிகள், பலதுறைக் கலைஞர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் பல தொடர்ந்து இவ்விழாவில் இடம் பெற்றன. 13.8.98 வரை கடற்கரையில் மாலைவேளையிலெல்லாம் தொடர்ந்து நடைபெற்ற இந்த இனிய நிகழ்ச்சிகளில் வெள்ளம்போல் தமிழர் கூட்டம், வீரம் கொள்கூட்டம் திரண்டு வந்து கண்டுகளித்தது.

- 'ராஜு-ஓ'

# சமுதாயத் திட்டங்களுடன் பொன்விழாக் கொண்டாட்டம்

## - முதலமைச்சர் கலைஞர் பெருமிதம் !

தென்னகப் பண்பாட்டு மையத்தின் சார்பில் சென்னை மெரினா கடற்கரை சீரணி அரங்கில் நடைபெற்ற சுதந்திரப் பொன்விழா நிறைவு விழாவின் தொடக்க நாளாம் **11-8-98** அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

இன்று இந்த விழாவில் ஒரு மாநிலம்தான் பாக்கி. தமிழ் மாநிலம், கர்நாடக மாநிலம், புதுவை மாநிலம் கலந்துகொள்ளும் இந்த விழாவில் கேரள மாநிலம்தான் வரவில்லை. அதை ஓரளவிற்கு நம்முடைய தமிழ் மாநில ஆளுநர் அவர்கள் நிறைவு செய்திருக்கிறார் என்றே நான் கருதுகிறேன்.

### பிரதமர் முன்னிலையில் செய்துகொண்ட ஒப்பந்தம்

இந்த நான்கு மாநிலங்களும் அண்மையில் டெல்லியில் கூடி, ஒரு நல்ல ஒப்பந்தத்தை பிரதமர் முன்னிலையிலே செய்து கொண்டிருப்பதை இந்தப் பொன்விழா ஆண்டு நிறைவு விழாவில் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்நாடக மாநில ஆளுநர் மேதகு குர்ஷித் ஆலம்கான் அவர்களும் இங்கே வந்திருக்கின்ற காரணத்தால், நான் இந்தச் செய்தியை அறிவிக்கின்றபோது, அவரும் மகிழ்வார் என்பதற்காக அறிவிக்கின்றேன்.



**I want to inform you all, that the DRAFT for the Cauvery issue has been approved and notified by the Central Government just half an hour back. I have received the information from Delhi and I want to thank all concerned, particularly our Prime Minister of India on behalf of the people of Tamil Nadu.**

காவிரிப் பிரச்சினையின் வரைவுத் திட்டம் மத்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப் பட்டு அறிவிக்கப் பட்டுள்ளது என்பதை உங்களுக்கெல்லாம்

தெரிவிக்க விரும்புகின்றேன். அரை மணி நேரத்திற்கு முன்புதான் டெல்லியிலிருந்து எனக்கு இந்தச் செய்தி கிட்டியது.

இதிலே சம்மந்தப்பட்ட அனைவருக்கும், குறிப்பாக நம்முடைய இந்தியப் பிரதமர் அவர்களுக்கும் தமிழ்நாட்டு மக்கள் சார்பில் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நல்ல செய்தியோடு, இந்தச் சுதந்திரப் பொன்விழா ஆண்டு நிறைவுவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சுதந்திரம் பெறுவதற்கு எவ்வளவு கஷ்டநஷ்டங்களைப் பட்டோமோ, அதைப்போலவே, இந்தக் காவிரி ஒப்பந்தத்தை - இந்தத் தீர்வை அடைவதற்கும் பல கஷ்ட நஷ்டங்களை நாம் பட்டிருக்கின்றோம்.

சுதந்திரம் கிடைக்கின்ற நேரத்தில் எவ்வளவு இடையூறுகள் இருந்ததோ, அதைப் போலவே காவிரிப் பிரச்சினை தீருகின்ற நேரத்திலும் பல இடையூறுகள் விளைந்தன.

*"தடைக் கற்கள் உண்டென்றாலும்*
*தடந்தோள் உண்டெனச் சிரிப்பாய்"*

- என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுடைய கவிதை வரிகளுக்கேற்ப தடைக்கற்களையெல்லாம் கடந்து, இன்று நதிநீர் பங்கீட்டு ஒப்பந்தத்தை நாம் உருவாக்கி யிருக்கின்றோம் என்பதைப் பெருந்தன்மையோடு, பெருமிதத்தோடு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த ஒப்பந்தம் தமிழ்நாட்டிற்கு மாத்திரம் வெற்றி என்று நான் சொல்லமாட்டேன்; சொல்லவில்லை. இந்த ஒப்பந்தம் கர்நாடக மாநிலத்திற்கும், கேரள மாநிலத்திற்கும், புதுவை மாநிலத்திற்கும் - இந்த மாநிலங்களிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் கிடைத்துள்ள நல்ல செய்தி என்பதை இந்தப் பொன்விழா ஆண்டின் நிறைவு விழாவிலே, நான் பெருமிதத்தோடு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல், இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடி, பாடுபட்டு, களத்தில் நின்று தியாகங்கள் செய்தவர்கள் அடைபட்டுக் கிடந்த கூண்டின் விஸ்வரூபம்தான் அந்தமான் சிறைச்சாலையாக இந்தப் பின்னணியிலே அமைக்கப் பட்டிருக்கின்றது.

எத்தனைப் பேர் சித்ரவதைக்கு ஆளானார்கள், எத்தனைப் பேர் சிறைச்சாலைக் கம்பிகளை ஆயுள் முழுவதும் எண்ணிக் கொண்டு உயிர் நீத்தார்கள், எத்தனைப் பேர் ரத்தச் சகதியிலே தங்களுடைய தலைகளைச் செந்தாமரை மொட்டுக்களாக மிதக்க விட்டார்கள் என்பவைகளையெல்லாம் எண்ணிப்பார்த்தால் இன்றைக்கு நாம் மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்ற இந்தச் சுதந்திரப் பொன்விழா எவ்வளவு நெருக்கடிகளைத் தாண்டி, எத்தனை நெருப்பாறுகளைத் தாண்டி, எத்தனை அக்னி எரிமலைகளைத் தாண்டி கிடைத்துள்ள வரப்பிரசாதம் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

இந்த சுதந்திரப் பொன்விழாவைத் தமிழக அரசைப் பொறுத்தவரையில், நம்முடைய ஆளுநர் நீதிபதி செல்வி பாத்திமா பீவி அவர்களுடைய ஒத்துழைப்போடும், அவர்கள் தலைமையேற்று நடத்துகின்ற இந்தத் தென்னகப் பண்பாட்டுக் குழுவினுடைய நன் முயற்சியோடும், கடந்த ஆண்டும் சரி, இடைக்காலத்திலே பல திங்கள்களிலும், பல வாரங்களிலும் மிகச்சிறப்பாக நாம் கொண்டாடி இருக்கின்றோம். அதற்குச் சிகரம் வைத்தாற்போல், இந்த விழாவை இப்போது நடத்திக்கொண்டிருக்கிறோம்.

## சமுதாயத் திட்டங்களுடன் பொன்விழாக் கொண்டாட்டம்

தமிழக அரசைப் பொறுத்தவரையில் ஓராண்டுக் காலத்தில் பல சமுதாய நலத்திட்டங்களை, ஏழை எளியோருக்கான நல்வாழ்வுத் திட்டங்களை, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், நடுத்தர மக்கள், தரித்திர நாராயணர்கள் இவர்கள் வளம் பெறுவதற்கான திட்டங்கள் பலவற்றைத் தீட்டி இந்தப் பொன்விழாவைக் கொண்டாடி இருக்கின்றோம்.

தேசத்துக்காகத் தியாகம் செய்த உத்தமர்களுக்குப் பல நினைவுச்சின்னங்களை எழுப்பியிருக்கின்றோம். இன்னும் பல நினைவுச்சின்னங்களை, மண்டபங்களை அந்தத் தியாகிகளுக்கு எழுப்ப இருக்கின்றோம்.


நினைவு மண்டபங்கள் மாத்திரமல்ல, அந்தத் தியாகிகளுடைய வாழ்வில் வளம்கொழிக்க தமிழக அரசு அந்தத் தியாகிகளுக்கெல்லாம் மரியாதை செய்வது மாத்திரமல்ல, அவர்களது வாழ்விலும் ஒளிவிளக்கேற்ற பல உதவிகளைச் செய்துவருகின்றது. இத்தகைய நிலையிலே இந்தப் பொன்விழாவை நாம் கொண்டாடுகிறோம்.

## நாட்டு மக்களுக்குக் கடமை ஆற்றச் சபதமேற்போம்

இந்தப் பொன்விழா ஓராண்டுக் கொண்டாட்டமாக முடியாமல், தொடர்ந்து இந்தத் தொண்டுகளைத் தமிழ் மக்களுக்குச் சாதாரண சாமான்ய மக்களுக்கு, குறிப்பாகவும் பொதுவாகவும் சொல்லவேண்டுமேயானால், நாட்டு மக்களுக்கு நாம் கடமையாற்ற வேண்டிய சபதத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கூறி, வருகை தந்துள்ள கர்நாடக மாநில ஆளுநர் அவர்களையும், புதுவை துணைநிலை ஆளுநர் அவர்களையும் மற்றும் லட்சத்தீவினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் சயீத் அவர்களையும், அந்தமான் ஆணையர் சர்மா அவர்களையும், உங்கள் அனைவரையும் வரவேற்று மகிழ்கின்றேன்.

- இவ்வாறு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் உரையாற்றினார்.

# காவிரி நதிநீர்ப் பங்கீடு : தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. தர உடன்பாடு



## அரசிதழில் வரைவுத் திட்டம் வெளியிடப்பட்டது.
## உச்ச நீதிமன்றம் ஏற்றது; முதலமைச்சர் கலைஞர் பெருமிதம் !

காவிரி நதிநீரைப் பகிர்ந்துகொள்ளுவது தொடர்பாக, மத்திய அரசு ஒரு வரைவுத்திட்டம் தயாரித்திருந்தது; அதுபற்றி விவாதித்து முடிவெடுக்க மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.வாஜ்பாய் அவர்கள், காவிரி வடிநிலப் பகுதி முதலமைச்சர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

காவிரி நடுவர் மன்ற ஆணையை அமல்படுத்தும் நோக்கத்தோடும், நீதிமன்றத்திற்கு வெளியிலேயே பேசி முடிவு காணும் நல்லெண்ணத்தோடும் மாண்புமிகு பிரதமர் கூட்டும் அக்கூட்டத்தில் பங்கேற்குமுன் - அதுபற்றிக் கலந்துபேச மாண்புமிகு கலைஞர் அவர்கள், அரசு தலைமைச் செயலகத்தில் அனைத்துக்கட்சிக் கூட்டம் ஒன்றைக் கூட்டியிருந்தார்.

டில்லியில் பிரதமர் கூட்டும் அக்கூட்டத்தில், முதல்வர் சென்று கலந்துகொள்ள இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானித்தது.

**தீர்மானம்**

தலைமைச் செயலகம் - நாமக்கல் கவிஞர் மாளிகையில் 3.8.98 அன்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழகத்தில் உள்ள 41 கட்சிகளைச் சேர்ந்த 72 பேர் கலந்துகொண்டார்கள்.

இதுவரை காவிரி நதிநீர்ப் பங்கீடு பற்றிய பேச்சு வார்த்தைகளும், டில்லியில் பேச இருப்பதும் பற்றிய விவர அறிக்கையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் தரப்பட்டது. மேலும் இதுபற்றிக் கலைஞர் அவர்கள் விளக்கி அக்கூட்டத்தில் உரையாற்றினார்.

அதன்பின்பு, டில்லியில் நடைபெற உள்ள பேச்சு வார்த்தையில் மாண்புமிகு முதலமைச்சர் கலந்துகொள்ளலாம் என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது; எதிர்ப்பு இல்லை.

**முதலமைச்சர் உரை**


- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அந்தக் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவு முழு விவரம் வருமாறு :

"அன்புடையீர்,

வணக்கம்.

எனது அழைப்பினை ஏற்று இங்கு வந்துள்ள அனைத்துக்கட்சித் தலைவர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் முதற்கண் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திற்கும், கர்நாடக மாநிலத்திற்கும் இடையே நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்ற பிரச்சினை காவிரி நதி நீர்ப்





பிரச்சினை என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வினைக் கண்டிட வேண்டும் என்று 1968 முதல் 1990 வரை 26 முறை பேச்சுவார்த்தைகள் மேற்கொண்ட பின்னரும், தீர்வு ஏதும் ஏற்படவில்லை என்பதையும் தாங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று காணவேண்டும் என்றால், அது நடுவர் மன்றம் ஒன்றினால்தான் முடியும் என்பதைத் தமிழக அரசு திடமாக நம்பியதால், 1970-ல் இருந்து நடுவர்மன்றம் ஒன்றினை அமைக்கவேண்டும் என்று மத்திய அரசை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததையும் தாங்கள் நன்கு அறிவீர்கள்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு விரைந்து ஒரு முடிவினைக் காண மத்திய அரசு உடனடியாக ஒரு நடுவர் மன்றத்தை அமைக்க உச்ச நீதிமன்றம் ஆணை ஒன்று வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, காவிரி டெல்டா விவசாயிகள் சங்கத்தின் சார்பில் 1983ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்திருந்தனர்.

இந்த வழக்கில் தமிழக அரசு தன்னையும் இணைத்துக் கொண்டு விவசாயிகள் கோரிக்கைக்கு ஆதரவாக வாதிட்டது.

1990 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26ஆம் தேதி வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த நேரத்தில் இந்த வழக்கு 24.4.90 அன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதற்கிடையில் மத்திய அரசு முன்னிலையில் காவிரி நதி தீரத்து மாநில முதல்வர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு ஒரு முடிவினைக் காணலாம் என்ற அறிவுரையை உச்ச நீதிமன்றம் வழங்கியது.

உச்ச நீதிமன்றத்தின் அறிவுரைக்கு ஏற்ப, 5.4.90 அன்று, அப்போதைய தமிழகத்தின் முதல்வர் பொறுப்பிலிருந்த நானும், கர்நாடக முதல்வர் பொறுப்பில் இருந்த திரு.வீரேந்திர பட்டீல் அவர்களும், மத்திய நீர்வள அமைச்சர் முன்னிலையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். ஆனால் அக்கூட்டத்திலும் ஒருமித்த கருத்து உருவாகாத காரணத்தால், மீண்டும் நானும் திரு.வீரேந்திர பட்டீல் அவர்களும் சென்னையில் 19.4.90 அன்று சந்தித்துப் பேசுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

19.4.90 அன்று சென்னையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையிலும் ஒருமித்த கருத்து உருவாகவில்லை.

இந்தப் பேச்சுவார்த்தையில் எந்தப் பலனும் ஏற்படவில்லை என்று தமிழக அரசின் சார்பில் 24.4.90 அன்று உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அத்தோடு 24.4.90 அன்றே தமிழகச் சட்டப் பேரவை பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்துவிட்டதை உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு திட்டவட்டமாகத் தெரிவிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.

**உச்ச நீதிமன்றத் தீர்ப்பு**

அப்பொழுது இந்தியப் பிரதமராக இருந்த திரு.வி.பி.சிங் அவர்கள் தலைமையில் இருந்த மத்திய அரசு தம் வழக்கறிஞர் மூலம், தமிழக அரசின் கருத்தை உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்ததோடு இப்பிரச்சினை குறித்து உச்ச நீதிமன்ற முடிவுக்கே விட்டு விடுவதாகவும் தெரிவித்தது.

***'காவிரி நதிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, மத்திய அரசு ஒரு மாத காலத்துக்குள் நடுவர் மன்றம் ஒன்றை அமைத்திட வேண்டும் என்ற தீர்ப்பினை 4.5.90 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கியது'.***

மத்திய அரசும் 2.6.90 அன்று மூன்று நீதிபதிகளைக் கொண்ட ஒரு நடுவர் மன்றத்தை அமைத்தது.

28.7.90 அன்று நடைபெற்ற நடுவர் மன்றத்தின் முதற்கூட்டத்திலேயே, தமிழக அரசின் சார்பில் நடுவர்மன்றம் ஒரு இடைக்காலத் தீர்ப்பினை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்தது.

அவ்வாறு இடைக்காலத் தீர்ப்பினை வழங்க அதிகாரம் இல்லை என்ற ஒரு தீர்ப்பினை நடுவர் மன்றம் 5.1.91 அன்று வழங்கியது.

இந்தத் தீர்ப்பினை எதிர்த்து தமிழக அரசு 10.1.91 அன்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடுத்தது. அந்த வழக்கில் 26.4.91 அன்று நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பினை வழங்கலாம் என்ற தீர்ப்பை உச்ச நீதிமன்றம் அளித்தது.

**முக்கிய ஷரத்து**

உச்சநீதி மன்றத்தின் ஆணையை ஏற்று 25.6.91 அன்று நடுவர் மன்றம் தன் இடைக்கால ஆணையை வழங்கியது.

*ஜூன் முதல் மே வரையிலான 12 மாதங்களில் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு வந்து சேரும்படி 205 டி.எம்.சி. நீரைக் கர்நாடகம் தனது நீர்த்தேக்கத்திலிருந்து விடவேண்டும் என்பதுதான் ஆணையின் முக்கிய ஷரத்தாகும்.*

*அந்த 205 டி.எம்.சியை மாதந்தோறும் / வாரந்தோறும் எப்படியெல்லாம் வழங்க வேண்டும் என்பதைப் பற்றியும் நடுவர் மன்றம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.*

*ஆனால், இன்றுவரை எந்த ஆண்டிலும் கர்நாடகம் நடுவர் மன்றத்தின் ஆணையை முழுமையாக நிறைவேற்றவில்லை என்பதுதான் உண்மை.*

1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தாவா சட்டம் பிரிவு 6-ஏ யின் கீழ், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்தும் பொருட்டு ஒரு திட்டத்தைத் தீட்டுவது மத்திய அரசின் கடமையாகும்.

• ஆனால், மத்திய அரசு தன் கடமையைச் செய்யாததால், "மத்திய அரசு, அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டும்" என்று உச்ச நீதிமன்றம் ஆணையிடவேண்டும் என்று தமிழக அரசு 1992ல் சிவில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தது.

அதுமட்டுமல்லாது கர்நாடகம் இந்த ஆணையின் அடிப்படையில் உரிய காலத்தில் எப்பொழுதெல்லாம் நீரை வழங்க முன்வரவில்லையோ அப்பொழுதெல்லாம் தமிழ்நாடு இடைக்கால மனுக்களை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துகொண்டு வந்தது.

1996ஆம் ஆண்டு மீண்டும் நான் முதல்வர் பொறுப்பில் அமர்ந்ததும், இந்த வழக்கினைத் துரிதப்படுத்த எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி சட்டமன்றத்தில் விளக்கிப் பேசிய பேச்சின் ஒரு பகுதியை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது நலம் என்பதால் அதை இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

*"தமிழக அரசு தொடுத்த ஒரு மனுவினை உச்ச நீதிமன்றம் 30.7.1996 அன்று விசாரித்தபொழுது தமிழ்நாட்டிற்குத் தேவையான நீரை உடன்பெற இருமாநில முதல்வர்களும் கூடிப்பேசி அதன் முடிவினை உச்சநீதிமன்றத்திற்குத் தெரிவிக்குமாறு விழைந்தது. இதற்கிணங்க 5.8.1996, 4.9.1996, 21 மற்றும் 22.9.1996, 16.10.1996 மற்றும் 5.1.1997 ஆகிய நாட்களில் ஐந்து முறை பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகள் மூலம் சுமுக முடிவு காண இயலவில்லை.*

**வரைவுத் திட்டம்**

*அதற்குப் பிறகுதான் இந்தப் பேச்சுவார்த்தை பயன்படாது என்று மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று "பேச்சுவார்த்தை பயன் அளிக்கவில்லை. உங்களது தீர்ப்பை வழங்குங்கள்" என்று 4.2.1997 அன்று உச்ச நீதிமன்றத்தைத் தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டது".*

இந்த வழக்கு அரசியல் சாசனப் பிரிவினால் (Constitution Bench) விசாரணை செய்யப்பட்டு வந்தபோது, 9.4.1997 ஆம் நாளன்று மத்திய அரசின் தலைமை வழக்குரைஞர் இந்த இடைக்கால ஆணையைச் செயலாக்கம் செய்ய, மத்திய அரசு ஒரு திட்டத்தைத் தீட்டி சம்பந்தப்பட்ட மாநிலங்களின் கருத்தைப் பெற்று இறுதியாக்கம் செய்யும் என்று தெரிவித்தார். அதனடிப்படையில் மத்திய அரசு ஒரு வரைவுத் திட்டத்தைத் தீட்டி அதை 30.5.1997ஆம் நாளிட்ட கடிதத்தில் மாநிலங்களின் கருத்தை அறியவேண்டி அனுப்பியது. அதற்கு 23.6.1997 அன்று இந்தத்திட்டத்தைப்பொதுவாக ஏற்றுக்கொள்வதாகத் தமிழ்நாடு, மத்திய அரசிற்குத் தெரிவித்தது.

இந்தத் திட்டமானது நடுவர் மன்றத்தின் ஆணையை அமல்படுத்தும் வகையில் தீட்டப்பட்டுள்ளது. இதில் காவிரி நதிநீர் ஆணையம் ஏற்படுத்துவது ஒரு முக்கிய அம்சமாகும். இந்த வரைவுத் திட்டத்தின் நகல் தங்களுக்குத் தனியே வழங்கப்பட்டுள்ளது.

இந்த வரைவுத் திட்டத்தை விரைவில் இறுதியாக்கி மத்திய அரசின் அரசிதழில் வெளியிட வேண்டி தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும், தங்களுக்கு அனுப்பியுள்ள குறிப்பில் விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் உச்ச நீதி மன்றத்தில் தமிழ்நாடு தொடுத்த வழக்கு பலமுறை விசாரணைக்கு வந்தபோது மத்திய அரசு ஒவ்வொரு முறையும் ஒரு காரணத்தைக் கூறி வழக்கைத் தள்ளிவைக்க முறையிட்டது. கடந்த 21.7.1998ஆம் நாளன்று இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசு 6 வாரம் அவகாசம் மேலும் வேண்டியது. ஆனால் உச்ச நீதிமன்றம் 3 வாரம் அவசகாசத்தை மட்டுமே அளித்து, இந்த ஒத்திவைப்பே இறுதியானது என்றும் கூறி வழக்கை 12.8.1998க்கு ஒத்திவைத்தது.

இப்பிரச்சினை குறித்து சட்டமன்றத்தில் விவாதம் ஏற்பட்ட போதெல்லாம் இந்த அரசின் நிலையையும், அது தொடர்ந்து எடுத்துவரும் முயற்சிகளையும் 24.7.1996, 31.7.1996, 1.8.1996, 5.8.1996, 27.8.1996, 30.4.1997, 21.3.1998 மற்றும் 23.3.1998 ஆகிய நாட்களில் விரிவாக எடுத்துரைத்துள்ளேன்.

**தேசிய நதிநீர்க் கொள்கை**

*மேலும் 15.4.1998 அன்று சட்டமன்றப் பேரவையில் இரண்டு மாநிலங்களுக்கிடையே மீண்டும் பேச்சுவார்த்தை ஏற்படுமா என்பது*

## காவிரி தண்ணீரைக் குடித்து வாழ்ந்தவன் நான்!

*"காவிரிப் பிரச்சினையோடு இணைந்து, வாழ்ந்து வளர்ந்தவன் நான். காவிரிப் பிரச்சினையில் தமிழர்களைக் காட்டிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு நயவஞ்சகம் கொண்டவன் அல்ல நான். காவிரிப் பிரச்சினை எப்போது தீரும்? எப்போது தமிழர்களுடைய கண்ணீர் துடைக்கப்படும் என்று ஏங்கியவன் நான். இன்னும் சொல்லப்போனால் காவிரி தண்ணீரைக் குடித்து வாழ்ந்த தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் நான்!"*

- 10-8-98 அன்று நடைபெற்ற மொரப்பூர் நிகழ்ச்சியில் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

*குறித்து வினவியபோது, நான் அளித்த பதிலிலிருந்து ஒரு பகுதியை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*

"தேசிய நதிநீர்க் கொள்கை என்பது புறக்கணிக்கப்படக்கூடிய ஒன்று அல்ல. ஆனால் அந்தக் கொள்கையையும், காவிரிப் பிரச்சினையையும் இப்போது முடிச்சுப்போட்டு, அந்தக் கொள்கையை வலியுறுத்துகின்ற காரணத்தால், காவிரிப் பிரச்சினையைத் தள்ளிப்போடுவோம் என்ற கருத்தை நாம் ஏற்பதற்கில்லை. இதை மிகத் தெளிவாகப் பலமுறை நாம் விளக்கியிருக்கின்றோம். இதிலே உச்ச நீதிமன்றம் இதுபற்றி விசாரணை நடத்திக்கொண்டு இருக்கிறது.

இடையிலே உச்ச நீதிமன்றம் தந்த ஒரு கருத்தின் அடிப்படையிலேதான் மீண்டும் ஒருமுறை கர்நாடக் முதலமைச்சரோடு நான் பேசுவதற்கு ஒத்துக்கொண்டு 4,5 தடவை பேசிப்பார்த்து, அதிலே ஒரு முடிவு கிடைக்காத காரணத்தால், அதைப்பற்றி உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சொல்லி, பிரச்சினையை நீதிமன்றத்திற்கே விட்டுவிட்டோம்.

பிறகு, உச்ச நீதிமன்றம் மத்திய அரசிலேயிருந்து ஒரு கருத்தைப் பெற்றது. மத்திய அரசு வகுத்துக் கொடுத்த அந்தக் கருத்து மாநில அரசுகளுடைய கருத்துக்கு உடன்பட்டதா? அல்லவா? என்பதை உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்று தமிழகம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு விடுக்கப்பட்ட அந்த அறிவிப்பின் மீது, தமிழ்நாடு தன்னுடைய கருத்தை அனுப்பியிருக்கிறது. அதைப்போலவே கேரளம் தன்னுடைய கருத்தை அனுப்பியிருக்கிறது. பாண்டிச்சேரி தன்னுடைய கருத்தை அனுப்பிவைத்து இருக்கின்றது.

கர்நாடகம் மாத்திரம் ஏற்கெனவே ஐக்கிய முன்னணியினுடைய மத்திய அரசு - எடுத்த நிலைக்கு, மாறாக வேறொரு நிலையை எடுத்திருக்கிறது. 'அத்தாரிட்டி' என்ற ஒன்றை அமைக்க வேண்டும் என்பது மத்திய அரசினுடைய திட்டத்திலே ஒரு பெரும் கூறாகும். அந்த அத்தாரிட்டியினுடைய பணி என்னவென்றால் நடுவர் மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பில் உள்ள எல்லா அம்சங்களும் அமலாக்கப்படுவதை உறுதிசெய்வதுதான்.

அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாத கர்நாடக அரசு, "அத்தாரிட்டி என்று இருக்கக் கூடாது, கமிட்டி என்று இருந்தால் போதுமானது" என்று கூறுகிறது. அதிலே நமக்கும் அவர்களுக்கும் ஒத்துவராத கருத்து இருக்கின்றது. இதைத்தான் வலியுறுத்திக்கொண்டே இருக்கின்றோம்.



7.4.98 அன்று இப்பொழுதுள்ள பிரதமர் திரு.வாஜ்பாய் அவர்களை டெல்லியிலே சந்தித்த போது கூட அவரிடத்தில் தமிழ்நாட்டின் நலனுக்காகக் கொடுக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளிலே முக்கியக் கோரிக்கையாகக் காவிரிப் பிரச்சினை பற்றிய கோரிக்கையையும் தந்து விவாதித்து இருக்கின்றேன். "இதிலே ஐக்கிய முன்னணி அரசு எடுத்த அதே நிலையைத் தான் நீங்களும் தொடர்ந்து பின்பற்ற வேண்டும், இல்லாவிட்டால், அது தமிழகத்திற்கு, தமிழக விவசாயிகளுக்குப் பேராபத்தாக முடியும்" என்பதை அவரிடத்திலே வலியுறுத்திக் கோரிக்கையாகவும் கொடுத்து இருக்கிறேன். நேரிலும் பேசிவிட்டு வந்திருக்கின்றேன்."

ஆனால், தற்பொழுது பிரதமர் அவர்கள் இந்தத் திட்டத்தை இறுதியாக்குவது குறித்து சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்களின் கூட்டத்தை 6.8.1998ஆம் நாளான்று புதுடெல்லியில் கூட்டியுள்ளதைத் தாங்கள் அனைவரும் அறிவீர்கள். இதன் முன்னோடியாக மத்திய அமைச்சரவைச் செயலர், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் தலைமைச் செயலர்களது கூட்டத்தை 29.7.1998 ஆம் நாளன்று கூட்டினார்.

**முக்கியமான மாற்றங்கள்**

இக்கூட்டத்தில் ஒரு திருத்திய வரைவுத் திட்டத்தின் நகல் அளிக்கப்பட்டது. அதன் நகலும் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்திய வரைவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான மாற்றங்கள் பற்றி மட்டும் இத்தருணத்தில் எடுத்துக்கூற விழைகிறேன்.

## பவளவிழாப் பரிசு !

"எனக்கும் வாஜ்பாய்க்கும் கொள்கையிலே பல கருத்து மாறுபாடுகள் இருக்கலாம். இலட்சியத்திலே பல கருத்து மாறுபாடுகள் இருக்கலாம். இன்னும் சொல்லப்போனால் அது அடிப்படை வேறுபாடுகளாகக் கூட இருக்கலாம். ஆனால், நான் எப்போதுமே வாஜ்பாய், அத்வானி போன்றவர்களைத் தனிப்பட்ட முறையில் மதிப்பவன். அவருடைய ஆட்சியை மதிக்கிறேனா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், அந்த ஆட்சி நடத்தினாலும், நடத்தா விட்டாலும் வாஜ்பாய், அத்வானி போன்றவர்களை நான் என்றைக்கும் மதிப்பவன்.

கொடுத்த வாக்குறுதியைத்தான் வாஜ்பாய் மதிப்பார் என்பதற்கு அடையாளமாக இந்த நல்ல செய்தி, 205 டி.எம்.சி. தண்ணீர் தரப்படும் என்ற நல்ல செய்தி கிடைத்திருக்கிறது. இதைத் தொடர்ந்து முழுமையான செய்தி. முடிவான செய்தி வரக்கூடும் என்பதைத் தெரிவித்து, இயற்கை தமிழன்னை, தமிழர்களாகிய நீங்கள் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களாகிய நீங்கள், கர்நாடகத்து மக்கள், கேரளத்து மக்கள், புதுவை மக்கள் அத்தனை மக்களும் சேர்ந்து கருணாநிதிக்கு அளித்த பவளவிழா பரிசு என்று எண்ணி மகிழ்ச்சி யடைகின்றேன்.

- 10-8-98 அன்று நடைபெற்ற மொரப்பூர் நிகழ்ச்சியில் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

அதாவது, காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் ஆணையம் அமையும். அதன் ஆணையை உரிய முறையில் எந்த ஒரு மாநிலமும் செயலாக்கம் செய்யாவிட்டால், காவிரி நதியிலுள்ள நீர்த்தேக்கங்களின் இயக்கத்தையும், பராமரிப்பையும், ஏற்படுத்தப்படவுள்ள ஆணையம் தன்வசம் எடுத்துக்கொண்டு தேவைப்படும் காலம் வரை இயக்கி வரும் என்ற விதி வகுக்கப்படும் - என்பதாகும்.

கர்நாடகா மற்றும் கேரளா அந்த விதியை நீக்கவேண்டும் என்று கூறியுள்ளன. இந்த விதி நமக்குச் சாதகமாக அமைந்துள்ள போதிலும், நாம் மாநில சுயாட்சியைத் தொடர்ந்து வற்புறுத்தி வருவதாலும், அரசியலமைப்புப்படியும் இந்த விதியை இத்திட்டத்திலிருந்து நீக்குவதற்கு நாம் இசைவளிக்கலாமா? என்று விவாதிக்கலாம்.

இரண்டாவதாக, காவிரி நதிநீர் ஆணையத்தின் முடிவுகளை மறுபரிசீலனை செய்ய திருத்திய வரைவுத் திட்டத்தில் மத்திய நீர் ஆதார அமைச்சரைத் தலைவராகக் கொண்டு, சம்பந்தப்பட்ட மாநில முதலமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு பரிசீலனைக் குழுவை (Review Committee) நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முக்கியமான இனங்களில் எந்த ஒரு மாநில அரசிடம் இருந்து விண்ணப்பம் வரப்பெற்றாலும் இந்தக் குழுவின் தலைவர் ஆணையம் பிறப்பித்த முடிவின்மீது இடைக்காலத் தடையை வழங்கலாம். இவ்வாறு அளிக்கவிருக்கும் அதிகாரத்தால் நமது மாநிலத்துக்குப் பாதகம் ஏதாவது ஏற்படுமோ என்ற அச்சம் எழுகிறது.

மேலும் மறுபரிசீலனைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொண்டால் மட்டுமே ஆணையம் எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்யலாம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும் என்பது நடைமுறையில் சாத்தியமற்றதாக அமையக்கூடும்.

எனவே கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலோ அல்லது இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்களிப்பின்படியோ முடிவு செய்யலாம். எனவே, இந்த இனங்கள் குறித்தும் விவாதிக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

தற்பொழுது பிரதமர் கூட்டியுள்ள இக்கூட்டம், உச்ச நீதிமன்றத்தின் முன் நடைபெறுகின்ற வழக்கின் தொடர்ச்சியாக இருப்பதால், இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தமிழகத்தின் நிலையைப் பிரதமரின் முன் எடுத்துரைக்கும் வாய்ப்பைப் பெறலாமா - அல்லது வேண்டாமா - என்பது குறித்தும் தங்களின் மேலான கருத்துக்களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்."

- இவ்வாறு கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

### நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

- இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கியத் தீர்மான விவரம் வருமாறு :

***இந்தியப் பிரதமர் 6-8-1998 அன்று புதுதில்லியில் கூட்டியிருக்கும் கூட்டம் உச்ச நீதிமன்றத்தின் நடவடிக்கைகளின் தொடர்ச்சி யென்பதாலும், காவிரி நடுவர் மன்றத்தின் 25-6-1991 நாளிட்ட ஆணையைச் செம்மையான முறையில் செயலாக்கும் பொருட்டு, வரைவுத் திட்டத்தை இறுதிசெய்து, மத்திய அரசின் அரசிதழில் வெளியிட மேற்கொள்ளப்பட்டுள்ள சீரிய முயற்சி என்பதாலும் தமிழ்நாடு முதலமைச்சர் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்; மற்றும் காவிரி நடுவர் மன்றத்தின் 25-6-1991 நாளிட்ட ஆணையை மிகச் சீரிய முறையில் நிறைவேற்றும் பொருட்டு, மத்திய அரசு வகுத்துள்ள திட்டத்தை இறுதியாக்கி அரசிதழில் வெளியிட உரிய - மற்றும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அடிப்படையில் நடவடிக்கைகளை முதலமைச்சர் மேற்கொள்ளலாம்.***

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட 41 கட்சியினரின் ஒருமனதான ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### முதல்வர் நிறைவுரை

காவிரி நீர்ப் பிரச்சினை - அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய நிறைவு உரை :

அன்பிற்குரிய அனைத்துக் கட்சித் தலைவர்களே,

காலையிலிருந்து இதுவரையில் உணவைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல், எல்லா மக்களுக்கும் தமிழகத்திலே உணவு வேண்டும் என்பதற்கான காவிரிப் பிரச்சினை பற்றி விரிவாகப் பேசியிருக்கிறோம். இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மிக முக்கியமாகக் கருத்து அறிவிக்கப்பட்ட இரண்டு விஷயங்கள் - கடந்த கால மத்திய ஆட்சியிலே வகுக்கப்பட்ட (ஸ்கீம்) திட்டத்தைப் பற்றி ஒன்று; அவைகளைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேசி ஒரு முடிவெடுக்கப் பிரதமர் அழைத்துள்ள இந்த நிலையில் உடன்பட்டு அங்கே செல்வதா? வேண்டாமா? என்பது மற்றொன்று.

இடையிலே எவ்வளவோ கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும் கூட, பிரதானமாக இந்த இரண்டு விஷயங்கள் தான் முன் நிற்கின்றன.

இதிலே முதலமைச்சர் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் - வேண்டாமென்றும் கருத்துக்கள் இங்கே கூறப்பட்ட போதும் - ஒரு பொதுப்பிரச்சினையில் நண்பர் ஜெகவீரபாண்டியன் குறிப்பிட்டதைப் போல - எண்ணிக்கையை மாத்திரம் வைத்து ஒரு முடிவெடுக்கக்கூடாது என்ற போதிலுங்கூட - இந்த முடிவு எடுப்பதால் ஏற்படும் சாதக, பாதகங்களைப் பற்றிச் சற்று நாம் சிந்திக்கவேண்டும்.

***எண்ணிக்கையை மாத்திரம் வைத்து முடிவெடுக்க வேண்டுமா, வேண்டாமா என்று சிந்திக்கும் நேரத்தில் - சென்றால் ஏற்படக்கூடிய விளைவுகள்தான்*** முக்கியம். இங்கே பேசிய சிலர் "செல்வதால் என்ன சாதகம்" ஏற்பட்டு விடுமென்று கேட்டார்கள். அதையே திருப்பிக் கேட்டால் "போவதால் என்ன பாதகம்" ஏற்பட்டுவிடும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கலாம். ஏனென்றால் இனிமேல் புதிதாக இழப்பதற்கு ஒன்றுமில்லை. பெறுவதற்கு ஏதாவது இருந்தால் - செல்வதால் பயன் ஏற்படக்கூடும். சென்று இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களை அழுத்தந்திருத்தமாக எடுத்துவைத்து, அதற்கு உடன்படவில்லையென்றால் - நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது, இதற்குத் தான் அனைத்துக் கட்சியிலே உள்ளவர்களில் சிலர் செல்ல வேண்டாமென்று அப்போதே சொன்னார்கள். நான் கேட்கவில்லை; 'என் புத்திக்கு வேண்டும்' என்று சொல்லிவிட்டுத் திரும்பலாமே தவிர, செல்லாமலே இருந்து - ஆகா, நீ வந்திருந்தால் மலையைப் புரட்டியிருக்கலாம்; கடலையே வற்ற வைத்திருப்போம், நீ வராததால்தான் எல்லாம் கெட்டுவிட்டது - என்று சொல்கின்ற அந்தப் பழிக்கு நாம் ஆளாக வேண்டுமா? - என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

### முதன் முதலாகப் பிரதமர்

***இன்னொன்று, இந்த முப்பதாண்டுக் காலமாக நடைபெறுகின்ற - பேச்சுவார்த்தை - இந்த ஒப்பந்தத்தைப் பற்றிய பிரச்சினைகளில் - முதன்முதலாகப் பிரதமரே முன்னின்று நடத்துகின்ற முதல் கூட்டம், இந்தக் கூட்டம்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. ஒவ்வொரு முறையும், பிரதமருடைய ஆலோசனையோடு மத்திய அரசிலே உள்ள யாராவது ஒரு முக்கியமான அமைச்சர்தான் கலந்துகொண்டு, மூன்று நான்கு மாநில முதலமைச்சர்களையும் அமர வைத்துக்கொண்டு - அங்கே தங்கள் கருத்துக்களை எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த முறைதான் - முதல் தடவையாக - ஏற்கெனவே ஒரு முறை ஏற்பட்ட பூசலுக்குப் பிரதமர் நரசிம்மராவ் தலையிட்டு அதைத் தீர்த்துவைத்தார் என்றாலுங்கூட - இப்படி சம்பந்தப்பட்ட முதல் அமைச்சர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி, அடிப்படை ஒப்பந்தத்தைப் பற்றி யாருமே பேசியதில்லை. இப்பொழுது அந்த ஒப்பந்தத்தை எப்படி நிறைவேற்றுவது என்பதைப் பற்றிப் பேசுகின்ற காலக் கட்டம். அதற்காக நம்மை அழைத்திருப்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.***


நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு - அதாவது மத்திய அரசு ஏற்றுக்கொண்டு அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதைப் பற்றி வகுக்கப்பட்டிருக்கின்ற அந்தத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள சில நிறைகுறைகளைக் கர்நாடக அரசும் கேரள அரசும் தனித்தனியாகவும் - கர்நாடக அரசும், கேரள அரசும் சேர்ந்தும் சொல்கின்ற சில திருத்தங்களைத் தமிழகம் ஏற்றுக் கொள்கிறதா என்பதைக் கேட்கவும் - தமிழகம், இப்படி எல்லா உறுப்பினர்களும் என்றிருப்பதைத் திட்டத்தில் மாற்ற வேண்டுமென்று சொல்கிறோமல்லவா? இதை அந்த இரண்டு மாநிலங்களும் ஏற்றுக் கொள்கிறதா என்பதை அறிந்துகொள்ளவும்தான் இந்தக் கூட்டத்தை அவர்கள் கூட்டியிருக்கிறார்கள். எனவே இங்கு கருத்துக் கூறியவர்களிலே பெரும்பான்மை என்ற அடிப்படையிலே அல்ல; உரிய காரணங்கள் என்ற அடிப்படையில் - நான் பெரும்பான்மை, சிறுபான்மை என்று பார்த்து - சிறுபான்மையோர் சொன்னதை ஏற்கவில்லை என்கின்ற அலட்சியப் புத்தியோடு, ஆணவத்தோடு இந்தக் கருத்தைச் சொல்லவில்லை. பொதுவாகத் தமிழக நலனை உத்தேசித்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அக்கூட்டத்தில் உரையாற்றினார்.

### பிரதமர் கூட்டம்

காவிரிப் பிரச்சினை குறித்து, மத்திய அரசின் வரைவுத் திட்டத்தை ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதிக்குள் வெளியிடுமாறு ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் ஆணையிட்டிருந்தது.


அதனடிப்படையில் விவாதிக்க தமிழ்நாடு, கர்னாடகம், கேரளம், புதுவை ஆகிய 4 மாநில முதல்வர்களின் கூட்டத்தைப் பிரதமர் கூட்டியிருந்தார்.



6.8.98 அன்று, புதுடில்லியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு இந்தியப் பிரதமரே தலைமை தாங்கினார். இதுவரையில், இந்தப் பிரச்சினை பற்றி மத்திய அரசு நடத்திய கூட்டங்களில் அந்தந்தத்துறை அமைச்சர்கள் மட்டும் தான் கலந்து கொண்டார்களே தவிர, பிரதமரே கலந்துகொண்டது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

காவிரிப் பிரச்சினையில், நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவது பற்றி, உச்ச நீதி மன்றம் தெரிவித்த அறிவுரையின்படி - மாறுபாடுகளைக் குறைத்து, ஒப்புக் கொள்ளக்கூடிய முடிவுகளை எடுப்பதற்காக நடந்த இக்கூட்டத்தில் - பிரதமர் அழைப்பின்பேரில் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்று கலந்துகொண்டார்.

*காவிரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாகப் பிரதமர் வாஜ்பாய் கூட்டிய முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளவும், தமிழ்நாட்டிற்குத் திட்ட ஒதுக்கீடு பற்றித் திட்டக்குழுத் துணைத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தவும் புதுடில்லிக்கு ஆகஸ்ட் 5 ஆம் தேதி மாலை வருகைதந்த முதல்வர் கலைஞர் அவர்கள்*



*3 நாட்கள் அங்கேயே தங்கி, பேச்சுவார்த்தையில் வெற்றிகரமான நல்ல முடிவு பெற்றுக்கொண்ட பின்பே 8 ஆம் தேதியன்று சென்னை திரும்பினார்.*

டில்லியில் நடைபெற்ற கூட்டம் பற்றிய விவரம் வருமாறு :

புதுடெல்லியில் பிரதமர் ஏ.பி.வாஜ்பாய் முன்னிலையில் 7.8.98 காலை காவிரி நதிநீர் தாவா பற்றிய பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றது. அதில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் முதல்வர்கள் கலந்துகொண்டனர். இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதல்வர்களால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

## இடைக்கால ஆணையின்படி 205 டி.எம்.சி தண்ணீர் விட முடிவு

காவிரி நதிநீர் ஆணையத்தின் இடைக்கால ஆணையையும், பின் அது தொடர்பான பிற ஆணைகளையும் செயல்படுத்துவதற்கு ஒரு திட்டம் வகுக்கப்படும். இடைக்கால ஆணையின்படி, 205 டி.எம்.சி. தண்ணீர் மேட்டூர் அணைக்கு விடுவிக்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தின்படி, பிரதமர், காவிரி பாயும் 4 மாநிலங்களின் முதல்வர்களும் அடங்கிய ஆணைக்குழு அமைக்கப்படும். பிரதமர் அவர்கள் இந்த ஆணைக்குழுவின் தலைவராக விளங்குவார். இக்குழு தனது செயல்முறைகளுக்கான விதிகளையும், செயல்படுத்தும் முறைகளையும் உருவாக்கும்.

ஒரு கண்காணிப்புக்குழு அமைக்கப்படும். இந்த கண்காணிப்புக் குழுவின் பங்கு செயல்முறைகள், கடமைகள், அதிகாரங்கள் ஆகியன மீது கூட்டத்தில் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. தமிழகமும், பாண்டிச்சேரியும் இடைக்கால ஆணையைச் செயல்படுத்தும் அதிகாரம் இந்தக் கண்காணிப்புக் குழுவுக்கு வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்தன. ஆனால், கர்நாடக மாநிலம் அக்கருத்தினை ஏற்கவில்லை. ஆணைக் குழுவிற்கு ஆலோசனை வழங்கும் அமைப்பாக மட்டுமே கண்காணிப்புக் குழு செயல்படவேண்டும் என அது வலியுறுத்தியது. கேரள மாநிலம் இப்பிரச்சினை மீது, நடுநிலை வகித்தது. ஆகையால், மத்திய அரசின் அமைச்சரவைச் செயலர் தலைமையில், காவிரி பாயும் மாநிலங்களின் தலைமைச் செயலர்களை உறுப்பினராகக் கொண்டு ஒரு வரைவுக்குழு அமைக்கப்பட்டு, அக்குழு இப்பிரச்சினை குறித்து ஆராய்ந்து, கண்காணிப்புக் குழுவின் பங்கு, செயல்முறைகள், கடமைகள், அதிகாரங்கள் ஆகியவற்றை முடிவு செய்யும்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இக்கூட்டத்தில் சுமுகத் தீர்வு காண வழிவகுத்த பிரதமர் அவர்களுக்கும், திட்டக்குழுவின் துணைத் தலைவர் ஜஸ்வந்த் சிங் அவர்களுக்கும், மத்திய மாநில அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும், சென்னையில் 3.8.98 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு, ஆதரவு அளித்த அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் தமிழக முதலமைச்சர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

## அரசிதழில் செயல்திட்டம்

பிரதமர் வாஜ்பாய் தலைமையில் புதுடில்லியில் நடந்த மாநில முதல்வர்களின் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களின் அடிப்படையில் செயல்திட்டம் இறுதி செய்யப்பட்டது. "காவிரி நீர்" (நடுவர் மன்றத்தின் 1991 ஆணை மற்றும் அது தொடர்பான ஆணைகளைச் செயல்படுத்துதல்) திட்டம் என்று அத்திட்டம் குறிப்பிடப்படும். நடுவர் மன்ற இடைக்கால உத்தரவைச் செயல்படுத்த மத்திய அரசுக்கு ஆணையிடுமாறு தமிழகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவைத் தொடர்ந்து, 12.8.98க்குள் அத்திட்டத்தை இறுதி செய்யுமாறு மத்திய அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளம், புதுவை ஆகிய மாநில முதலமைச்சர்கள் மாநாட்டை மாண்புமிகு இந்தியப் பிரதமர் கூட்டிக் கலந்துபேசி நல்லதோர் முடிவெடுத்தார்.

அதன்படி, காவிரி நடுவர்மன்ற இடைக்கால உத்தரவைச் செயல்படுத்துவதற்கான செயல்திட்டம், மத்திய அரசின் அரசிதழில் 11.8.98 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. இது உடனடியாக அமல்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றத்திற்கும் இம்முடிவு முறைப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுக் காலமாக எட்டப்படாதிருந்த இந்த நல்ல முடிவு கிட்டச் செய்த கலைஞருக்கு அனைத்துக்கட்சித் தலைவர்களும் புகழாரம் சூட்டினர்.

## உச்ச நீதிமன்ற முடிவு

உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தொடர்ந்து இருந்து காவிரி நீர் வழக்கு கடந்த 12-ந் தேதி விசாரணைக்கு வந்தபோது மத்திய அரசு வக்கீல் சோலி சோரப்ஜி, புதிய வரைவு திட்டத்தை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். தலைமை நீதிபதி பூஞ்ச்சி தலைமையில் 3 நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் அந்த வரைவுத் திட்டத்தை, 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சட்ட பெஞ்சின் முடிவுக்கு அனுப்பி வைத்தனர். இந்த வழக்கைப் பற்றி அரசியல் சட்ட பெஞ்ச் இறுதி முடிவு எடுக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த வழக்கு 17.8.98 அன்று அரசியல் சட்ட 'பெஞ்ச்' முன்பு விசாரணைக்கு வந்தது. தலைமை நீதிபதி எம்.எம்.பூஞ்ச்சி, நீதிபதிகள் எஸ்.சி. அகர்வால், ஏ.எஸ். ஆனந்த், எஸ்.பி.பருச்சா, ஏ.பி. மிஸ்ரா ஆகிய 5 பேர் இதை விசாரித்தனர். வரைவுத் திட்ட நகல் அவர்முன் தாக்கல் செய்யப்பட்டது.

காவிரிப் பிரச்சினையில் உடன்பாடு ஏற்பட்டு விட்டதால் தமிழக அரசு தாக்கல் செய்து இருந்த வழக்கை முடிவுக்கு கொண்டு வரலாமா என்று 4 மாநில வக்கீல்கள் மற்றும் மத்திய அரசு வக்கீல்களிடம் நீதிபதிகள் கருத்து கேட்டனர்.

அதற்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

## நல்ல தீர்ப்பு

இதைத் தொடர்ந்து தமிழக அரசின் வழக்கை முடிவுக்குக் கொண்டு வருவதாக நீதிபதிகள் தீர்ப்புக் கூறினார்கள். தீர்ப்பு விவரம் வருமாறு :-

மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர் தாவா சட்டம் 6-வது பிரிவின் கீழ் காவிரி நடுவர் மன்ற இடைக்கால உத்தரவை அமல்படுத்துவதற்கான வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் அரசிதழிலும் வெளியிடப்பட்டு விட்டது. இதனால் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து விட்டன.

வரைவுத் திட்டம் அரசிதழில் வெளியிடப்பட்டு விட்டதால் இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்று தமிழக அரசின் வக்கீல் பராசரன் கூறியுள்ளார். கர்நாடகா, கேரளா, புதுச்சேரி மாநிலங்களும் இதில் தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்துள்ளன.

அதேபோல அட்டார்னி ஜெனரல் (மத்திய அரசு வக்கீல்) சோலி ஜே.சோரப்ஜியும் ஆட்சேபணை இல்லை என்று கூறி இருக்கிறார். எனவே முறைப்படி இந்த வழக்கு முடிவுக்கு வருகிறது.

இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டு இருந்தது.

நீதிபதிகள் வேறு உத்தரவுகள் ஏதும் பிறப்பிக்கவில்லை.

இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து மத்திய அரசின் புதிய வரைவு திட்டத்தை சுப்ரீம் கோர்ட்டின் அரசியல் பெஞ்ச் ஏற்றுக் கொண்டு தனது அங்கீகாரத்தை வழங்கி உள்ளது. கடந்த 7 ஆண்டுகளாக நீடித்து வந்த காவிரி நீர் நடுவர் மன்ற உத்தரவு பிரச்சினையும் இவ்வாறு ஒரு முடிவுக்கு வந்தது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பெருமகிழ்ச்சி தெரிவித்தார்.

"இது, சுதந்திரத் திருநாள், பொன்விழா நிறைவு விழாவில் கிடைத்த நல்ல செய்தியாகும்" என்று, சென்னையில் நடைபெற்ற சுதந்திரப் பொன்விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய கலைஞர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியும், இதற்குத் துணையிருந்த அனைவருக்கும் நன்றியும் தெரிவித்தார்.

"நான்காவது முறையாகத் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள கலைஞர் அவர்களின் புகழ் மகுடத்தில், இந்த ஏற்பாடு ஒரு நன் முத்தாகப் பதிக்கப்பட்டுச் சுடர்விடுவதாகும்' என நாடும், நன்னெஞ்சங்களும் அவரைப் பலபடப் போற்றிப் புகழ்பாடுகின்றன !

- பி.எல்.ராஜேந்திரன்

# உயிரியல் முறையில் ஆரஞ்சு - எலுமிச்சை வேர் - நூற்புழுக் கட்டுப்பாடு

தமிழ்நாட்டில் ஆரஞ்சு மற்றும் எலுமிச்சை பயிரிடும் எல்லாப் பகுதிகளிலும் இந்த வேர் நூற்புழுவின் பாதிப்பு, பரவலாகக் காணப்படுகின்றது. இந்த வேர் நூற்புழுவைக் கட்டுப்படுத்த சூடோமோனா ஃப்ளூரசன்ஸ் என்ற பயிர்வளர்ச்சியை ஊக்குவிக்கும் பாக்டீரியா பயனுள்ளதாக இருப்பது ஆராய்ச்சிகள் மூலம் அறியப்பட்டது.

இந்த பாக்டீரியா கலவையை, மரத்திற்கு 20 கிராம் வீதம் நான்கு மாதத்திற்கு ஒரு முறை மரத்தைச் சுற்றி 15 செ.மீ. ஆழத்தில், 50 செ.மீ. இடைவெளியில், மணலுடன் கலந்து இடவேண்டும். இந்த பாக்டீரியா புதிதாகத் தோன்றும் வேர்களின் மேல் நன்கு வளர்ந்து, நூற்புழுக்களை வேர்களில் உட்புகாமல் தடுக்கின்றன. மேலும் இந்த பாக்டீரியாவிலிருந்து உருவாகும் பல வேதிப்பொருட்கள் மண்ணில் உள்ள நூற்புழு முட்டைகள் அழிந்து போகவும் காரணமாய் இருக்கின்றன.

இதனால், நூற்புழுக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து, ஆரஞ்சு மற்றும் எலுமிச்சையில் இந்நூற்புழு பாதிப்பினால் தோன்றிய வெளிறிய, மஞ்சள் நிறத்துடன் இருந்த இலைகள் 20 சதவிகிதமாகக் குறைந்து காணப்பட்டன. இந்த பாக்டீரியா கலவையை, ஒரு மரத்திற்கு வைக்க ஆகும் செலவு ஆண்டிற்கு ரூ.8.10 மட்டுமே. இந்த சூடோமோனாஸ் ஃப்ளூரசன்ஸ் பாக்டீரியா கலவையினை, கிலோ ஒன்றுக்கு ரூ.45/- என்ற விலையில், பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை - 3 என்ற முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

- எஸ். ராஜேஸ்வரி, எ.சாந்தி மற்றும் எம்.பி.மணி, நூற்புழுவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை 641 003.

# தியாகசீலர் தீர்த்தகிரி



தருமபுரி மாவட்டம் - அரூர் மாவட்டத்தில் அமைந்திருக்கிறது தீர்த்த மலை; ஏராளமான கோயில்கள் இங்குள்ளன.

'தக்கனின் யாகத்தை அழித்த பிறகு, இறைவன் தவம்புரியத் தேர்ந்தெடுத்த இடம் இது; அதனால்தான் இந்த மலையே லிங்க வடிவில் இருக்கிறது' என்கிறார்கள் பக்தர்கள்.

என்றும் வற்றாத ஐந்து தீர்த்தங்கள் - அதாவது, அருவிகள் இந்த மலையில் உண்டு; இதில் நீராடினால் பல நோய்களும் தீருமாம்; சொல்கிறார்கள். மலையடிவாரக் கோயிலின் முன் மண்டபம், பிற்காலச் சோழ மன்னர்களில் பெரும்புகழ் பெற்றவனான முதலாம் இராசேந்திர சோழனால் புதுப்பிக்கப்பட்டது.

இத்தனைப் பெருமை மிக்க தீர்த்தகிரி உள்ள மாவட்டம் என்பதாலேயே பலருக்கும் இப்பகுதியில் 'தீர்த்தகிரி' என்று பெயர் சூட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

இந்தப் பெயரில் - தருமபுரி மாவட்டம் அன்னசாகரத்தில் பிறந்து வாழ்ந்த தேசியவாதி தீர்த்தகிரி முதலியார் குறிப்பிடத்தக்கவர்; இந்திய விடுதலைப்போரில் ஈடுபட்டு ஒன்பதாண்டுகாலச் சிறை தண்டனை பெற்றவர்.

மூதறிஞர் ராஜாஜியோடும் - தமிழ்த்தென்றல் திருவி.க., கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., பாலகங்காதார திலகர், பாரதியார், சுப்பிரமணிய சிவா, வாஞ்சிநாதன் ஆகியோருடனும் நெருங்கிய தோழமை கொண்டிருந்தார் தீர்த்தகிரியார்.

சுவாமி விவேகானந்தரையே தருமபுரிக்கு அழைத்துவந்து சொற்பொழிவாற்றச் செய்த சிறப்பினர், இவர். காந்தியடிகளையும், முதன்முதல் இவ்வாறே இவர்தான் அவ்வூருக்கு அழைத்துவந்தார்.


காந்தியார் மீதிருந்த மாறாத பற்றுதலால் தன் மகளுக்கே 'காந்திமதி' என்று பெயரிட்டவர் தீர்த்தகிரியார்.

பேச்சிலும், செயலிலும் மிக வேகமாக இருந்தவர் இவர்; இதன் காரணமாகவே, சுப்பிரமணிய சிவா இவருக்கு 'எம்டன்' என்று பெயர் வைத்திருந்தார்.



தருமபுரி நகரமன்றத் திடல், 'தியாகி தீர்த்தகிரியார் சதுக்கம்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. தருமபுரியில் கைத்தறி நெசவாளர் குடியிருப்புப் பகுதியில் தியாக சீலர் தீர்த்தகிரியாரின் மார்பளவுச் சிலையொன்று, அப்போதைய குடியரசுத் துணைத்தலைவராக இருந்த மேதகு ஆர்.வெங்கட்ராமன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

- பி.எல்.ஆர்.



# காவிரிப் பிரச்சினை :
# மத்தியஅரசுத் திட்டத்திற்கு - உச்சநீதிமன்றம் ஒப்புதல்

காவிரிப் பிரச்சினையில் பிரதமர் தலைமையில் 4 மாநில முதல்வர்கள் சுமுகத் தீர்வு கண்டு உருவாக்கப்பட்ட நடுவர்மன்ற இடைக்கால ஆணையை அமல்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்ட மத்திய அரசின் திட்டத்திற்கு உச்சநீதிமன்றத்தின் அரசியலமைப்பு பெஞ்ச் 17-8-98ல் ஒப்புதல் அளித்தது.

கடந்த 12ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில், காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை அமல்படுத்த உத்தரவிடக் கோரி, தமிழக அரசால் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு வந்தபோது, பிரதமர் வாஜ்பாய் தலைமையில் 4 மாநில முதலமைச்சர்கள் நடத்திய பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து இடைக்கால ஆணையை அமல்படுத்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, அது அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது என்ற செய்தியை அட்டார்னி ஜெனரல் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்தார். மேற்கொண்டு இந்த வழக்கில் விசாரிப்பதற்கு எதுவும் உள்ளதா என்பதைக் கண்டறிய 5 நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு பெஞ்ச் ஆகஸ்ட் 17ஆம் தேதி ஆராயும் என்று உச்சநீதிமன்றம் அறிவித்திருந்தது.

**விசாரணைக்கு எடுக்கப்பட்டது**

அதன்படி, தலைமை நீதிபதி எம்.எம்.புஞ்சி தலைமையில் நீதிபதிகள் எஸ்.சி.அகர்வால், ஏ.எஸ்.ஆனந்த், எஸ்.பி.பருச்சா, ஏ.பி.மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அரசியலமைப்பு பெஞ்ச் மேற்குறிப்பிட்ட நாளில் மத்திய அரசின் திட்டத்தை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

அப்போது தமிழ்நாட்டுக்குக் கர்நாடகம் ஆண்டுக்கு 205 டி.எம்.சி.தண்ணீர் அளிக்கவேண்டும் என்று 1991ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் தேதி காவிரி நடுவர்மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணையை நிறைவேற்றுவதற்காகத் தயாரிக்கப்பட்டு, மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டத்தின் 6வது பிரிவின்கீழ் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள மத்திய அரசின் திட்டத்திற்கு உச்சநீதிமன்ற அரசியலமைப்பு பெஞ்ச் ஒப்புதல் அளித்தது.

திட்டம் அரசிதழில் வெளியிடப்பட்ட பிறகு விசாரிப்பதற்கு எதுவும் இல்லாததால் வழக்கு முடித்துவைக்கப்படுவதாக அரசியலமைப்பு பெஞ்ச் அறிவித்தது. அது வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது:

*தமிழ்நாட்டின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் கே.பராசரன், திட்டம், சட்டத்தின் 6(ஏ)வது பிரிவின்கீழ் அரசிதழில் ஆகஸ்ட் 11ஆம் தேதி வெளியிடப்பட்டு விட்டதால் வழக்கை முடித்துவிடலாம் என்று யோசனை கூறினார்.*

**பிரதிவாதிகளின் எதிர்ப்பும் இல்லை**

*பிரதிவாதிகளான கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி மாநிலங்களும் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. அதேபோல, அட்டர்னி ஜெனரல் சோலிஜேசோரப்ஜியும் எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை; எனவே, வழக்கு முடித்து வைக்கப்படுகிறது.*

- இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

**உச்சநீதிமன்றத் தீர்ப்பு**
**முதல்வர் கலைஞர் மகிழ்ச்சி**

காவிரி நடுவர்மன்ற இடைக்கால ஆணை தொடர்பாக உச்சநீதிமன்றம் அறிவித்துள்ள தீர்ப்புக்கு மகிழ்ச்சி தெரிவித்து, முதல்வர் கலைஞர் அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு:

' ஏழாண்டு காலமாக முடிவு காணப்படாமல் இருந்துவந்த காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை அமல்படுத்துவது குறித்த திட்டம் பற்றி பிரதமர் முன்னிலையில் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி ஆகிய நான்கு மாநில முதலமைச்சர்களும் செய்துள்ள உடன்பாட்டுக்கு 17-8-98 அன்று உச்சநீதிமன்றம் முத்திரை குத்தியுள்ளது. என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.'

- இவ்வாறு முதல்வர் **கலைஞர்** அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்.

# "ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் திட்டமிட்டபடி தொடங்கி நிறைவேற்றப்படும்"

**- முதலமைச்சர் கலைஞர் உரை.**



"தருமபுரி மாவட்டத்தில் தமிழக அரசின் சார்பில் நலிந்தோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற இந்த விழா நிகழ்ச்சியில் எனக்கு முன்னால் பேசியவர்களெல்லாம் எடுத்துக் காட்டியதைப்போலவும்,மாவட்ட ஆட்சித்தலைவர் தன்னுடைய உரையிலே சுட்டிக்காட்டியதைப் போலவும் 102 கோடியே 63 இலட்சத்திற்கு திட்டங்களுக்கு ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்ட, நிறைவேறிய திட்டங்களைத் திறந்துவைக்கவும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவுமாக ஒதுக்கப்பட்டு அந்த இனிய விழா நிகழ்ச்சி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## இதை நலத்திட்ட உதவி மாநாடு என்றால் பொருத்தமாக இருக்கும்

நான் இங்கே குழுமியிருக்கின்ற உங்களைக் காணுகின்றேன். இந்தப் பந்தல் நிரம்பி வழிந்து வெளியிலேயும் பல்லாயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்து நின்று ஏறத்தாழ ஒரு மாவட்ட மாநாட்டைப்போலக் காட்சியளிக்கின்ற இந்தப் பாங்கினைக் காணும்போது - இதை நலத்திட்ட உதவி நிகழ்ச்சி என்று அழைப்பதை விட, தருமபுரி மாவட்டத்தில் நடைபெறுகின்ற நலத்திட்ட உதவி மாநாடு என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு மாத்திரம் 585 திட்டங்கள் 20 கோடியே 73 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு அவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளன; அதாவது, திறந்து வைக்கப்பட்டுள்ளன. 16 கோடியே 80 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் 19 ஆயிரத்து 791 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 65 கோடியே 8 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் 591 திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டப்படுகின்றன. எல்லோரையும் மேடைக்கு அழைத்து இந்த உதவிகளைத் தனித்தனியாக நேரடியாக இங்கே நான் தருவது என்றால் விடிந்துவிடும். எனவேதான் அடையாளத்துக் காகச் சில பேரை மட்டும் மேடைக்கு அழைத்து, அவர்களுக்கு இந்த உதவிகளை வழங்கி இருக்கின்றோம். ஏனையோர் தங்கியிருந்து அதிகாரிகள் மூலம் வழங்கப்படுகின்ற அந்த நிதி உதவிகளைப் பெற்றுச் செல்லவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுவாக ஒரு அரசு மக்களுடைய நலம் பேணுகின்ற அரசாக அமைந்திட வேண்டும் என்பதற்காகத்தான், மக்கள் தங்களுக்காக ஒரு அரசைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த நிலையில் இந்த அரசு - நான் நான்கு முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்று உங்களுக்குப் பணியாற்றுகின்றேன், ஊழியம் புரிகின்றேன் என்றாலும்கூட, நான்காவது முறையாக 96ஆம் ஆண்டு உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு சற்றொப்ப இந்த இரண்டரை அல்லது மூன்றாண்டு காலத்தில் என்னென்ன திட்டங்களை - பொதுவாகத் தமிழ்நாட்டிற்கும் - குறிப்பாகத் தருமபுரி மாவட்டத்திற்கும் வழங்கியிருக்கிறது, இன்னும் வழங்க இருக்கிறது என்பதனை விழா நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று இருக்கின்ற தம்பி முல்லைவேந்தன் மிக அழகாக, அடுக்கடுக்காக இங்கே எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

**வழங்கப்படும் உதவிகள் உரியவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும்**

திட்டங்களை அறிவிப்பது மாத்திரம் போதாது, அறிவிக்கப்பட்ட திட்டங்கள், வழங்கப்படுகின்ற உதவிகள், அதற்காகச் செய்யப்படுகின்ற செலவு இவைகளெல்லாம் உரிய பயனைத் தரவேண்டுமேயானால், அது உரியவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும். இல்லாவிட்டால், யாருக்குப் பலன் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்காமல், இடையிலே சில பேர் இந்தப் பலனை அனுபவித்துக்கொண்டு செல்வார்கள்.

உதாரணமாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சட்டமன்றத்தில் எடுத்துச் சொன்னார். அதை நினைவூட்ட விரும்புகின்றேன். "ஒரு பெரிய பனிக்கட்டியைக் கையிலே எடுத்து, அதைப் பக்கத்திலே இருப்பவருடைய கையிலே கொடுத்து 20 பேருடைய கையிலே தொடர்ந்து அதைக் கொடுத்து, 20வது நபருக்கு போய்ச் சேரட்டும் என்று சொன்னால், அந்தப் பனிக்கட்டி 20 கை மாறி 20வது கைக்குப் போய்ச் சேருகின்ற நேரத்தில் ஒரேயொரு துளி தண்ணீர்தான் மிஞ்சும். அதற்குள்ளாக அந்தப் பனிக்கட்டி கரைந்து போய் விடும். அப்படித் திட்டங்கள் இருக்கக்கூடாது. போடுகின்ற திட்டங்கள், வகுக்கின்ற திட்டங்கள், ஏழை எளிய மக்களை, சாதாரண மக்களை, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நலிந்த மக்களைப் போய்ச் சேரவேண்டும் என்பதிலே ஒரு அரசு, அதைப்போலவே அரசின் அதிகாரிகள் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்" என்பதை எடுத்து விளக்கினார்கள்.

அந்த அண்ணா காட்டிய வழியை இன்றைக்கும் பின்பற்றி இந்த அரசு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இத்தகைய விழாக்களில், உண்மையிலேயே நலிந்தோருக்கு, உண்மையிலேயே தேவைப் படுவோருக்கு உரிய உதவிகளை இந்த அரசு செய்துவருகிறது.

**உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தியதால் பட்டி தொட்டிகளில் மக்கள் பிரதிநிதிகள்**

அரசுப் பொறுப்பேற்றபோது நான் "இன்னும் சில நாட்களிலேயே உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறும்" என்று சொன்னேன். தேர்தல் நேரத்திலேயே, தேர்தல் வாக்குறுதியாக அதை வழங்கினேன். உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் உடனடியாக நடைபெற்றால்தான், அரசாங்கத் தினுடைய திட்டங்கள், அடிப்படை வசதிகள் கிராமப்புறத்திலே, பட்டிக்காட்டிலே, குப்பைக் காட்டிலே இருக்கின்ற எளிய மக்களுடைய தேவைகள் நிறைவேற ஆங்காங்கு மக்கள் பிரதிநிதிகள் தோன்றுவார்கள். அப்படி மக்கள் பிரதிநிதிகள் தோன்றினால், அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தங்களுடைய தேவைகளை அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லவும், அவர்கள் அதற்கு மேல்படியிலே உள்ளவர்களிடத்திலே எடுத்துச் சொல்லவும், அவர்கள் அதற்கு மேலே உள்ளவர்களிடத்திலே எடுத்துச் சொல்லவும், இறுதியாக அரசின் கவனத்திற்கு வரவும், அந்தத் திட்டங்கள் நிறைவேறவும் வாய்ப்பும், வழியும் ஏற்படும் என்று கூறி உடனடியாக உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை இந்த அரசு நடத்தியதன் பயனாக, இன்று மக்கள் பிரதிநிதிகள் ஆங்காங்கு பட்டி தொட்டிகளிலெல்லாம் பரவி இருப்பதை நாம் காணுகின்றோம். அவர்கள் மூலமாக இந்த உதவிகள் ஏழை, எளிய மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இங்கே ஒரு நூறு கோடி ரூபாய்க்குமேல் நடந்து முடிந்த பணிகளுக்காகவும், நடக்க வேண்டிய பணிகளுக்காகவும் செலவிடப் படுகின்றது என்றாலும்கூட, நான் மாவட்ட ஆட்சித் தலைவரையும், மற்ற அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கெனவே 585 திட்டங்கள் ஆரம்பித்து முடிவடைந்து திறந்துவைக்கப்பட்டு விட்டன. புதிதாக இன்றைக்கு 591 திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டப்படுகின்றன. விரைவில் நாட்டப்பட்ட அடிக்கற்கள் எல்லாம் கட்டடங்களாக உருவாவதற்குத் துணை நிற்கவேண்டும். ஏனென்றால் சில நேரங்களிலே நாட்டப்பட்ட அடிக்கற்கள் பல மாத காலம், ஏன் பல ஆண்டுக்காலம் அப்படியே நிற்பதுண்டு. அப்படி நிற்காமல் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அதிகாரிகள் உடனடியாகச் செயல்பட்டு அடிக்கற்கள் நாட்டப்பட்டவைகள் எந்தத் திட்டத்துக்காக அவை நாட்டப்பட்டனவோ அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**கிராமப்புற மாணவர்களுக்கு அனைத்துத் தொழிற்கல்லூரிகளிலும் இடஒதுக்கீடு**

இங்கே பேசிய அனைவரும் ஒன்றை மறவாமல் சுட்டிக்காட்டினார்கள். தம்பி துரைமுருகனும், தம்பி பொன்முடியும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும், கிராமப்புறத்திலே உள்ள மாணவர்களுக்கு 15% தொழிற்கல்வியிலே இடம் அளிக்கவேண்டும். அது மருத்துவக் கல்வியானாலும், பொறியியல் கல்வியானாலும், வேளாண்மைக் கல்வியானாலும், சட்டக் கல்வியானாலும் இந்த தொழிற்கல்விகளிலெல்லாம் 15% இடமளிக்க வேண்டும் என்ற புதிய முறையைக் கடந்த ஆண்டு இந்த அரசு அறிமுகப்படுத்தி, கடந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியிலே மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டம் இந்த ஆண்டு எல்லாத் தொழிற் கல்லூரிகளுக்கும் விரிவாக்கப்பட்டு சிறந்த முறையிலே எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றுள்ளது.

அதைப்போலவே ஏழை எளியோருடைய வீடுகளிலே உள்ள பிள்ளைகள் படிக்கவேண்டும் என்பதற்காக, கிராமப்புறத்திலே உள்ள பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூட வசதியில்லை, கல்லூரி வசதியில்லை என்பதற்காக ஏராளமான திட்டங்களை இந்த இரண்டாண்டு காலத்திலே வகுத்து அதற்காகப் பல கோடி ரூபாயை இந்த அரசு செலவழித்துக் கொண்டிருக்கிறது.

என்னுடைய சொந்த அனுபவத்தையே நான் சொல்லவேண்டுமேயானால், நான் தமிழகத்தில் தஞ்சைத் தரணியில் அந்த மாவட்டத்தினுடைய ஓரத்திலே உள்ள திருக்குவளை என்ற கிராமத்தில் 1924ஆம் ஆண்டு பிறந்தேன். நான் பிறந்த பொழுதுதான் இன்றைக்குத் தீர்வு காணப்பட்டிருக்கின்ற காவிரி நதிநீர் ஒப்பந்தமே ஏற்பட்டது. 1924ஆம் ஆண்டுதான் காவிரி ஒப்பந்தமே அன்றைய வெள்ளைக்காரர்கள் ஆட்சியிலே கையெழுத்தானது.



அமெரிக்காவில் சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பின்படி இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த மனிதராக மகாத்மா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்திய விடுதலைக்காக அகிம்சை வழியில் போராடிய இவரது பெயரை 8848 பேர் குறிப்பிட்டிருந்தனர். இந்த வரிசையில் 8321 பேரால் ஆதரிக்கப்பட்டு அடுத்த இடத்தைப் பெற்றவர் அன்னை தெரசா.

இந்தப் பட்டியலில் அடால்ஃப் ஹிட்லருக்கு 6-வது இடம். இரண்டாம் உலகப்போரில் இங்கிலாந்து நாட்டின் வெற்றிக்குக் காரணமான அக்காலப் பிரதமர் சர்ச்சிலுக்கு 8-வது இடம். 10-வது இடத்திற்கு மார்ட்டின் லூதர் கிங்கும், 13-வது இடத்திற்கு கோர்பச்சேவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தாமஸ் ஆல்வா எடிசன். உலகிலேயே முதன்முதலாக மாற்று இதய அறுவை சிகிச்சையைச் செய்த கிரிஸ்டியன் பெர்னாட், ஃப்ராங்லின் ரூஸ்வெல்ட், ஹென்றி ஃபோர்ட் மற்றும் பிரபல குத்துச் சண்டை வீரர் முகமது அலி ஆகியோரையும் அமெரிக்கர்கள் மறந்துவிடவில்லை!

## உடையார்கள் ஆட்சியின்போது உருவான காவிரி ஒப்பந்தம்

அப்போது அந்த மாநிலத்திற்குப் பெயர் கர்நாடக மாநிலமல்ல; மைசூர் மாநிலம். ஏற்கெனவே மைசூரை ஆண்ட மாவீரன் ஹைதர் அலியானாலும், திப்பு சுல்தான் ஆனாலும், அவர்கள் வீர விளையாட்டுக்களிலேயே தங்களுடைய காலத்தைக் கழித்து, மக்களுடைய வாழ்வுப் பிரச்சினைகளை அணுகாமல் இருந்த காலகட்டத்தில் அவர்களுடைய ஆட்சியின் முடிவிற்குப் பிறகு ஆள வந்தவர்கள் உடையார் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். அந்த உடையார்கள் ஆளவந்த பிறகுதான் ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், நடுத்தர மக்கள் நல்வாழ்விற்காகப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன, ஆறுகள் வகைப்படுத்தப்பட்டன. வாய்க்கால்கள் அமைக்கப்பட்டன, பாசனத்துறை அன்றைக்குப் பரவலாக ஆங்காங்கு விரிவாக்கப்பட்டது.

அந்த நேரத்தில் தமிழ்நாட்டில் ஆயக்கட்டு உரிமையோடு நம்முடைய தஞ்சை, திருச்சி, தென்னாற்காட்டிலே ஒரு பகுதி போன்ற காவிரி தீரத்துப் பகுதிகள் பயிர் விளைவித்துக் கொண்டிருந்ததைக் கண்டு, தண்ணீர்ப் பங்கீட்டை எப்படிச் செய்வது என்பதிலே ஒரு தகராறு ஏற்பட்டு, அந்தத் தகராறைத் தீர்க்க 1892லேயே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அது சரிவர செயல்படாமல் பிறகு அடுத்த ஒப்பந்தமாக 1924ஆம் ஆண்டு வெள்ளைக்காரர் ஆட்சியில் மைசூர், அன்றைக்கிருந்த சென்னை மாகாணம் இன்றைக்குத் தமிழ்நாடு - இன்றைக்கு அது கர்நாடகம். இந்த இரண்டு மாநிலங்களிலும் செய்துகொண்ட ஒப்பந்தம்தான் 24ஆம் ஆண்டு ஒப்பந்தம். நானும் அந்த 24ஆம் ஆண்டிலேதான் பிறந்தேன். எப்படி காவிரி பிரச்சினையானதோ, அதைப்போல நானும் இன்று வரையிலே பிரச்சினையாக இருக்கின்றேன் என்பதை உங்களுக்கெல்லாம் ஞாபகப்படுத்தத் தேவையில்லை. அனுபவ ரீதியாக நீங்களெல்லாம் அறிந்துகொண்டிருக்கிறீர்கள்.

இப்படி காவிரி ஒப்பந்தத்தோடு பிறந்து, வளர்ந்து இன்றைக்கு இடையிலே ஏற்பட்ட பல சிக்கல்களை எல்லாம் அறுத்து ஒரு நல்ல தீர்வைக் கண்டு காவிரி ஒப்பந்தம் இன்றைக்கு ஆகியிருக்கின்றது. அதன் காரணமாகத் தமிழகத்திற்கு உரிமையோடு கிடைக்கவேண்டிய தண்ணீர் இனிமேல் கிடைக்கும் என்ற மகிழ்ச்சிகரமான வேளையில் இன்று இங்கே நாமெல்லாம் குழுமியிருக்கின்றோம்.

## ரூ.636 கோடியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

இங்கு குழுமியிருக்கின்ற நேரத்திலேதான், இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும், அமைச்சர்கள் முல்லைவேந்தன் ஆனாலும், மணி ஆனாலும், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆனாலும், அனைவருமே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றி இங்கே விரிவாக எடுத்துக்கூறி அதை நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார்கள்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, 636 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்ட வரைவு இன்றைக்குச் செய்யப்பட்டிருக்கின்றது. தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு நகராட்சி மன்றங்களுக்கும், 14 பேரூராட்சிகளுக்கும் அஃதன்னியில் 4101 ஊரகக் குடியிருப்புகளுக்கும் பயன்படும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை ஒகேனக்கல் கூட்டுக் குடிதண்ணீர்த் திட்டத்தின் மூலமாகத் தருவதற்கு இந்த 636 கோடி ரூபாய் மதிப்பீட்டின் திட்டத்திற்கு ஜப்பான் நாட்டினுடைய உதவியைப் பெறுவது என்று தீர்மானித்து அவர்களும் உதவிட முன்வந்தனர்.



இந்தச் சூழ்நிலையில் இந்திய அளவிலும், அன்னிய நாடுகளோடும் ஏற்பட்டுள்ள ஒரு சிறு உறவிலே ஏற்பட்ட விரிசல் காரணமாகச் சற்று தயக்கம் ஏற்பட்டிருக்கின்றது. எனக்குள்ள நம்பிக்கை அந்தத் தயக்கம் விரைவிலே தீர்ந்து ஒகேனக்கல் கூட்டுக் குடிதண்ணீர்த் திட்டத்திற்கான உதவி ஜப்பான் நாட்டிலிருந்து கிடைக்கும் என்று நம்புகின்றேன். ஒருவேளை அது கிடைக்காமலே போய்விட்டால், நம்முடைய நாட்டின் பணத்தைக் கொண்டே, நம்முடைய அரசின் சார்பாகவே அந்தத் திட்டத்தைத் தொடங்கி, நிறைவேற்ற நான் தயாராக இருக்கின்றேன் என்ற உறுதியையும் உங்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏழை, எளிய மக்களுக்காக இந்த அரசு இந்த மாவட்டத்தில் நிறைவேற்றியுள்ள திட்டத்தை

யெல்லாம் பலரும் எடுத்துரைத்தார்கள். ஆனால் நண்பர் மணி அவர்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டவைகளைச் சொல்லாமல், நிறைவேற வேண்டியவைகளை மாத்திரம் சொன்னார்கள். ஏனென்றால் நிறைவேற்றப் பட்டவைகளைச் சொன்னால், சில அரசியல் சிக்கல் அவருக்கு உண்டு. எனவே, நிறைவேற்றப்பட்டவைகளைச் சொல்ல அவர் தயங்கினார்.

ஆனால், என்னுடைய மாணவர் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பாரிமோகன் எம்.பி. அவர்கள், நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும், அதற்கு நான் காரணகர்த்தாவாக காவிரிப் பிரச்சினை வரையிலே இன்றைக்கு நான் இந்த அரசின் சார்பாக ஆற்றியுள்ள கடமைகளையும், பணிகளையும் அவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள்.

## இந்தப் பண்பாடு தமிழகத்தில் மேலும் வளர வேண்டும்

இந்த மேடையைப் பார்க்கும்பொழுது எனக்கு ஒரு மனநிறைவு இன்று காலையிலேகூட இந்த மனநிறைவு எனக்கு ஏற்பட்டது. காலையிலும் ஜனதாதளக் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பாரிமோகன், அதைப்போலவே சட்டமன்ற உறுப்பினர் வெங்கடசாமி, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருமுறை பெரியார் அவர்கள் ராஜாஜி அவர்களை எதிர்த்து ஊர்வலமாகச் சென்றபோது, அவருடைய வீட்டு வாசலில் இருந்து இறங்கி வந்து, ஊர்வலத்தில் இருந்த தந்தை பெரியாருக்கு மாலை அணிவித்தார் என்பது வரலாறு.

அதைப்போலவே ராஜாஜி அவர்கள் மறைந்த நேரத்தில், தந்தை பெரியார் அவர்கள் சுடுகாடு வரையிலே வந்து, அவருடைய தகனம் நடைபெறுகின்ற நேரத்திலே பக்கத்திலே அமர்ந்து, பொலபொலவென்று கண்ணீர் உகுத்த காட்சியைப் பெரியாருக்கு அருகிலே இருந்து பார்த்தவன் நான். இப்படிப் பல நிகழ்ச்சிகள் உண்டு, தமிழ்நாட்டு வரலாற்றில்.



இருந்ததையும், இருப்பதையும் இங்கு நினைவுகூர்ந்தார். அவர் எனக்கு மாணவராக இருந்தார் என்பதை அவர் சொல்லித்தான் நான் தெரிந்துகொண்டேன். ஏகலைவனைப்போல் இருந்திருக்கிறார். அதற்காக கட்டை விரலைக் காணிக்கையாகக் கேட்கமாட்டேன் என்ற உறுதியை அவருக்கு நான் தருகின்றேன்.

அதைப்போலவே நம்முடைய பி.சி.ராமன் அவர்களும் என்னைக் குறிப்பிடும்போது தன்னுடைய ஆசான் என்று குறிப்பிட்டார். இப்படி பல மாணவர்கள் என்னைவிட அதிக வயதிலே கூட பல பதவிகளிலே தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள். இந்த அரசு செய்துள்ள நல்ல காரியங்களையெல்லாம் நம்முடைய ஜனதா தளக் கட்சியினுடைய சட்டப்பேரவையினுடைய உறுப்பினர் வெங்கடசாமி அவர்கள் இங்கே மிக அழகாக, அடுக்கடுக்காக எடுத்துரைத்தார். அருமைச் சகோதரர் மணி இவர்களெல்லாம் திருமண விழாவுக்கு வந்திருந்தார்கள். இப்பொழுது இந்த மேடையிலும் அவர்கள் காட்சியளிக்கின்றார்கள். இந்தப் பண்பாடு தமிழகத்திலே மேலும் மேலும் வளர வேண்டுமென்பதை நான் விரும்புகின்றேன்.

தமிழகத்திலே சில கட்சிக்காரர்கள் ஒருவரையொருவர் பார்ப்பது கூடப் பாவம். ஒருவருக்கொருவர் வாழ்த்துக் கூறுவது கூட தவறு. நன்றாக இருக்கிறீர்களா என்று கேட்பது கூட அநியாயம், அக்கிரமம் என்கின்ற அளவுக்குத் தமிழ் நாட்டிலே ஒரு அரசியல் பண்பாடு, தற்காலத்தில் வந்திருக்கின்றது. முற்காலத்தில் இது இல்லை. தந்தை பெரியார், சக்கரவர்த்தி மூதறிஞர் ராஜாஜி, இருவரும் மோதிக் கொண்டதைப்போலத் தமிழ்நாட்டிலே எந்த அரசியல்வாதிகளும் மோதிக்கொண்டதில்லை.

உங்களுக்குத் தெரியும். என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் உடல் மிக நலிவுற்றிருந்தபோது, நான் 'நானும் அவருக்காகப் பிரார்த்திக்கிறேன்' என்று முரசொலியில் எழுதிய கடிதம், தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஏடுகளிலும் வெளியிடப்பட்டது உங்களுக்குத் தெரியும். ஒரு நாற்பதாண்டு காலம் நாங்கள் நெருங்கிப் பழகியவர்கள். எம்.ஜி.ஆர். அவர்களே பல மேடைகளிலே சொன்னதைப் போல் அவரை இந்த இயக்கத்திற்கு அழைத்துவந்தவன் நான். அவரே அதை ஒத்துக்கொண்டு பல மேடைகளிலே பேசியிருக்கின்றார்.

## பிரிந்திருந்தாலும் நானும் எம்.ஜி.ஆரும் நாகரிகத்தோடு பழகியிருக்கிறோம்

ஆனால், இடையிலே ஏற்பட்ட அரசியல் மாறுபாடு காரணமாக இருவரும் பிரிந்திருக்க

நேரிட்டாலும், நாங்கள் பண்பாட்டோடு பழகியிருக்கின்றோம். நாகரிகத்தோடு பழகியிருக்கிறோம். இங்கே துரைமுருகன் குறிப்பிட்டதைப்போல் - இந்தியாவிலே முதன்முதலாக ஆகஸ்டு 15ஆம் தேதி சுதந்திர நாளில் தேசியக் கொடியைப் பறக்க விடுகின்ற உரிமையைப் பெற்றுத் தந்தவர் கருணாநிதி என்று சொன்னாரே, அந்த உரிமையைப் பெற்றுத் தந்த நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றபோது, அவர் சென்னை, கோட்டை கொத்தளத்திலே ஆகஸ்டு 15ஆம் நாள் கொடியேற்றுகிறார். அந்த நிகழ்ச்சிக்கு நானும் எதிர்க்கட்சிக்காரர் என்ற முறையில் சென்றிருக்கின்றேன்.

அந்த நிகழ்ச்சியிலே கொடியேற்றும்போது, எம்.ஜி.ஆர். 'முதலில் இந்தக் கொடியேற்றுகின்ற உரிமையை இந்தியாவில் உள்ள எல்லா முதலமைச்சர்களுக்கும் பெற்றுத் தந்த என்னுடைய நண்பர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்' - என்று சொல்லித்தான் கொடியை ஏற்றினார். இந்தப் பண்பாடு இன்றைக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழகத்திலே மறைந்துகொண்டிருக்கிறது. பார்க்கவே பயப்படுகிறார்கள். பார்த்தால் என்ன சொல்வார்களோ என்று அஞ்சுகிறார்கள். பார்த்தாலும் பரவாயில்லை, பார்த்துவிட்டுச் சிரிக்கவே பயப்படுகிறார்கள், சிரித்தால் என்ன ஆபத்து வருமோ என்று.

இப்படியெல்லாம் இருக்கிற இந்தச் சூழ்நிலையில் நம்முடைய அருமைச் சகோதரர் மணி அவர்களும், பாரிமோகன் அவர்களும் இந்த மேடைக்கு வந்திருப்பதும், காலையிலே மணவிழாவிலே கலந்துகொள்வதும், சில நேரங்களிலே இப்படிப்பட்ட விழாக்களுக்கு ஆளுங்கட்சிக்காரர்களேகூட வருவதில்லை. சொந்தக் கட்சிக்காரர்கள்கூட வருவதில்லை. ஆனால் இவர்கள் அப்படியில்லாமல், இது மக்களுடைய பிரச்சினை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் நாம். மக்களுக்காக நடைபெறுகின்ற ஒரு நல்ல விழாவில், நலத்திட்ட விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்ற அந்த நல்ல அரசியல் மனப்பான்மையோடு, நாகரிகத்தோடு அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஜனதா தளக் கட்சி சட்டமன்ற உறுப்பினரும் கலந்துகொண்டு இருப்பதை நான் வரவேற்கின்றேன்.

இன்றைக்கு மாணவர்களுக்கு எல்லா விதமான சலுகைகளையும் வழங்குகிறோம் என்று இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். அவர்கள் பேருந்துகளில் இலவசப் பயணம் செல்ல +2 வரையிலான மாணவர்களுக்கு வசதி செய்து தருகிறோம். எட்டாவது வரையிலே படித்த ஏழைப் பெண்களின் திருமணத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் தருகிறோம். என்றெல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள். கிராமப்புறத்து மாணவர்களுக்குத் தொழிற்கல்லூரிகளில் 15 சதவிகிதம் ஒதுக்குகிறோம் என்றெல்லாம் சுட்டிக்காட்டினார்கள்.

### நானே சின்னஞ்சிறு கிராமத்தில் பிறந்தவன்

இதற்கு என்ன காரணம் என்றால், நானே, முதலில் குறிப்பிட்டதைப்போல, ஒரு சின்னஞ்சிறு கிராமத்திலே பிறந்தவன். அந்தக் கிராமத்தில் ஒரேயொரு ஆரம்பப் பள்ளிக் கூடம்தான் நான் படித்த பள்ளிக்கூடம். 'அரிநமோத்து சிந்தம்' என்று எழுதப்பட்ட காலத்தில், இப்பொழுது த, ப என்று சுலபமாக ஆக்கிவிட்டார்களே இந்தப் படிப்பை. அப்படியில்லாமல், 'அரிநமோத்து சிந்தம்' என்று மணலைப் பரப்பி, வாத்தியார் கை விரலைப் பிடித்து, விரல் தேயத் தேய, தேய்த்த விரல் எரிய, எரிய 'அரிநமோத்து சிந்தம்' மணலில் எழுதிய அந்தக் காலத்தில் திருக்குவளை ஆரம்பப் பள்ளிக் கூடத்திலே படித்தவன் நான். அப்பொழுது உயர்நிலைப்பள்ளி அந்தக் கிராமப்புறத்திலே எந்த வட்டாரத்திலும் கிடையாது.

நான் ஆரம்பப்பள்ளி படிப்பை முடித்துவிட்டு, அந்தப் படிப்பிலேகூட ஐந்தாவது படிக்கும்போது எனக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்தார் அந்தப் பள்ளிக்கூடத்தினுடைய தலைமையாசிரியர். அவருக்கு டியூஷன் சொல்லிக் கொடுப்பதற்கு ஒன்றும் பெரிய சம்பளம் இல்லை. என் வீட்டுத் தோட்டத்திலே காய்க்கின்ற காய்கறிகளைக் கொண்டு போய், தினந்தோறும் கொடுக்க வேண்டும், டியூஷன் சொல்லிக்கொடுப்பதற்காக. அப்பொழுது அவர் சொன்னார், "பையனை நான் திருவாரூரில் ஹைஸ்கூலில் கொண்டு போய் எட்டாவதிலே சேர்த்துவிடுகிறேன்" என்று.

ஐந்தாவது படிக்கும்போதே டியூஷன் மூலம் எட்டாவதிலே சேர்ப்பதாகச் சொல்லி, என்னைத் திருவாரூருக்கு அழைத்துச் சென்று எட்டாம் வகுப்புத் தேர்வு எழுதச் சொன்னார்கள். ஐந்தாவது படித்த நான், எப்படி எட்டாம் வகுப்புத் தேர்வு எழுத முடியும்? கேள்வித்தாளைப் பார்த்துக்கொண்டே, வெறுந்தாளைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தேன். எட்டாம் வகுப்பிற்கும் லாயக்கில்லை. ஏழாவதிற்கும் லாயக்கில்லை, ஆறாவதுக்கும் லாயக்கில்லை. ஐந்தாவது கூட முடியுமோ முடியாதோ பார்க்கலாம் என்று சொன்னவுடன், ஓடோடிச் சென்று தலைமையாசிரியர் கஸ்தூரி அய்யங்கார் என்று ஒருவர். அவருடைய அறைக்குள்ளே சென்று "என்னை ஐந்தாவதிலே சேர்த்துக் கொள்ளுங்கள்" என்றேன். "நீ பாசாகவில்லையே" என்றார். அதற்கு நான் "சேர்ந்தே ஆகவேண்டும் இல்லாவிட்டால் பள்ளிக்கூடத்துக்கு எதிரே உள்ள குளத்திலே விழுந்து செத்துவிடுவேன்" என்று சொன்னேன். அதற்குப்பிறகு அவர் இரக்கப்பட்டு என்னை அந்தப் பள்ளியிலே சேர்த்துக்கொண்டார்.

### ஒவ்வொரு நாளும் நடந்து சென்று உயர்நிலைப் பள்ளியில் படித்தவன் நான்

ஆனால், அந்தப் பள்ளி இருந்த திருவாரூருக்கும், நான் பிறந்த திருக்குவளைக்கும் பதினைந்து மைல் தொலைவு. அதற்குப் பேருந்திலே செல்லவேண்டும். ஆனால் திருக்குவளையிலே பேருந்து கிடையாது. அல்லது ரயிலிலே செல்ல வேண்டும். திருக்குவளையிலே ரயில் கிடையாது. ரயிலில் செல்வதென்றால் ஏழு மைல் நடந்துசென்று, திருநெல்லிக்காவல் என்ற ரயிலடிக்குச் சென்று ரயிலைப் பிடிக்கவேண்டும். பேருந்தில் செல்வதென்றால் நான்கு மைல் நடந்து சென்று கச்சணம் என்ற ஊரிலே பேருந்தைப் பிடிக்க வேண்டும்.

இப்படி ஒவ்வொரு நாளும் நான்கு மைலும் பேருந்து கிடைக்காவிட்டால் அங்கிருந்து இன்னும் மூன்று மைல் ஆக ஏழு மைல் நடந்து சென்று அன்றைக்கு உயர்நிலைப் பள்ளியிலே படித்தவன் நான். அந்தக் கஷ்டத்தையும் அனுபவித்த காரணத்தினாலேதான், இன்றைக்குக் கிராமப்புறங்களிலே இருக்கின்ற மாணவர்கள் கல்லூரிப் படிப்பைப் பெற நூற்றுக்கணக்கான கல்லூரிகள் இன்று தமிழ்நாட்டில் இருக்கிறதென்றால், அன்றைக்கு ஏற்பட்ட ஆர்வம், என்னைப் போல எத்தனைப் பேர் எத்தனைக் கிராமங்களில் வாடுவார்கள் என்கின்ற அந்தக் கவலையின் காரணமாகத்தான் இன்றைக்கு இந்தச் சாதனைகளையெல்லாம் நாம் வரவேற்க முடிந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் நினைப்பது செயல்படுவது அனைத்தும் ஏழை, எளிய, சாதாரண, சாமான்ய, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத்தான் என்ற காரணத்தினாலேதான் இந்தச் சமுதாயத்திலே பிணக்கு, பேதம், ஒற்றுமை, விரோதம் அதன் காரணமாக அமளி, கலவரங்கள் இவைகள் ஏற்படாமல் மனித நேயத்தோடு ஜாதி பேதம் இல்லாமல், மத நல்லிணக்கத்தோடு அனைவரும் வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடன்தான் சமத்துவபுரங்களை மாவட்டத்திற்கு இரண்டு சமத்துவபுரங்களை அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டு, அவை அமைக்கப்படுகின்றன.

### புதுக்கோட்டை புதுமை

புதுக்கோட்டை மாவட்டத்தை முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக்கும் இயக்கம் 1991-ல் நடைபெற்றது. அப்போது பெண்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லவும், அவர்களது தொழில் திறமை அதிகரிக்கவும் சிறு தொழில்கள் மூலம் ஊதியத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றில் சைக்கிள் ஓட்டப் பயிற்சி கொடுப்பதும் ஒன்று. இந்தத் திட்டத்தின்கீழ் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் இப்போது சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டனர்.



வருகிற 17ஆம் தேதியன்று நான் மதுரையிலே கட்டிமுடிக்கப்பட்ட சமத்துவபுரத்தைத் திறக்க இருக்கின்றேன். அடுத்து, வேலூர் மாவட்டத்திலே கட்டி முடிக்கப்பட்ட சமத்துவபுரத்தைத் திறக்க இருக்கின்றேன். இந்த மாவட்டத்திலேயும் இரண்டு இடங்களிலே சமத்துவபுரப் பணிகள் தொடங்கப்பட்டு விட்டதாக அமைச்சரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

சமத்துவபுரம் அமைக்கும்போது முதலிலே சந்தேகப்பட்டோம். எல்லாப் பிரிவு மக்களையும், ஐயர் ஆனாலும், ஐயங்கார் ஆனாலும், ஆதிதிராவிடர் ஆனாலும், செட்டியார் ஆனாலும், முதலியார் ஆனாலும், வன்னியர் ஆனாலும், முக்குலத்தோர் ஆனாலும் எல்லோரும் ஒரே இடத்திலே குடியிருப்பதற்குச் சம்மதிப்பார்களா என்ற ஒரு சந்தேகம் ஏற்பட்டது.

ஆனால் திட்டத்தை அறிவித்து, வீடு ஒன்று முப்பத்தைந்தாயிரம் ரூபாய். மேலும் தேவைப்பட்டால் அவர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கித் தரப்படும். முப்பந்தைந்தாயிரம் ரூபாய் அவர்களுக்கே மானியமாக வழங்கப்படும். தேவைப்பட்டால் வசதிகளை வீட்டில் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று கேட்டால், ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்குவதற்கு உதவி செய்யப்படும். அதற்கு மேலும் அவர்களிடத்திலே வசதி இருந்தால், அந்த அளவுக்கு வீட்டைக் கட்டிக்கொள்ளலாம் என்கின்ற குறிக்கோளோடு அந்த வீடுகளெல்லாம் இன்றைக்குக் கட்டப்பட்டிருக்கின்றன.

## சமத்துவபுரத்தில் வசிப்பதற்குப் போட்டி போட்டு வருகின்றனர்

வருவார்களா அங்கே குடியமர - என்ற கேள்விக்கு இன்று இடமில்லாமல், ஒவ்வொரு சமத்துவபுரத்திலும், பிராமண சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் மற்றும் வேறு பல நடுத்தர சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், பிற்படுத்தப்பட்டோர்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களும் அங்கே குடியேற போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய எண்ணம் இந்தச் சமத்துவபுரங்கள் மாத்திரமல்ல; தமிழகமே சமத்துவபுரமாக ஆகவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். என்னுடைய ஆசை. அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சட்டப்பேரவையின் உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதிகளையெல்லாம் குறிப்பிட்டு இவைகளையெல்லாம் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதிலும் குறிப்பாக, தொடக்கத்திலே பேசிய பி.சி.ராமன் அவர்கள், சாலை ஆய்வாளர்கள் தருமபுரி மாவட்டத்திலே போதுமான அளவிற்கு இல்லை. அந்தப் பணியாளர்களை அதிகமாக நியமிக்க வேண்டும் என்று கேட்டார். இவைகளெல்லாம் இருக்கின்ற நிதி வசதிக்கேற்ப நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்கின்ற உறுதியை நான் இங்கே வழங்குகின்றேன்.

## கருணை அதிகமாகவும் நிதி குறைவாகவும் இருக்கிறது

இங்கே மணி பேசும்போது, ''அவரே கருணைநிதி. கருணை அதிகம் உள்ளவர். எனவே இதையெல்லாம் செய்துவிடுவார். எங்களுடைய தொகுதிக்கு ஒரு தொழிற்சாலையைக் கொண்டு வருவார்'' என்றெல்லாம் சொன்னார். மணி அவர்களே, கருணைநிதிதான். ஆனால் கருணாநிதி என்ற பெயரில், கருணை என்பது மூன்றெழுத்து. நிதி என்பது இரண்டெழுத்துதான். எனவே கருணை அதிகமாகவும், நிதி குறைவாகவும் இருக்கிறது. இருந்தாலுங்கூட உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உறுதிமொழி, வாக்குறுதிகளையெல்லாம் சட்டமன்றத்திலே கொடுத்திருக்கிறேன். அவருடைய தொகுதியிலே ஒரு தொழில் வளாகம் கொண்டு வருவதற்கும் அவைகளையும் நிறைவேற்றுவதற்கும் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன பாலங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், சாலை வசதிகள் இவைகளையெல்லாம் நிறைவேற்றித் தருவதற்கும் நான் என்றைக்கும் தயாராக இருக்கிறேன் என்று குறிப்பிட்டு, இந்த மாலை நேரத்திலே உங்களுடைய திருமுகங்களையெல்லாம் காண்பதற்கு நல்ல வாய்ப்புக் கிட்டியமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

*- தருமபுரி மாவட்டம் காரிமங்கலத்தில் 10-8-1998 அன்று அரசு நலத்திட்டங்களைத் தொடங்கிவைத்தும், நலத்திட்ட உதவிகளை வழங்கியும் ஆற்றிய உரை.*

# சாதனை படைக்கும் தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்

முதல் பால்பெருக்குத் திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட இந்தப் பால்பண்ணை கடந்த 15 வருடங்களில் காணாத ஒரு வெண்மைப்புரட்சியை 1997-98, 1998-99 வருடங்களில் கண்டுள்ளது. சற்றேறக்குறைய 1.72 இலட்சம் அங்கத்தினர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இவ்வொன்றியம் கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் வேலை வாய்ப்புக்களைப் பெருக்கி, அதன் மூலம் அவர்தம் வாழ்வில் ஒளியேற்றியுள்ளது என்பது மிகையானதன்று.

## கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி


படிப்படியாக முன்னேற்றங்களைத் தமக்குரியதாக்கும் இவ்வொன்றியம் கடந்த இரு ஆண்டுகளில் வியத்தகு வளர்ச்சியை எட்டியது. இவ்வொன்றியத்தின் நிர்வாக இயக்குநர் டாக்டர் அ. சுப்பிரமணியத்தின் சீரிய தலைமையில் தான்.

கூட்டுறவு பால் சங்கங்களைப் பொறுத்தவரையில் 1997 வரை 538 என்ற எண்ணிக்கைகளில் இருந்தது, தற்சமயம் 651 சங்கங்களாக உருவெடுத்து 20 சதவீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இச்சங்கங்களில் ஏறத்தாழ 1.72 இலட்சம் அங்கத்தினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில் 60 செயலிழந்த கூட்டுறவு சங்கங்களைப் புத்துணர்வு கொடுத்துச் செயலாக்கம் செய்வதில் இந்த ஒன்றியம் மகத்தான சாதனை படைத்துள்ளது.

## மான்ய உதவி

இதனிடையில் கிராமப்புறங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்குப் பயன் தரும் வகையில் அரசு தீட்டிய திட்டங்களாகிய ஆதிதிராவிடர் நலத் திட்டம் மற்றும் 'தாட்கோ' திட்டம் ஆகியவற்றுள் மானியமாக ரூ.26 இலட்சங்களை இவ்வொன்றியம் பெற்றுத் தந்து சாதனை படைத்துள்ளது.



## பால் உற்பத்தி

நமது தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரத்தின் தினசரி பால் தேவையைப் பூர்த்தி செய்யும் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் தருமபுரி மாவட்ட ஒன்றியம் தலையாய பங்கு வகிக்கிறது. சராசரியாக தினசரி 1 இலட்சம் லிட்டர் பால் சென்னைக்கு அளிப்பதுடன் தன் சுயதேவையாகிய 20,000 லிட்டர் பாலையும், இவ்வொன்றியம் விற்பனை செய்து வருகிறது. அதுவல்லாது, பால்பொடி, வெண்ணை, நெய் மற்றும் பால்கோவா போன்ற சுவைமிகு பால் பொருட்களிலும் தேவையான அளவுக்கு உற்பத்தி செய்துவருகிறது.

முக்கியமாகக் கடந்த பல ஆண்டுகளாகச் சராசரியாக 90,000-லிருந்து 94,000 லிட்டர் வரை பால் உற்பத்தியாகி வந்த இந்த மாவட்டத்தில், கடந்த இரு வருடங்களில் தினசரி உற்பத்தி செய்யப்படுகின்ற பாலின் அளவு 1,50,000 இலட்சத்தைத் தாண்டியுள்ளது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.


## சாதனை விருதுகள்

இவ்வொன்றியத்தின் சீரிய பணிகளைப் பாராட்டி, கடந்த வருடம் தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப் பெற்ற சிறந்த கூட்டுறவுச் சங்க விருது இவ்வொன்றியத்தைப் பெருமிதப்பட வைத்தது.

மேலும் அக்மார்க் நிறுவனத்தின் "தலைசிறந்த நெய் உற்பத்தி நிறுவன விருது" புதுதில்லியில் இருந்த சேவை மற்றும் நிர்வாகத் திறமை களுக்கான "எக்சலன்ஸ் விருது" என்றெல்லாம் விருதுகள் பெற்று இந்நிறுவனம் பீடுநடை போடுகிறது.

## ஈட்டிய இலாபம்

கடந்த பல வருடங்களாக நட்டத்தில் இயங்கி வந்த இவ்வொன்றியம் 1997-98ம் ஆண்டில் என்றுமில்லாத சாதனையாக ரூ.1.74 கோடி உத்தேச நிகர லாபம் ஈட்டியுள்ளது என்பது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். ★



# காவிரி:

# இதுவரை நடந்தது

(1890 -1997)

**1890 :** புதிய பாசனத் திட்டங்களை மைசூர் சமஸ்தானம் தொடங்குகிறது.

காவிரிப் பிரச்சினையில் சென்னை மாகாணத்துக்கும் மைசூர் சமஸ்தானத்துக்கும் இடையில் முதல் ஒப்பந்தம் கையெழுத்தானது.

**39 டிஎம்சி.** தண்ணீரைத் தேக்கி வைக்கும் கிருஷ்ணராஜ சாகர் அணைத்திட்டத்தை, சென்னை மாகாணத்தின் ஒப்புதலுக்கு மைசூர் அனுப்புகிறது.

**1911 : 11** டிஎம்.சி. தண்ணீரைத் தேக்கி வைக்க அணை கட்ட சென்னை ஒப்புதல் அளிக்கிறது. அடிக்கல் நாட்டப்படுகிறது.

**1921 :** கிருஷ்ணராஜ சாகர் அணைத்திட்டத்துக்கான விதிமுறைகள் வகுக்கப்படுகின்றன. மைசூர் சமஸ்தானத்துக்கு இவை ஏற்புடையவை இல்லை. தொடர்ந்து பேச்சு வார்த்தை நடக்கிறது.

**1924 :** இரு நிர்வாகங்களுக்கும் இடையில் புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகிறது.

**1931 :** கிருஷ்ணராஜ சாகர் அணை கட்டி முடிக்கப்படுகிறது.

**1934 :** மேட்டூர் அணை கட்டி முடிக்கப்படுகிறது. 93.5 டிஎம்.சி. நீரைத் தேக்கி வைக்க இது கட்டப்பட்டது.

**1956 :** நவம்பர்-1 : மாநில எல்லைகள் திருத்தியமைக்கப் படுகின்றன. கேரளம் உருவாகிறது. குடகு, கர்நாடகத்தின் ஒரு பகுதியாகிறது.

**1956 :** மாநிலங்களுக்கு இடையிலான நதி நீர்த் தகராறு சட்டம். நதி நீர் வாரியம் (River Board) சட்டம் உருவாதல்.

**1958 :** கபினி அணைத்திட்டம் தொடங்குகிறது. (1975ல் முடிகிறது).

**1964 :** ஹாரங்கி அணைத் திட்டப் பணி தொடக்கம். தமிழகத்தின் எதிர்ப்பு காரணமாக மத்திய அரசு ஒப்புதல் கொடுக்க மறுக்கிறது.

**1965 :** ஹேமாவதி அணை கட்டும் பணி தொடக்கம். (1976-ல் முடிவு).

**1966 :** கபினி, ஸ்வர்ணாவதி திட்ட விவரங்களைத் தமிழகம் கேட்கிறது. கீழ் பவானி, அமராவதி திட்ட விவரங்களை அளித்தால்தான் விவரமளிக்க முடியும் என்கிறது கர்நாடகம். தமிழகம் இந்த விவரங்களை அளித்த போதும், தனது தரப்பில் விவரம் அளிக்க கர்நாடகம் மறுக்கிறது.

**1967 :** ஸ்வர்ணாவதி அணை கட்டுமானப் பணி தொடக்கம். (1973ல் முடிவு)

**1968 :** ஹாரங்கி அணை கட்டும் பணி தொடக்கம். (1973-ல் முடிவு)

1968 ஆகஸ்ட் : மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர், கர்நாடக முதல்வர் வீரேந்திர பாட்டீல் இடையில் காவிரிப் பிரச்சினை குறித்து அமைச்சர்கள் நிலையிலான முதல் பேச்சு வார்த்தை. மத்திய பாசனத்துறை அமைச்சர் கே.எல்.ராவ் தலைமை.பேச்சு வார்த்தைக்கு அழைக்கவில்லை என்று கேரளம் புகார்.

1970 : மேலும் 5 சுற்றுப் பேச்சுகள்; கேரளமும் பங்கேற்பு (1978 முதல் புதுவையும் பங்கேற்பு).

1970 : பிப்ரவரி : பேச்சுவார்த்தை மூலம் தீர்வுக்கு வாய்ப்பில்லை என்று கூறும் தமிழகம், நடுவர் மன்றத்தை உருவாக்க மத்திய அரசை வலியுறுத்துகிறது. இதே ஆண்டு ஆகஸ்ட்டில் கேரளமும் இதே கருத்தை வலியுறுத்துகிறது.

1971:நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடக்கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் மனு; தஞ்சாவூர் விவசாயிகளும் அதே போன்ற மனுவைத் தாக்கல் செய்கின்றனர். கேரளமும் கோரிக்கைக்காக நீதிமன்றம் செல்கிறது.

1972:முதல்வர்கள் சந்தித்துப் பேசப் பிரதமர் இந்திரா காந்தி யோசனை; மே 29ல் கலைஞர் (தமிழகம்), தேவராஜ் அர்ஸ்(கர்நாடகம்), சி.அச்சுத மேனன்(கேரளம்) சந்திப்பு.

1972ஜூன் : காவிரி உண்மை அறியும் கமிட்டியை மத்திய அரசு நியமிக்கிறது; கமிட்டியின் முதல் அறிக்கை டிசம்பரில் சமர்ப்பிப்பு; மீண்டும் விவரங்களைப் பரிசீலிக்க முதல்வர்கள் கோரிக்கை. இதைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தில் தனது வழக்கைத் தமிழகம் வாபஸ் பெறுகிறது.

1974 நவம்பர் : வரைவு ஒப்பந்தத்தை மத்திய அரசு முன் வைக்கிறது.

1975 பிப்ரவரி: ஒப்பந்தம் குறித்து மாநிலங்களுக்கிடையில் பேச்சு; இதை ஏற்கத் தமிழகம், கர்நாடகம் மறுப்பு.

1976 ஆகஸ்ட் : திருத்தப்பட்ட வரைவு ஒப்பந்தத்தை மத்திய அரசு முன்வைக்கிறது; நீர்ப்பகிர்வு தொடர்பான வழிமுறைகளை வகுக்க கமிட்டி அமைக்கப்படும். காவிரிப் பள்ளத்தாக்கு ஆணையம் அமைக்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் ஜெகஜீவன்ராம் ஆகஸ்ட் 27-ல் அறிவிப்பு.

1978 ஆகஸ்ட் : மாண்புமிகு முதல்வர்கள் நிலையிலான கூட்டம்; புதுவை பங்கேற்பு; 1976 வரைவு ஒப்பந்தத்தை எம்.ஜி.ஆர்.நிராகரித்தல்.

1978 செப்டம்பர் - 1980 டிசம்பர்: முதல்வர்கள் நிலையில் மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் முன்னிலையில் நான்கு சுற்றுப் பேச்சு வார்த்தை.

1983 ஏப்ரல்: மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் ராம்நிவாஸ் மிர்தா தலைமையில் கூட்டம்.

1986 ஜூன் : மத்திய அமைச்சர் பிசங்கரானந்த் முன்னிலையில் மீண்டும் பேச்சு.

1986 நவம்பர் : நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடக் கோரி தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைபொருள்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கம் உச்சநீதி மன்றத்தில் முறையீடு: இதற்கு ஆதரவாகத் தமிழக அரசு மனு.

1987 : மீண்டும் இரு தரப்புப் பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசு யோசனை; இதுவரை நடந்த பேச்சு வார்த்தைகளால் பலனில்லை என்று கூறி, திரு.எம்.ஜி.ஆர்.நிராகரிப்பு.

1988 டிசம்பர் : கர்நாடகா முதல்வருக்கும் தமிழக ஆளுநருக்கும் இடையில் பேச்சுவார்த்தை தோல்வி; நடுவர் மன்றம் அமைக்கத் தமிழக ஆளுநர் வலியுறுத்தல்.

1989 டிசம்பர் : நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசிடம் தமிழகம் மீண்டும் வலியுறுத்தல்.

1990 ஏப்ரல் 24 : இதுவரை நடந்த பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு ஏற்படாததால் நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசுக்கு உச்சநீதி மன்றம் ஆணை.

1990 ஜூன் 2: நடுவர் மன்றம் அமைப்பு.

1990 ஆகஸ்டு : இடைக்காலத் தீர்வு அளிக்க நடுவர் மன்றத்திற்கு ஆணையிடக்கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழகம், புதுவை மனு. இடைக்கால தீர்வுக்கு உச்ச நீதி மன்றம் உத்தரவு.

1991 ஜூன் 25: தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. தண்ணீர் விட நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு.

1991 ஜூலை 25: கர்நாடகத்தில் 8.49 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பகுதியைப் பாதுகாக்க கர்நாடக அரசின் அவசரச் சட்டம்.

1991 ஜூலை - செப்டம்பர் : இடைக்காலத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் கர்நாடகம் மனு.

1991 ஜூலை 27 : கர்நாடகத்தின் அவசரச் சட்டம் செல்லுபடியாகக் கூடியதா என்று உச்ச நீதிமன்றத்தின் கருத்துக்கு, குடியரசுத் தலைவர் அனுப்புதல். உச்ச நீதிமன்றத்தின் கருத்தை அரசு கேட்பது குறித்து மத்திய அமைச்சரவையில் கருத்து வேறுபாடு: எதிர்ப்புத் தெரிவித்து வாழப்பாடி ராமமூர்த்தி ராஜினாமா.

1991 நவம்பர் 22 : கர்நாடகத்தின் அவசரச் சட்டம் அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என்று உச்சநீதிமன்றத்தீர்ப்பு.



*சேவை என்பது, கூலியை உத்தேசித்தோ தனது சுயநலத்தை உத்தேசித்தோ செய்வதல்ல; மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் செயல்தான் சேவையாகும்!* - தந்தை பெரியார்

1991 டிசம்பர் 11 : நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு மத்திய அரசு கெஜட்டில் வெளியீடு: கர்நாடகத்தில் பதற்றம்; டிசம்பர் 13-ஆம் தேதி பந்த் நடத்த அழைப்பு; அனைத்துக் கல்வி நிலையங்களையும் 10 தினங்கள் மூட கர்நாடக அரசு உத்தரவு.

1991 டிசம்பர் 12 : பெங்களூரில் பேரணி, 24,27-ஆம் தேதிகளில் மைசூரிலும் பதற்றம்; 27-ஆம் தேதி பந்த் நடத்த தமிழகஅரசு அறிவிப்பு, இரு மாநிலங்களிலும் நடந்த வன்முறைகளில் ரூ.17கோடி சேதமடைந்ததாக மனித உரிமைக் கமிஷன் மதிப்பிட்டது.

1991 டிசம்பர் 23 : நடுவர் மன்ற இடைக்காலத் தீர்வை எதிர்த்து பாரதீய ஜனதா கட்சித் தலைவர் எச்.என்.நஞ்சே கௌட கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல்.

1992 மார்ச் 28: வி.ஆர்.கிருஷ்ணய்யர் தலைமையில் இரு மாநில விவசாயிகள் பிரதிநிதிகள் மற்றும் நிபுணர்கள் கலந்து கொண்ட கூட்டம் பெங்களூரில் நடந்தது. காவிரி தொடர்பாகக் குடிமக்களின் கூட்டுக் கோரிக்கை வெளியிடப்பட்டது.

1992 ஜூன் 5 : நடுவர் மன்றத்தின் செயல்பாடுகளையும், அதன் இடைக்கால உத்தரவையும் நிறுத்தி வைக்கக் கோரி நாடாளுமன்ற உறுப்பினர் எச்.டி. தேவெ கௌட கர்நாடக உயர்நீதிமன்றத்தில் முறையீடு.

1993 அக்டோபர் 4 : நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி தண்ணீர் விட கர்நாடகத்துக்கு உத்திரவிடக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் முறையீடு.

1995 ஆகஸ்ட் 1 : இதே கோரிக்கையை வலியுறுத்தி தமிழகம் இரண்டாவது மனு.

1995 நவம்பர் : வாடும் பயிர்களைக் காப்பாற்ற உடனடியாக 30 டி.எம்.சி தண்ணீர் விட கர்நாடகத்துக்கு உத்தரவிடக் கோரி உச்சநீதி மன்றத்தில் தமிழகம் முறையீடு.

1995 டிசம்பர் 14 : இந்த மனு மீது உச்ச நீதி மன்றத்தில் விசாரணை. அன்றைய தினமே நடந்த நடுவர் மன்றக் கூட்டத்தில் பிரச்சினையை எடுத்துச் செல்ல நீதிமன்றம் யோசனை.

1995 டிசம்பர் 19 : தமிழகத்தின் கோரிக்கை மீது நடுவர் மன்றத்தில் விசாரணை. உடனடியாக, கூடுதலாக 11 டி.எம்.சி. தண்ணீர் விட கர்நாடகத்துக்கு ஆணை. இதைச் செயல்படுத்த வலியுறுத்தி கர்நாடக முதல்வர், பிரதமருக்குத் தமிழக முதல்வர் கடிதம்.

1995 டிசம்பர் : உச்சநீதிமன்றத்தில் மீண்டும் தமிழகம் மனு. 28-ஆம் தேதி விசாரணை செய்த நீதிமன்றம், முதல்வர்கள் கூட்டத்தை 2 தினங்களுக்குள் கூட்டி, தீர்வு காண நீதிமன்றம் யோசனை.

1995 டிசம்பர் 30 : பிரதமர் நரசிம்மராவ் தலைமையில் முதல்வர்கள் கூட்டம், பேச்சுவார்த்தை தோல்வி.

1996 ஜனவரி 1 : தினசரி 1 டி.எம்.சி. வீதம் 6 டி.எம்.சி. தண்ணீர் விட கர்நாடகத்துக்குப் பிரதமர் கடிதம்.

1996 ஜனவரி 23 : மீதி 5 டி.எம்.சி. தண்ணீர் விட கர்நாடகத்துக்கு ஆணையிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் முறையீடு. மார்ச் 12க்கு விசாரணை ஒத்திவைப்பு. ஏப்ரல் 9,11 தேதிகளில் விசாரணை முடிவு; தீர்ப்பு ஒத்திவைப்பு.

## தெரிந்து கொள்வோம்!

| | | |
|---|---|---|
| தொழுநோய் ஒழிப்புநாள் | : | ஜனவரி 30 |
| தாய்மார்கள் நாள் | : | பிப்ரவரி 14 |
| உலக நுகர்வோர் நாள் | : | பிப்ரவரி 15 |
| காசநோய் ஒழிப்பு நாள் | : | பிப்ரவரி 25 |
| உலகப் பெண்கள் நாள் | : | மார்ச் 18 |
| உலகக் காடுகள் பாதுகாப்பு நாள் | : | மார்ச் 20 |
| உலகச் சுகாதார நலநாள் | : | ஏப்ரல் 7 |
| பூமி பாதுகாப்பு நாள் | : | ஏப்ரல் 22 |
| உழைப்போர் நாள் | : | மே 1 |
| அகில உலகச் செவிலியர் நாள் | : | மே 12 |
| உலகப் புகைப்பிடிக்கா நாள் | : | மே 31 |
| சுற்றுப்புறச் சூழ்நிலை நாள் | : | ஜூன் 3 |
| தந்தையர்கள் நாள் | : | ஜூன் 19 |
| போதை மருந்து ஒழிப்பு நாள் | : | ஜூன் 26 |
| சர்க்கரை நோய் ஒழிப்பு நாள் | : | ஜூன் 27 |
| தாய்ப்பால் சிறப்பு நாள் | : | ஆகஸ்ட் 1 |
| ஆசிரியர்கள் நாள் | : | செப்டம்பர் 5 |
| இந்தியப் புகைப்பிடிக்கா நாள் | : | அக்டோபர் 11 |
| பார்வை இழந்தோர் நாள் | : | அக்டோபர் 15 |
| உலக உணவு நாள் | : | அக்டோபர் 16 |
| ஐக்கிய நாடுகள் நிறுவன நாள் | : | அக்டோபர் 24 |
| ஏழ்மை ஒழிப்பு நாள் | : | நவம்பர் 1 |
| குழந்தைகள் நாள் | : | நவம்பர் 14 |
| உலக எய்ட்ஸ் நோய் நாள் | : | டிசம்பர் 1 |
| உலக ஊனமுற்றோர் நாள் | : | டிசம்பர் 3 |
| 'சார்க்'கின் பெண் குழந்தைகள் நாள் | : | டிசம்பர் 8 |
| மனநல நாள் | : | டிசம்பர் 8 |
| உலக மனித உரிமை நாள் | : | டிசம்பர் 10 |

*தகவல் : கோபி*

1996 ஜூன் : நடுவர் மன்றத் தலைவர் சித்தாதோஷ் முகர்ஜி ராஜினாமா.

1996 ஜூலை 8 : தண்ணீர் இல்லாததால் விவசாயப் பணிகள் தொடங்காத நிலையில் இடைக்கால உத்தரவை அமல்படுத்த கர்நாடகத்துக்கு உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழகம் மீண்டும் மனு.

1996 ஜூலை 31 : மனுவை விசாரித்த தலைமை நீதிபதி, இரு மாநிலங்களும் பேசித் தீர்த்துக்கொள்ள யோசனை.

1996 செப்டம்பர் -1997 ஜனவரி : தமிழக முதல்வர் கலைஞர் - கர்நாடக முதல்வர் ஜே.எச். பாடீல் இடையில் 5 சுற்றுப் பேச்சு; பேச்சு தோல்வி. இனி பேச்சுவார்த்தை இல்லை என்று கலைஞர் அறிவிப்பு.

1996 டிசம்பர் : உச்சநீதிமன்ற நீதிபதி என்.பி.சிங் நடுவர் மன்றத் தலைவராக நியமனம்.

1997 ஜனவரி 7-10 : நடுவர் மன்றத்தில் மீண்டும் விசாரணை தொடக்கம். கர்நாடகம் பங்கேற்பு.

*நன்றி : "தினமணி"*

# "அனைவருக்கும் மருத்துவ வசதி என்கிற இலக்கைத் தமிழக அரசு நிச்சயம் நிறைவேற்றும்!"

- டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தில் முதலமைச்சர் கலைஞர் உரை

சென்னை கிண்டியில் அமைந்துள்ள டாக்டர்.எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகக் கட்டடத் திறப்புவிழாவில் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

"ஒன்றை முதலில் நினைவு கூர்ந்திட விரும்புகிறேன்; 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள் இந்திய நாடு விடுதலை பெற்ற விழா, நாடு முழுவதும் கொண்டாடப்பட்ட போது, அன்று சென்னை தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில், தேசியக் கொடியை முதலமைச்சர் என்ற முறையில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஏற்றி வைத்தார். அப்பொழுது, அவர் உரையாற்றும்போது சொன்னதை நினைவூட்டுகின்றேன்.

"எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், வேறு எந்த நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தாலும் அவர்கள் நாட்டுக்கு நல்லது செய்தால், அவர்களைப் போற்ற வேண்டியது மனிதத்தன்மை உள்ள ஒவ்வொருவருடைய கடமையாகும்.



சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, இந்தச் சுதந்திரக் கொடியை இங்கே ஏற்றிவைப்பது மேதகு ஆளுநர் என்ற முறையில் இருந்தது. அந்த முறையை மாற்றவேண்டும் என்று கோரி, அதற்காகப் போராடி எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் 'அந்த உரிமையைப் பெற்றுத் தந்த கலைஞர் கருணாநிதி அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்".

- இது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த விழாவிலே குறிப்பிட்ட வாசகம்.

**கேள்விக்குறியும் பெருமூச்சும்**

அரசியலிலே எத்தனை வேறுபாடு இருந்தாலும், எதிர்எதிர் முனையிலே இருந்தாலும் அவரவர்களுக்குத் தரவேண்டிய மரியாதையை எண்ணிப் பார்த்து அரசியல் நடைபெற்றது அந்தக் காலம். ஆனால், இந்தக் காலம் கேள்விக்குறிதான்; பதில் பெருமூச்சுதான். இந்தச் சூழ்நிலையிலே தான் என்னுடைய அன்புக்கினிய நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையை இந்தப் பல்கலைக்கழகத்தினுடைய வளாகத்தில் திறந்து வைக்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கின்றேன்.

எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரால் பல்கலைக்கழகம் ஒன்றைத் தொடங்குவது என்று எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக

இருந்தபொழுதே திட்டமிடப்பட்டு, சட்டமாக சட்டப்பேரவையிலே கொண்டு வரப்பட்டது. அதன்பின்னர் எம்.ஜி.ஆர். அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்த சூழலில், 1989-ஆம் ஆண்டு நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் அந்தப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கவேண்டும் என்ற முனைப்போடு முயற்சித்து, அந்த முயற்சிக்கு உறுதுணையாக அன்றைக்கு இருந்த துணைவேந்தரும், மற்றவர்களும் இருந்து, அன்றைய குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்களை அழைத்து, அந்தத் தொடக்க விழாவை நடத்தினோம். அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கலந்துகொள்கின்ற அரிய வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன்.

> **மாணவர்களிடையே சேவை உணர்ச்சி, கட்டுப்பாடு ஆகியவற்றை வளர்ப்பது ஆசிரியர்களின் கடமையாகும்.**
>
> - டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன்

### வடிவம் அமைத்துக் கொடுத்தேன்

1989-ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தைத் தொடங்கிவைத்தேன். அன்றைய பல்கலைக்கழகத் தொடக்கவிழா உரையை அன்றைய ஜனாதிபதி ஆர்.வி. ஆற்றினார் என்றாலுங்கூட, இந்தக் கட்டடங்களுக்கு அன்றைக்கு நான்தான் அடிக்கல் நாட்டினேன். இன்றைக்கு முதலமைச்சராக நான் இருக்கும்போது, அதைத் திறந்து வைக்கின்ற அரிய வாய்ப்பை நமக்கெல்லாம் நம்முடைய இந்தியத் துணைக்கண்டத்தினுடைய குடியரசு துணைத்தலைவர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

இந்தப் பல்கலைக்கழகத்தினுடைய கட்டட வடிவமைப்பைக்கூட நானேதான் அமைத்துக் கொடுத்தேன் என்பதை - என்னுடைய நண்பருடைய நினைவுச்சின்னமாக அமைத்துக்கொடுத்தேன் என்பதால் பெருமையோடு சொல்லிக்கொள்கின்றேன்.

### எம்.ஜி.ஆர். சிலையைத் திறந்துவைக்கும் வாய்ப்பு

1990-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். பல்கலைக்கழக முதல் பட்டமளிப்பு விழாவில், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நான் உரையாற்றினேன். அதற்குப் பிறகு, 1997-ஆம் ஆண்டு இந்தப் பல்கலைக்கழகத்தின் 7-வது பட்டமளிப்பு விழா உரையையும் நானேதான் ஆற்றியிருக்கின்றேன். இன்றைக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் சிலையையும் திறந்துவைக்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கின்றேன். இந்தக் கட்டடத்தைத் திறந்துவைக்க வந்துள்ள நம்முடைய மேன்மை தங்கிய இந்திய குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் நமக்குப் புதியவர் அல்ல. சொல்லவேண்டுமேயானால், நம்முடைய தமிழகத்திலே சில நாட்கள் ஆளுநராக இருந்தது மாத்திரமல்ல, கடந்த 1997-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22-ஆம் நாள் சட்டப்பேரவையிலே ஆளுநர் உரையை அவரேதான் ஆற்றியிருக்கின்றார்.

இந்த நேரத்திலே, அன்று அவர் ஆற்றிய உரையினுடைய ஒரு பகுதியை நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன்:

"அனைவருக்கும் அடிப்படை சுகாதாரம் அளித்தல், கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை உறுதி செய்யும் நோக்கத்துடன் வட்ட மருத்துவமனைகளுக்கும், ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் தேவையான கருவிகளையும் பிற வசதிகளையும் பெருமளவில் அளித்துள்ளோம். ஏற்கெனவே, அறிவித்தபடி, 300 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ரூ.18 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 97-98 ஆம் ஆண்டில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்படும். கிராமப்புற மக்களுக்கு நாள்முழுவதும் மருத்துவ வசதி கிடைக்கும் வகையில், மாநிலம் முழுவதும் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கும்படி ஆணையிடப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் ஒரு மாபெரும் போலியோ தடுப்புத் திட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றது. அனைவருக்கும் மருத்துவ வசதி என்ற இலக்கை கி.பி.2000-ஆம் ஆண்டுக்குள் அடைந்துவிட வேண்டுமென்பதில் இந்த அரசு உறுதிபூண்டுள்ளது".

- என்று அன்றைக்கு நம்முடைய இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் அவர்கள், தமிழகத்தின் ஆளுநராக வீற்றிருந்தபொழுது, ஆற்றிய உரையைத்தான் இங்கே நினைவுபடுத்தினேன். அவர் ஆற்றிய உரையிலே தெரிவிக்கப்பட்டுள்ள அந்த விருப்பத்தை, இந்த அரசு நிச்சயமாக நிறைவேற்றும். நிறைவேற்றுவதற்கு இங்கே குழுமியிருக்கின்ற உங்கள் அத்தனைப் பேருடைய ஒத்துழைப்பும் தேவை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மீண்டும் ஒருமுறை சொல்கின்றேன். இன்றைக்கு ஏதோ திடீரென்று புதிதாக அருமை நண்பர் எம்.ஜி.ஆருடைய பெயரால் உள்ள பல்கலைக்கழகத்தினுடைய திறப்புவிழாவை இந்த அரசு நடத்தவில்லை. இங்கே அமர்ந்திருக்கின்ற தம்பி திருநாவுக்கரசு, அறந்தாங்கியிலே என்னை அழைத்து எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையை திறந்துவைக்கச் செய்தார். இங்கே இருக்கின்ற நம்முடைய அருமைச் சகோதரர் ஆர்.எம்.வீ. கோபிச்செட்டிப்பாளையத்திலே என்னை அழைத்து எம்.ஜி.ஆர். சிலையை திறக்கச் செய்தார். யாரும் அழைக்காமல் நானே எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் எம்.ஜி.ஆர். சிலையை திறந்துவைத்திருக்கின்றேன். அடுத்து இன்னும் சில இடங்களிலே சிலை திறப்பு விழாவிற்கான அழைப்புக்கள் வந்துகொண்டிருக்கின்றன என்பதை எடுத்துச்சொல்லி என்னுடைய நீண்ட கால நண்பரும், நானும் அரசியலில் எவ்வளவு மாறுபாடுகள் இருந்தாலுங்கூட, நாற்பது ஆண்டு கால நண்பர்கள் என்கின்ற முத்திரையோடு பழகிய நாங்கள், இடையிலே எங்களுக்குள் ஏற்பட்ட மனக்கசப்புகளையெல்லாம் பொருட்படுத்தாமல், நாகரிகத்தோடு, தமிழகம் கட்டிக் காக்க வேண்டிய கலாச்சாரத்தோடு எப்படிப் பழகினோமோ, அந்தப் பண்பாட்டைத் தமிழர்கள் அனைவரும் பெறவேண்டும்.

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டார்

நிகழ்ச்சித் தொகுப்பு : பி.எல்.ஆர்.

★ ★ ★



# 'பார் புகழும் பன்னிருவர்!


அந்நிய ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை தர்பாரை எதிர்த்து நின்று - "என்று தணியும் இந்தச் சுதந்திரத் தாகம்" என்று - அன்று குரல் கொடுத்தோர், கொதித்தெழுந்தோர், கண்டனங்களுக்கும், கசையடி போன்ற தண்டனைகளுக்கும் ஆளானோர் ஏராளம், ஏராளம்! அவர்களில் பலரும் கடுஞ்சிறை ஏகினர்; சொத்து சுகங்களையெல்லாம் தியாகம் செய்தனர்; இன்னுயிர் துறக்கவும் முன்னின்று, நாமெல்லாம் ஆனந்த சுதந்திரத்தை அடைந்திடச் செய்தனர். இந்திய அளவிலே மட்டுல்ல; தமிழ்நாட்டளவில் பார்த்தாலும் அத்தகைய சுதந்திரப்போர் வீரர்களின் பட்டியல் நீளும்; அத்தகையவர்களில் குறிப்பாகப் பன்னிருவரை மட்டும் இரத்தினச் சுருக்கமாக நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார் கட்டுரையாசிரியர்.

### வீரபாண்டிய கட்டபொம்மன்

வீரபாண்டிய கட்டபொம்மன் 3-1-1760ல் பிறந்து, 2.2.1790ல் 96 கிராமங்களைக் கொண்ட பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின் அரசனாகி அந்நியருக்கு வரிசெலுத்த மறுத்துப் போர் புரிந்தான்;

பிறகு நயவஞ்சகரால் காட்டிக் கொடுக்கப்பட்டான்.16-10-1799 ல் கயத்தாறில் தூக்கிலிடப்பட்டான்.

39 ஆண்டுகளே வாழ்ந்த அவன், அடக்குமுறைக்குச் சிறிதும் அடிபணியாமல் துடித்தெழுந்து கொக்கரித்தவன். தோள்தட்டியவன் இந்திய விடுதலைக்கு வித்திட்டோரில் முதல் குரல்கொடுத்தவனாகத் திகழ்ந்தான். மானத்தை இழந்து வாழ்வதைக் காட்டிலும் வீரத்தோடு போரிட்டுச் செத்துமடிவதே மேல் எனக் கடைசி மூச்சுவரையில் கர்ஜித்தான். அதேபோல் வாழ்ந்தும் காட்டினான்.



இன்றில்லையெனினும், பாஞ்சாலங் குறிச்சியில் அரசு எழுப்பியுள்ள புதிய கோட்டை, என்றும் அவன் பேர் சொல்லும்!

### மாவீரன் பூலித்தேவன்

உயிரிழக்க நேர்ந்தாலும் சரி; ஒரு மணி நெல்கூட வெள்ளையனுக்கு வரியாகச் செலுத்த முடியாது என்று ஆதிக்க ஆட்சிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய மாவீரன் பூலித்தேவன்; நெல்கட்டும் செவ்வலில் பிறந்த பூலித்தேவன் வீரமறவன். போர்க்குணம் படைத்தவன்; நேர்மை, ஒழுக்கத்தில் சிறந்தவன்; ஏழைப் பங்காளன் என்றெல்லாம் பாராட்டப்பட்டவன்.

''ஆங்கிலேயர்கள் ஆயிரம் வலிமை படைத்தவர்களாக இருக்கலாம். ஆனால் என் நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும் இருக்கும் வரையிலே தாய்நாட்டிற்காகப் போராடியே தீருவேன்; அடிமை விலங்கை அறுத்தே வீசுவேன்" எனச் சூளுரைத்தவன் பூலித்தேவன்.

முதன் முதலாக 1755ஆம் ஆண்டே, கொள்ளையராம் வெள்ளையராட்சிக்கு எதிராகக் குமுறும் எரிமலைபோல் வெடித்த, அவன் எழுப்பிய வீரமுழக்கம்தான் மற்ற எல்லோருக்குமே வழிகாட்டியாகி, ஆங்கிலேயரை எதிர்த்து நிற்குமள்விற்கு எழுச்சிகொள்ளச் செய்தது,

மாவீரன் பூலித்தேவன் எல்லோருடைய நெஞ்சிலும் மட்டுமல்ல; இந்தியாவின் விடுதலைப்போர் வரலாற்றிலும் நிலைத்து நிற்பான்.

### கம்மந்தான் யூசுப்கான்

இராமநாதபுரம் மாவட்டம் பனையூரில் பிறந்தவன் யூசுப்கான். பிறப்பால் இந்துவாக இருந்த அவன், முகமதியனாக மதம் மாற்றப்பட்டதால் யூசுப்கான் என்று அழைக்கப்பட்டான்.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று எல்லாம் அவனிடம் மேலோங்கி இருந்த காரணத்தால், ஆங்கிலேயர் அவனுக்குப் பட்டம் பதவியெல்லாம் கொடுக்க முன்வந்தும் கூட, அவர்களிடமிருந்து விலகி, தாய்நாட்டிற்காக அவர்களை எதிர்த்துப் போரிட்டான். 1764 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாள் - எந்த ஆங்கிலேயர்களால் பாராட்டும் பரிசும் தருவதாக ஆசைகாட்டப்பட்டானோ, அவர்களாலேயே யூசுப்கான் தூக்கிலிடப்பட்டான்.

### வீரமங்கை வேலுநாச்சியார்

மதுரையை ஆண்ட ராணி மங்கம்மாளுக்குப் பிறகு 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய வேலுநாச்சியார் தமிழகத்தின் வீரமங்கையாக விளங்கினார். வடக்கே ஜான்சிராணி தோன்றுவதற்கு முன்பே, தமிழகத்தில் தலைநிமிர்ந்து நின்ற வீரப்பெண்மணி வேலுநாச்சியார்.

ஏறக்குறைய 22 ஆண்டுகள் சிவகங்கைச் சீமையை முத்துவடுகநாதர் ஆண்டு வந்தார். அவருக்கு உதவியாக வாளேந்திப் போர்புரிவதில் வல்லவராக விளங்கியவராக மட்டுமன்றி

நல்லாட்சி நடைபெற இவர் துணைபுரிந்தார். தாய்நாட்டுப் பற்றும், மக்கள் நலம் நாடும் மனப்பாங்கும் கருத்தில் கொண்டு செயல்பட்டார்.

இந்திய விடுதலையின் தொடக்க கால வரலாற்றை ஆராயும்போது, கர்னல்ஸ் மித்துடன் வீரமங்கை வேலுநாச்சியார் செய்தபோர், ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடும் வீரம்மிக்க பெண்மணி ஒருவரைத் தமிழகம் பெற்றுவிட்டது என்ற பெருமை மிக்க வரலாற்றினை உருவாக்குவதாக இருந்தது.

## தில்லையாடி வள்ளியம்மை

சொந்தவாழ்க்கையைப் பெரிதெனக் கருதாமல், தாய்நாட்டுப் பற்றின் காரணமாக காந்தியடிகள் தலைமையில், பொதுத் தொண்டில் ஈடுபட்டு பதினாறு வயதிலேயே தன் வாழ்க்கையை முடித்துக் கொண்ட தில்லையாடி வள்ளியம்மை அவர்களின் வாழ்க்கை வரலாறு காலத்தால் அழிக்கமுடியாத வீரகாவியம் ஆகும்.

இவருடைய பெற்றோர், பிழைப்புக்காகத் தென்னாப்பிரிக்காவில் ஜோகன்ஸ்பர்க் என்னும் நகரில் வாணிபம் செய்யச் சென்றிருந்தபோது அங்கு பிறந்த பெண்தான் இவர். தஞ்சை மாவட்டம் தில்லையாடி இவர்களுக்குச் சொந்த ஊர்.

அச்சமயம், தென்னாப்பிரிக்காவை ஆண்ட வெள்ளையர்கள் கறுப்பரையும், இந்தியரையும் கொடுமைப்படுத்தினர். அதை எதிர்த்து காந்தியடிகள் நடத்திய அறப்போராட்டத்தில், பதினாறு வயது இளமங்கை வள்ளியம்மை கலந்து கொண்டு பலரும் வியக்கும் வண்ணம் போராடினார். போராட்டத்தின்போது வெள்ளையன் ஒருவன் காந்தியைச் சுடமுயன்றபோது, வள்ளியம்மை காந்தியின் முன்நின்று தன்னைச் சுடுமாறு வீரமுழக்கமிட்டார். காந்தியடிகளோடு அறப்போராட்டத்தில் கலந்துகொண்டு வள்ளியும் சிறை சென்றார். சிறையில் நடந்த கொடுமையால் நோய்வாய்ப்பட்டு 1914ஆம் ஆண்டு பிப்ரவரி 22ஆம் நாள் இவர் மரணமடைந்தார்.

## வீரநெஞ்சன் வாஞ்சிநாதன்

அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு மக்களைக் கொடுமைப்படுத்திய திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷ்துரையை மணியாச்சி ரயில் நிலையத்தில் துப்பாக்கியால் சுட்டுக்கொன்று, தன்னையும் மாய்த்துக் கொண்டவன் வீரவாஞ்சிநாதன்.

நாட்டுப்பற்றும், விடுதலை வேட்கையும் கொண்ட காரணத்தால் தாம் பார்த்துவந்த அரசுப் பணியையும் விட்டுவிட்டு, விடுதலைப்போரில் ஈடுபட்டு, வ.வே.சு ஐயரிடம் துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்றவர்.


அப்போது திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் பொறுப்பிலிருந்த ஆஷ்துரை, இந்திய மக்களுக்கு இழைத்த கொடுமைகள் கணக்கிலடங்காது. வ.உ.சி. மீது குற்றம் சுமத்தி நாற்பதாண்டு சிறை தண்டனை விதிக்கக் காரணமாக இருந்தவன் ஆஷ்துரை, ஆட்டுத்தோலைக் கையால் கழுவும் கடினமான வேலைகளையெல்லாம் செய்வதற்குச் சுப்பிரமணிய சிவாவுக்கு ஆணையிட்டவன்; அவருக்குப் பத்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கக் காரணமாக இருந்தவன்.

இதுபோன்ற பல கொடுமைகளைப் பொறுக்காத நிலையிலேதான் வாஞ்சிநாதன் துப்பாக்கியேந்தினான். ''உயிர் எனக்கு வெல்லமல்ல'' என்று சொல்லாமல் சொல்லி, விடுதலைக்காக வீரமரணமடைந்த ''அஞ்சா நெஞ்சன் வாஞ்சிநாதன்'' இந்திய சுதந்திர வரலாற்றின் வீரச்சின்னம்.

## மூதறிஞர் இராஜாஜி

''மூதறிஞர்'' எனப் போற்றப்படும் ராஜாஜி, சேலத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி, பின்பு சேலம் நகராட்சித் தலைவரானார். தீண்டாமை ஒழிப்பு கலப்புத் திருமணம் போன்றவற்றில் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

காந்தியடிகள் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து, தடை உத்தரவை மீறி வெள்ளையர்களால் சிறையிலடைக்கப்பட்டார். 1930ஆம் ஆண்டு தமிழகத்தில் - வேதாரண்யத்தில் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி, நடத்தியதால் சிறையிலடைக்கப் பட்டார். தமிழகம், கர்நாடகம், கேரள, ஆந்திரா ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய சென்னை மகாணத்திற்கு 1937ல் முதலமைச்சரானார். 1939ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போரின் போது, அமைச்சரவையைக் கலைத்துவிட்டு ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பிரச்சாரம் மேற்கொண்டதால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.



1947ஆம் ஆண்டு இந்தியா விடுதலை பெற்றதும் இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரல் ஆனார். பொதுவாழ்வில் நேர்மையைக் கடைப்பிடித்தவர். சிறந்த எழுத்தாளர். செயல் திறன் மிக்கவர். 'பாரத ரத்னா' விருது பெற்றவர்.

1972ம் ஆண்டு டிசம்பர் 25ம் நாள், ராஜாஜி தமது 94வது வயதில் இயற்கை எய்தினார்.

## தேசியகவி பாரதியார்

திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் பிறந்த பாரதியார், நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் பெற்று, எழுச்சியூட்டும் கவிதைகளை இயற்றி, தமிழகத்தை விழிப்புறச் செய்தமையால் ''தேசிய கவி'' என அழைக்கப்பெற்றார்.

ஒரு தாயின் வயிற்றில் பிறந்த நாமெல்லாம் சகோதர பாசத்தோடு வாழவேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

''சுதேசமித்திரன்'', ''இந்தியா'' போன்ற நாளிதழ்களில் பணியாற்றி, கனல்தெறிக்கும் கட்டுரைகளும் எழுதி மக்களிடையே விடுதலை உணர்வை வளர்த்தார். விடுதலை இயக்கத்தில் தீவிரப் பங்குகொண்டு ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு இலக்காகி, கடலூரில் கைதுசெய்யப்பட்டு 34 நாட்கள் சிறையிலிருந்தார்.

தமிழ் உயராதவரை தமிழர்களால் உயர்வடைய முடியாது; தமிழில் பிற மொழி கலப்பது தீது என்றெல்லாம் கரும்புநிகர் கவிதைகளில் அவர் கூறியிருப்பதிலிருந்தே அவருடைய தமிழ்ப்பற்றும், தமிழ்நாட்டுப்பற்றும் எத்தகையது என அறியலாம்.

1921ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ஆம் நாள், தனது 39ஆம் வயதில் சென்னை மாநகரில் இயற்கை எய்தினார்.

## தந்தை பெரியார்

தமிழகத்தின் முற்போக்குச் சிந்தனையாளர்களின் முன்னோடியான தந்தை பெரியார். ஜாலியன்வாலாபாக் படுகொலையைக் கண்டித்து தாம் ஏற்றிருந்த ஈரோடு நகராட்சித் தலைவர் பதவியினையும் துறந்து, காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து சிறைபுகுந்த பெருமையாளர். கதரியக்கத்திலும் முன்நின்று பாடுபட்டவர். மதுவிலக்குக் கொள்கையை ஆதரித்து, தமக்கு உரிமையான தென்னந்தோப்பிலிருந்த 500க்கும் மேற்பட்ட தென்னைமரங்களை வெட்டித் தள்ளச் செய்தார்.



பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தார். மூட நம்பிக்கைகளைக் களைந்தார். கலப்புத் திருமணத்தை ஆதரித்தார். தமக்குச் சரியெனெப்பட்டதை எதிர்ப்புகளுக்குக் கவலைப்படாமல் துணிவுடன் எடுத்துரைத்தார்.

மனிதர்கள் எல்லோரும் சமம் என்பதை வலியுறுத்த, கேரளத்தில் உள்ள வைக்கத்திற்குச் சென்று போராடி, "வைக்கம் வீரர்" என்று புகழ்பெற்றார். "வெண்தாடி வேந்தர் என்றும், பகுத்தறிவுச் சிங்கம்" எனவும் புகழ்பெற்ற பெரியார் 1973ஆம் ஆண்டு தமது 94ம் வயதில் இயற்கையெய்தினார்

## கொடிகாத்த குமரன்

நாட்டுப்பற்று மிக்கவர் திருப்பூர் குமரன். குடும்பச் சுமையும், பொறுப்பும் ஒருபக்கம் இருப்பினும் விடுதலை வேட்கையால் உந்தப்பட்டுத் திருப்பூரில் தொடங்கப்பெற்ற அறப்போராட்டத்தில் பங்கேற்று, பின்னர் போராட்டக் குழுவிற்கே தலைமை ஏற்றார்.

காந்தியடிகள் 1932ஆம் ஆண்டு சனவரி 4ஆம் நாள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, திருப்பூரில் பெற்றோரையும் இளம் மனைவியையும் பிரிந்து கையில் கதர்க்கொடி ஏந்தி, தொண்டர் படைக்குத், தலைமை தாங்கிச் சென்று வெள்ளையர்களுக்கு எதிராகக் கோஷம் போட்டுக்கொண்டு திருப்பூர் வீதிகளில் இருபக்கமும் திரண்ட மக்களின் நடுவில் சென்றார்.

தொண்டர்படையைக் கண்டதும் காவலர்கள் முறைப்படி எச்சரிக்கை ஏதும் செய்யாமல், எடுத்த எடுப்பிலேயே தடியால் தாக்கத் தொடங்கினர். குமரன் தலையில் பலத்த அடி விழுந்தது, தேசியக் கொடியைக் கையில் ஏந்தியவாறே அவர் மயங்கி கீழே விழுந்தார். எனினும், கொடி அவர் கரத்திலிருந்து நழுவவில்லை. இரத்தம் சொட்டச் சொட்டக் குமரனை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்; பயனில்லை. 1932 ஆம் ஆண்டு சனவரி 11ஆம் நாள் கொடிகாத்த குமரன் உயிர்நீத்தார்.

நாட்டின் விடுதலை வரலாற்றிலிருந்து அந்த வீர இளைஞன் பெயர் என்றும் மறையாது.

## பொதுவுடைமைச் செம்மல் ஜீவானந்தம்

நாட்டுத் தொண்டுக்காகக் காந்தியடிகளையும், சமூகத் தொண்டிற்காகப் பெரியாரையும், வழிகாட்டிகளாகக் கொண்டு பொதுத் தொண்டாற்றியவர் ப.ஜீவானந்தம்.

தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவர். பல்வேறு நூல்களைப் படித்து அறிந்தவர்; இலக்கியப் பேருரைகள் நிகழ்த்தியவர்.

சுதந்திரப்போரில் ஈடுபட்டு அந்நியர் ஆடைகளைப் புறக்கணிக்கும் போராட்டத்தில் இறங்கி, தான் கட்டியிருந்த அந்நிய ஆடைகளைக் கழற்றித் தீயில் எறிந்தவர். அன்று முதல் அவர் கதராடையையே உடுத்தத் தொடங்கினார்.

அவர் அன்னையார் இறந்தபோது அவருக்குக் கட்டுவதற்காகக் கதராடை கொடுக்காமல், மில் ஆடை கொடுத்தனர். அதனால் அவர் கொள்ளி வைக்கவே மறுத்துவிட்டார்.



1932ஆம் ஆண்டு சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டு, தடையுத்தரவை மீறியதற்காகக் கைதாகி சிறையில் அடைக்கப் பட்டார். பிற்காலத்தில் தீவிர கம்யூனிஸ்ட் ஆக வாழ்ந்த அவர், எளிமையின் சின்னமாகவும், நேர்மையின் உறைவிடமாகவும் திகழ்ந்தார்.

எல்லாக் கட்சியினரும் போற்றிப் பாராட்டும் வண்ணம் தூய வாழ்க்கை வாழ்ந்த ஒழுக்கசீலர் ஜீவா, 1963ஆம் ஆண்டு சனவரி 18ஆம் நாள் தமது 56 வயதில் இயற்கை எய்தினார்.

## பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்

முத்துராமலிங்கத்தேவர் இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் என்ற சிற்றூரில் பிறந்த காரணத்தால், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் என்று அழைக்கப்பட்டார்.

இவர் பேச்சும், மூச்சும் விடுதலை முழக்கமாகவே இருந்தது. இவருடைய நாட்டுப்பற்று, துணிவு, அஞ்சாநெஞ்சத்தைக் கண்ட சத்திய மூர்த்தி, அந்நாளில் இவருக்கு "காங்கிரஸைக் காத்தான்" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

தம் வாழ்நாளில் ஐந்தில் ஒரு பங்கைச் சிறையில் கழித்தவர் இவர். நம்நாடு விடுதலை அடைவதற்கு முன்பும், பின்பும் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் தொகுதிக்குச் சொல்லாமலேயே மக்களின் பெருவாரியான ஆதரவைப்பெற்று இருமுறை நாடாளு மன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆங்கில ஆட்சியில் மக்களை அடக்கி ஒடுக்கக் கொண்டுவரப்பட்ட "குற்றப் பரம்பரைச் சட்டம்" கைவிடப்படவேண்டும் என இறுதிவரை போராடி வெற்றிபெற்றார்.

தாம் கற்ற கல்வியும், பெற்ற செல்வமும் பிறர்க்குதவும் பொருட்டே என்ற பெரு நோக்குடன் வாழ்ந்தவர்.

வசதியற்ற ஏழைகட்குத் தம்முடைய நிலங்களைக் குறைவான குத்தகைக்குக் கொடுத்ததுடன், பலரிடம் குத்தகை வாங்காமல் வாழவைத்தார். நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று கொண்ட இவரின் புகழ், சுதந்திர இந்தியாவில் சுடர்விடுவதாகும்.

**- ஆர்.வி.எஸ்.மணியன்**

### செய்ய வேண்டிய கடமை

*முதலில் பணியக் கற்றுக் கொள்ளுங்கள்; பிறகு எஜமானன் ஆவதற்கான தகுதியைப் படைத்தவர்களாவீர்கள்!*

*பொறாமையை நீக்குங்கள்; இதுவரை நீங்கள் செய்திருக்காத மகத்தான காரியங்களைச் செய்வீர்கள்!*

**- விவேகானந்தர்**

# விமோசனம்

பேராசிரியர் மா.ரா. அரசு

மதுவிலக்குப் பிரசாரப் படங்களை ஒவ்வொன்றாக விரித்து விளக்கு வெளிச்சத்தில் ஒருவர் காட்ட, இன்னொருவர் அதைச் சுட்டிக்காட்டி விளக்கிப் பேசியது கிராமவாசிகளின் மனதில் நன்றாகப் பதிந்தது.

விமோசனத்தில் வெளியான படத் தொகுதிகளில் ஒரு குறிப்பிட்ட தொகுதியைக் கிராம வாசிகள் - முக்கியமாகப் பெண்கள் - மிகவும் ரசித்துச் சிரிப்பார்கள். அந்தப் படத்தொகுதியில் சட்டைபோட்ட மனிதன் ஒருவன் ஒரு சாராயப் புட்டியை முதலில் ஒரு குதிரையிடம் நீட்டுகிறான். குதிரை குடிக்க மாட்டேன் என்கிறது. பிறகு மாட்டிடம் போகிறான். மாடும் வேண்டாம் என்கிறது. பிறகு நாய் குடிக்க மறுக்கிறது. பன்றிகூட வேண்டாம் என்று மறுதளிக்கிறது. கடைசியில் அந்தச் சட்டைக்காரன் ஒரு கிராமத்துக் குடியானவனிடம் கொண்டுபோய் புட்டியை நீட்டுகிறான். அவன் அதை வாங்கிக் குடிக்கிறான்.

"நாயும், பன்றியும் கூட விஷம் என்று குடிக்க மறுக்கும் மதுவை மனிதன் குடிக்கிறான், பார்த்தீர் களா? என்று படத்தைச் சுட்டிக் காட்டிப் பிரசங்கி சொன்னதும் கூட்டத்தில் உள்ள ஸ்திரிகள் எல்லாரும் சிரிப்பார்கள். ஆண்களில் சிலர் சிரிப்பார்கள். இன்னும் சிலர் "ஆமாம்; அது வாஸ்தவம்தானே ?" என்பார்கள்.

இப்படியெல்லாம் கிராமவாசி களின் மனதில் படும்படி பிரசாரம் செய்யும் முறை ராஜாஜியின் மனதிலேதான் முதன் முதலாக உதித்தது; மேற்படி மதுவிலக்குப் படங்கள் பின்னால் அச்சிடப்பட்டு, தொகுதி தொகுதியாகப் பல இடங்களுக்குப் பிரசாரங்களுக்காக அனுப்பப்பட்டன.

## உப்புப் போரில் கருத்துப் படங்கள்

ராஜாஜியின் தலைமையில் 13-4-1930ல் திருச்சியிலிருந்து திருமறைக்காட்டிற்கு (வேதாரண்யம்) உப்பு எடுக்கப் புறப்பட்ட அறப்போர்க்குழு வழிநடைப் பயணத்தில் மதுவிலக்குப் பணியிலும் ஈடுபட்டது.

ஸ்ரீமான் ஆச்சாரியார் அவர்களுக்குப் பிராணன் போலுள்ள மதுவிலக்குப் பிரசாரம் எல்லாவற் றிலும் முதன்மையாகச் செய்யப் பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் போய்த் தங்கியவுடன் காந்தி ஆசிரமத்தார் வெளியிட் டிருக்கும் மதுவிலக்குப் படங்களை வரிசை யாகக் கட்டித் தொங்க விடுவது வழக்கம். படங்களைக் கட்டினவுடனே ஜனங்கள் கூடி அதிக ஆவலுடன் அவைகளை ஒன்றன்பின் ஒன்றாய்க் கவனித்துப் பார்ப்பார்கள். அவர்களுக்கு அப்படங்களை விளக்கி மதுபானத் தீமைகளைத் தொண்டர்கள் எடுத்துச் சொல்வார்கள்.

கிராமத்தில் எல்லோரும் இந்தப் பிரசங்கங்களைக் கேட்கவும் மதுவிலக்குப் படங்களைப் பார்க்கவும் மிக்க ஆவலுடனும் உற்சாகத்துடனும் காத்தி ருந்தார்கள். முக்கியமாக ஆதிதிராவிடச் சகோதரிகளும், குழந்தைகளும் திரள்திரளாகச் சித்திரை மாதத்து வெயிலையும் கவனியாது இக் கூட்டங்களுக்கு வந்திருந்தார்கள். பிரசங்கத்தின் முடிவில் அனேகமாய் எல்லா இடங்களிலும் ஒருசிலராவது 'இன்று முதல் கள், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களைத் தொடுவதில்லை' என்று ஆண்டவன் சாட்சியாகச் சத்தியம் செய்து கொடுத்து வந்தனர்".

குடித்துக் கெட்டவன் குடும்பத்தின் அவலட்சணமான காட்சியும், யோக்கியமாய் இருந்த குடும்பத்தின் சந்தோஷமும் தேஜசும் விளக்கிக் காட்டும் படங்களென்ன? மதுபான வகைகள் அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கணக்கைத் தெரிவிக்கும் படங்களென்ன! இன்னும் மதுவிலக்கு சம்பந்தமாகப் பொதுஜனங்கள் மனத்தில் என்னென்ன விஷயங்கள் பதிய வேண்டுமோ அவற்றைச் சுலபமாக மனத்தில் பதியும்படி புகட்டக் கூடிய முறையில் படங்கள் வரையப் பட்டிருந்தன.

தலைவர் ராஜாஜி படங்கள் கட்டியிருந்த இடத்திற்கு வந்து ஒவ்வொரு படத்திலும் உள்ள தாத்பரியங்களை எடுத்து விளக்கிவந்தார்.

## மதுவிலக்குப் படங்கள்

விமோசனத்தில் வெளியிடப்பட்ட கருத்துப்படங்களின் நடைமுறைப் பயன்பாடு இன்னொரு விதத்திலும் அமைந்தது. அந்தக் கருத்துப் படங்கள் விற்பனைக்கு உரியன வாகவும் ஆக்கப்பட்டன; மதுவிலக்குப் பிரசாரத்திற்கு அவை ஊன்றுகோலாயின.

கருத்துப் படங்கள் (மதுவிலக்குப் படங்கள்) பற்றி விமோசனத்தில் (இதழ் 8, இதழின் பின்அட்டை வந்த அறிவிப்பு அறிய வேண்டிய ஒன்றாகும்).

கல்வியறிவு அதிகமில்லாத நாட்டில் எவ்விதப் பிரசாரமும் செய்வது மிகவும் கஷ்டமான காரியம். புத்தகங்களும், துண்டுப் பிரசுரங்களும் சொற்ப அளவேதான் நமது நாட்டில் பயன்படக்கூடும். ஆனால், சித்திரப் படங்கள் காட்டிப் பிரசாரம் செய்வதில் நல்ல பயன் உண்டாவது அனுபவத்தில் தெரிய வந்திருக்கிறது.

விளக்கப் படங்கள் காட்டிப் பிரசாரம் சில இடங்களில் நடைபெறுகின்றது. மங்கலாய்த் தோன்றும் இவ்விளக்குப் படங்கள் கிராமவாசிகளுக்குத் தெளிவாய் விளங்குவதில்லை. கருவிகள் நடுவில் கெட்டுப் போனாலோ எல்லாம் நிறுத்த வேண்டியதுதான்.

நமது கிராமங்களில் நல்ல பயன்தரக்கூடிய முறை, பெரிய படங்கள் காட்டிப் பிரசாரம் செய்வதேயாகும். இதற்கு உபயோகமான மதுவிலக்கு வர்ணப்படங்கள் இப்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. சீக்கிரத்தில் அவை விற்பனைக்குத் தயாராகும். சுமார் 30 படங்கள் கொண்ட ஒரு தொகுதியின் விலை ரூ.15-0-0. படங்களைத் துணியில் ஒட்டி, அவைகளை மாட்டுவதற்குரிய சட்டம், கம்பி முதலியவைகளுடன் சேர்ந்து வேண்டுமானால் விலை ரூ.30-0-0. விலாசம் காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு.

விமோசனம் இதழ் வெளிவந்து, இன்று ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் ஆகின்றன. இன்றளவும் மதுவிலக்குப் பிரசாரம் என்பது தவிர்க்க இயலாததொரு சமுதாயத் தேவையாகவே இருந்து வருகிறது. கடந்த காலத்தில் ராஜாஜியின் சிந்தனையில் முகிழ்த்து விமோசனத்தில் மலர்ந்த கருத்துப் படங்கள் நிகழ்காலப் பயன்பாட்டிற்கும் உரியனவாகி விற்பனைக்குக் கிடைக்கின்றன.

எங்கெல்லாம், எப்போதெல்லாம் 'குடி' சமுதாயத்தில் ஊடுருவுகிறதோ அங்கெல்லாம், அப்போதெல்லாம் விமோசனக் கருத்துப் படங்கள் உயிர்த்தெழும் என்பதையே அவற்றின் இன்றைய விற்பனை உணர்த்துகிறது.

மதுவின் பிடியில் சிக்குண்டு சிதைந்து கொண்டிருந்த ஏழை மக்களின் வாழ்க்கையை மீட்க, ஒல்லும் வகையெல்லாம் செயல்பட்ட ராஜாஜி, இதழின் ஒரு பகுதியாக

# வி மோ ச ன ம்

| தொகுதி 1 | சுக்லஹூ ஆவணிமீ | பகுதி 1 |
| --- | --- | --- |



ஜய பேரிகை கொட்டடா—கொட்டடா
ஜய பேரிகை கொட்டடா !
காந்தியின் ஒளியிடைக் குளித்தோம்—கள்ளின்
மாயத்தையறிந்தகண் விழித்தோம் !
தீர்ந்தது தரித்திரம் தொலைந்தது துயரம்
தீய கள் அரக்கனை யடித்தோம் ! (ஜய)

[பாரதியாரின் இசை]

விளங்கும் கருத்துப் படங்களைப் பல புதிய கோணங்களில் அணுகியுள்ளமை வியப்பையும் மலைப்பையும் ஏற்படுத்துகிறது.

விமோசனம் இதழை நடத்திக் கொண்டிருந்தபோதே சிறுசிறு வெளியீடுகளைத் தயாரித்து அவற்றை விற்பனைக்கு உரியனவாக்கினார். "பார்த்தாயா தம்பி!" "குடிப்பது கள்ளல்ல!' என்னும் தலைப்புகளில் அமைந்த இரு வெளியீடுகள் இங்குக் குறிக்கத்தக்கன. இரண்டுமே விமோசனத்தில் வெளிவந்த இரு கருத்துப் படங்களின் தலைப்புகள் (இதழ் ஒன்று, ப.27; இதழ் மூன்று ப.92).

"சித்திரப் படங்கள் உள்ள மேற்படி துண்டுப் பிரசுரங்கள் ஒரளவிற்குட்பட்டு மதுவிலக்குத் தொண்டர்களுக்கு இலவசமாய் அனுப்பப் பெறும்" என்னும் அறிவிப்பில் உள்ள 'சித்திரப் படங்கள் உள்ள மேற்படி துண்டுப் பிரசுரங்கள்' என்னும் பகுதி கருதத்தக்கது. இந்த அறிவிப்பு மட்டுமே இதழ்கள் எட்டு, ஒன்பது, பத்து ஆகியவற்றில் மட்டுமே இடம் பெற்றுள்ளது.

ஒன்று முதல் ஏழு வரையிலான இதழ்களில் வெளிவந்த கருத்துப் படங்களின் தொகுப்பாகவே இவ்விரு வெளியீடுகளும் அமைந்திருக்க வேண்டும். இந்தக் கணிப்புப் பொருந்துமாயின், இதழில் வெளி வந்த கருத்துப் படங்களைத் தொகுத்து நூலாக வெளியிட்ட முதல் இதழாளர் (தமிழ் இதழ்களைப் பொறுத்த வரையில்) என்ற பெருமைக்கு உரியவராவார் ராஜாஜி.

கருத்துப்படம் என்பது ராஜாஜியைப் பொறுத்தவரையில் ஒரு தொடர் சிந்தனையாகவே இருந்து வந்தது. விமோசனம் நின்ற பிறகும், கால ஓட்டத்தில் பல்வேறு சூழல்களில் பல்வேறு பணிப்பொறுப்புகளில் இருந்தபோதும் மதுவிலக்கு என்பது அவர் நினைவில் நிலைத்திருந்தது. மதுவிலக்குத் தொடர்பான கட்டுரைகளும் நூல்களும் தமிழிலும், ஆங்கிலத்திலுமாக அவரால் எழுதப்பட்டு வந்தன. வாய்ப்பு அமைந்தபோதெல்லாம் விமோசனம் வெளியிட்ட கருத்துப் படங்களை அவற்றில் பயன்படுத்திக் கொண்டார். இதழ்

மறைந்தும், இதழ் வழி வந்த கருத்துப் படங்கள் அழியாத தன்மை பெற்றன.

'கள் ஒழிக' என்னும் நூலில், 'மதுவிலக்கு' என்னும் கட்டுரையின் தொடக்கத்தில் விமோசனத்தின் அட்டை ஓவியம் இடம் பெற்றுள்ளது. (ப.1) 'பொருள் நஷ்டம்' என்னும் கட்டுரையில் 'இது சீசா, அல்ல; மனைவி மக்களைச் சாகடிக்கும் யமன்' என்ற கருத்துப் படம் இடம் பெற்றுள்ளது. (பக்.15) இது விமோசனம் இரண்டாவது இதழில் (ப.41) உள்ளது. 'மிதக் குடிப்பேச்சு' - இந்தக் கட்டுரையில், இதழ் இரண்டில் (ப.64) 'மிதமாகக் குடிப்பவன் கதி' என்னும் தலைப்போடு அமைந்த கருத்துப் படம் பயன்படுத்தப்பட்டுள்ளது (ப.33). விமோசனம் இதழ் மூன்றில் வந்துள்ள 'வீட்டுக்குப் புட்டி வருவதற்கு முன்', 'புட்டி வந்த பின்' என்ற கருத்துப் படம் (ப.108), அபினி, கஞ்சா என்ற கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ளது. (ப.45). 'திருட்டுக் கள்ளும் பகிரங்கக் கள்ளும்' என்னும் கருத்துப்படம் (இதழ் நான்கு, ப.141), 'விதண்டா வாதங்கள்' கட்டுரையில் (ப.60) சேர்க்கப்பட்டுள்ளது.

`PROHIBITION' - மதுவிலக்குப் பற்றிய ஆங்கில நூல், ராஜாஜி எழுதியது. இதன் அட்டைப் படம், விமோசனத்தின் கருத்துப் படமாகும். (இதழ் மூன்று ப.81). மதுப்புட்டியை நோக்கி ஓடும் குடும்பத்தலைவனை அவன் மனைவியும் குழந்தைகளும் பின்னோக்கி இழுப்பதாக அமைந்த கருத்துப் படம் அது.

விமோசனத்தின் கருத்துப் படங்கள் இதழின் ஒரு பகுதியாக அமைந்து படிப்பவர் கவனத்தை ஈர்த்தன; அளவில் பெரியனவாக, வரையப்பட்டு கிராமம் கிராமமாக எடுத்துச் செல்லப்பட்டு மக்களுக்கு நேரடியாகக் குடியின் தீமையை விளக்குவதற்குப் பயன்பட்டுச் சிறந்தன; நாடு தழுவிய நிலையில் மதுவிலக்கு ஆர்வலர்களுக்குப் பயன்படும் நோக்கில் விற்பனைக்கு உரியனவாக்கப்பட்டு கருத்துப் படங்களை இவ்வாறெல்லாம் கூடப் பயன்படுத்த முடியும் என்று உலகிற்கு உணர்த்தி நின்றன; விமோசனம் வெறும் இதழாக இல்லாமல் இயக்கமாகச் செயல்படுவதற்கு முதன்மைக் காரணமாக அமைந்தன; அதனால் வரலாறு படைத்தன; கருத்துப்பட வரலாற்றில் தனித்துவத்தோடு நிலைத்தன.

## சிறுகதைகள்

விமோசனத்தின் பத்து இதழ்களிலும் மொத்தம் இருபத்தியொரு கதைகள் வெளிவந்துள்ளன. இவற்றில் ஆறு கதைகளில் எழுதியவர் பெயர் இல்லை. என்றாலும், ஆறில் மூன்று ராஜாஜி எழுதியவை என்று வேறு புறச்சான்றுகளின் மூலம் அறிய முடிகின்றது. எஞ்சிய பதினைந்து கதைகளை ஒன்பது பேர் எழுதியுள்ளனர். இவர்களில் கல்கிரா.கிருஷ்ண மூர்த்தியும், திஜரவும் குறிப்பிடத்தக்கவர்கள். கல்கி ஆறு கதைகளும், தி.ஜ.ர. ஒன்றும் எழுதியுள்ளனர்.

விமோசனம் வெளிவந்த காலம் இந்திய விடுதலைப் போராட்டத்திலும் தமிழ்ச் சிறுகதை வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க காலகட்டமாகும். இதில் சிறுகதை படைத்தவர்களில் ராஜாஜி, கல்கி, திஜ.ர. மூவரும் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் தடம் பதித்தவர்கள். ஏறக்குறைய சமகாலத்தில் எழுதத் தொடங்கியவர்கள்; பின்னாட்களில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்கள்.

இருபதுகளில் எழுதத் தொடங்கிய வர்கள் இவர்கள். அது தமிழ்ச்சிறுகதையின் ஆரம்ப காலம். வ.வே.சு.ஐயர், மாதவையா, பாரதியார் போன்றவர்கள் தமிழுக்குப் புதிய இலக்கிய வடிவமாகிய சிறுகதையை அறிமுகம் செய்த காலம். சிறுகதை இலக்கியவடிவம் முழுமையாகப் புரிந்து கொள்ளப்படாத தொடக்க காலத்திலேயே சிறுகதை எழுதியவர்கள் இவர்கள் என்பது நினைவில் இருத்த வேண்டிய செய்தியாகும். அந்தக் காலகட்டத்து உணர்வோடு பார்க்கப்பட வேண்டியவை இவர்கள் விமோசனத்தில் எழுதிய சிறுகதைகள்.

பத்து இதழ்களாக நானூறு பக்கங்களில் வெளிவந்த விமோசனத்தில் சிறுகதைக்கு ஒதுக்கப்பட்ட பக்கங்கள் 106 (102+4; சிறுகதை 102, புத்தஜாதகக் கதை 4) பத்து ஆசிரியர்களின் படைப்புகளாக 18 கதைகள் இடம் பெற்றுள்ளன. 3 கதைகளில் படைப்பாளர் இல்லை. புத்த ஜாதகக் கதை ஒன்றும் வெளியாகியுள்ளது. விமோசனம் இதழின் அடிப்படை நோக்கமான மதுவிலக்கின் பின்னணியிலேயே கதைகள் அனைத்தும் உருப்பெற்றுள்ளன.

விமோசனத்தில் வெளிவந்துள்ள இருபத்தியொரு கதைகளில் நல்ல கதைகள் பல உண்டு. அவற்றுள்ளும் 'ஜெயராமன் பள்ளிக்கூடம் போன கதை' (ராஜாஜி), 'தெய்வ யானை' (கல்கி) 'குப்பனின் பணி' (தி.ஜ.ரா.) ஆகிய மூன்றும் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் இடம்பெற்றவை. கதைப் பொருளாலும் உத்திகளாலும் காலம் கடந்து நிற்பவை. இந்த மூன்று கதைகளையும் வெளியிட்டதன் மூலம் விமோசனம் இதழ், சிறுகதை இலக்கியத்திற்கும் தொண்டாற்றியுள்ளது என்று பெருமை கொள்ளலாம்.

## கவிதைகள்


இந்த நூற்றாண்டின் எல்லா இலக்கிய வகைகளிலும் வடிவங்களிலும் ஏதாவது ஒரு வகையில் அறத்திறன் - நீதி போதனையின் ஆட்சியை உணரமுடியும். குடியால் நலிந்த குடும்பங்களுக்கு விமோசனம் உண்டு என்ற இனிய செய்தியை ஒலிக்கப் புறப்பட்ட விமோசனம் இதழும் இதற்கு விதிவிலக்கு அன்று. கவிதைகள் மூலமாகவும் குடிவேண்டாம் என்னும் நீதியை உணர்த்தும் பணியைச் செய்வதில் முனைப்பாக ஈடுபட்டது விமோசனம்.

## நாடகங்கள்

விமோசனத்தில் ஐந்து நாடகங்கள் வெளிவந்துள்ளன. ராஜாஜி ஒன்றும் கல்கி ஒன்றும், க.சந்தானம் இரண்டுமாக எழுதியுள்ளனர். ஒரு நாடகத்தில் எழுதியவர் பெயர் இல்லை.

ராஜாஜியும், கல்கி, சந்தானம் போன்றவர்களும் காந்தி ஆசிரமத்தில் வாழ்ந்த போது, ஆசிரமம் அமைந்திருந்த 'புதுப்பாளைய'த்திலும் அதை ஒட்டிய கிராமப் பகுதிகளிலும் வாழ்ந்த கல்வி அறிவு அற்ற பாமரமக்களின் அல்லல்கள் நிறைந்த வாழ்க்கையை நேரில் கண்டவர்கள்; ஆசிரமத்திலும் அதற்கு வெளியேயும் வாழ்ந்த மக்களோடு கலந்து பழகியவர்கள்; உள்ளும் புறமுமாக அவர்களை உணர்ந்தவர்கள்.

அந்த ஏழை எளிய அப்பாவி மக்களின் வாழ்க்கையை அலைக்கழித்துச் கொண்டிருந்த குடியின் பிடியிலிருந்து மீண்டால் அன்றி அவர்கள் வாழ்க்கையில் இன்பம் மலராது என்ற உண்மையை நன்கு அறிந்தவர்கள்; இவர்கள் கள், சாராயம் தொடர்பான தொழில் ரீதியான தகவல்கள் பலவற்றைத் தெரிந்து வைத்திருந்தனர். இவர்களுடைய இந்த அனுபவங்களும் அனுதாபங்களுமே விமோசனத்தில் பல்வேறு கலை வடிவங்களாக உருவெடுத்தன. கதைகளிலும், கவிதைகளிலும், நாடகங்களிலும் இவர்கள் கருத்துகள் வெளிப்பட்டன. கருத்துக்கே முதலிடம் தந்து எழுதப்பட்டவை



அடிமைத் தனத்தை ஒழிக்க வேண்டுமென்றால் - மக்களுடைய மனத்திலும், உடம்பிலும், குடி கொண்டுள்ள சோம்பலைப் போக்கி, அவர்களுடைய புத்தி நுட்பத்தையும், ஆக்கத் திறனையும் தட்டியெழுப்ப வேண்டும்!

- அண்ணல் காந்தியடிகள்

என்றாலும், எழுதியவர்களின் ஆற்றலால் அவற்றில் சில கலைநயத்தோடும் அமைந்தன; இலக்கிய வரலாற்றிலும் இடம்பெற்றன.

**தலையங்கம்**


தலையங்கம் என்பது செய்தி ஒன்றினைப் பற்றி எழுதப்படும் கருத்துக் கோவை; வாசகர்களுக்கு அதுபற்றித் தெளிவான நோக்கு ஏற்படும்படி எழுதப்படுவது; அது உண்மைகளை ஒட்டி ஆசிரியரின் கருத்தைக் கொண்டு அமைவது; ஆசிரியரின் கருத்து சில நாட்களிலோ அல்லது சிறிது காலம் கழித்தோ நடைமுறைக்கு உகந்ததாக இருப்பதை வாசகர்கள் உணரச்செய்வது; நாட்டினை ஆள்வோர், அல்லது நிறுவனங்களோடு தொடர்புடையவர் பத்திரிகையின் கருத்து என்ன என்று ஆர்வத்தோடும் கவலையோடும் எதிர்பார்க்கும் பகுதி.

விமோசனத்தின் பத்து இதழ்களிலும், தலையங்கம் இடம் பெற்றுள்ளது. மதுவிலக்கோடு தொடர்புடைய செய்திகள் தலையங்கப் பொருளாயின. 'மதுவிலக்கு ஏன்?' என்ற முதல் தலையங்கம் மதுவிலக்கின் தேவையை மிகத்தெளிவாக எடுத்துரைக்கின்றது.

ஆகையால், பூரண மதுவிலக்குச் சட்டம் அமெரிக்காவில் போல் நம்முடைய நாட்டிலும் நிறைவேற வேண்டுமென்று விடா முயற்சியுடன் பெருங்கிளர்ச்சி செய்ய வேண்டும். மதுவை ஒழிக்க விடாமுயற்சியும் பெருங்கிளர்ச்சியும் தேவை என்று வற்புறுத்துகின்றது தலையங்கம்.

தொடர்ந்து போராடி மதுவை எப்படியும் ஒழித்தேதீர வேண்டும் என்று நீண்ட உறக்கத்தில் - மது உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தவர்களையும், அதைப் பற்றிய கவலை இல்லாமல் ஒதுங்கிக் கிடந்தவர்களையும் தட்டியெழுப்பும் வகையில் அமைந்துள்ள இத்தலையங்கம் ராஜாஜியின் தீவிரத்தைப் புலப்படுத்தும்.

ஏறக்குறைய, எல்லாத் தலையங்கங்களுமே இதே தீவிரத் தன்மையோடும் நியாய உணர்வோடும் எழுதப்பட்டனவாகவே உள்ளன. அவற்றின் தலைப்புகள் சுட்டத்தக்கன; 'புட்டிச் சரக்கு', 'தாமதிக்கக்கூடாது', 'ஹிம்சை', 'அபிப்பிராயம் கேட்டல்', 'ஆத்ம நஷ்டம்', 'தபாலைத் தடுத்தால் துக்கம் தீருமா?' 'போர் துவக்கம்', 'தக்க சமயம்', 'நமது ஆசிரியர்'. இந்தத் தலைப்புகளே அவற்றின் உள்ளடக்கத்தை விளக்கும் தன்மையன. தலையங்கங்களாலும், விமோசனம், மது விலக்கு என்னும் தன்னுடைய நோக்கத்தை நிமிர்ந்து நின்று பறை சாற்றியது. இருபத்தியொரு பக்கங்களில் தலையங்கச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.



**ச**முதாயத்துறைக்குப் பாடுபடுவதுதான் உண்மையான அரசியல் தொண்டாகும்.

ஒழுக்கம் என்பது என்ன? மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, மற்றவர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறோமோ, மற்றவர் நம்மிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று நினைக்கிறோமோ, அப்படியே நாம் மற்றவரிடத்தில் நடந்து கொள்ளவேண்டும். அதுதான் ஒழுக்கம்.

- தந்தை பெரியார்

**கடற்கரைக் கிளிஞ்சல்கள்**

இன்றைய இதழ்களில் 'துணுக்கு', 'பெட்டிச் செய்தி', 'செய்திக் குறிப்புகள்' என்ற தலைப்புகளில் வரும் செய்திகளைப் போன்ற பல்வேறு விவரங்களை ராஜாஜி 'கடற்கரை கிளிஞ்சல்' என்ற அழகிய தலைப்பில் தொகுத்து வழங்கியுள்ளார். பத்து இதழ்களிலும் இந்தப் பகுதி இடம் பெற்றுள்ளது. எல்லா இதழ்களிலும் (முதல் இதழ் நீங்கலாக) இது கடைசி சில பக்கங்களிலேயே தரப்பட்டுள்ளது. மூன்று பக்கங்களிலிருந்து (இதழ் பத்து) ஆறு பக்கங்கள் வரையில் (இதழ்கள் ஒன்று, இரண்டு) இந்தப் பகுதிக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

பத்து இதழ்களிலுமாக மொத்தம் நாற்பத்தேழு பக்கங்களைப் பெற்றுள்ள இந்தப் பகுதி காலத்திற்கு ஏற்ற, நோக்கத்திற்கு ஏற்ற, நெஞ்சையும் அறிவையும் ஒருங்கே தொட்டுத் துலங்கவைக்கும் கனமான செய்திகளைத் தாங்கி நிற்கிறது.

இப்பகுதியில் இடம் பெற்றுள்ள செய்திகளின் தகுதி நோக்கியும் தேவை கருதியும் ஏ.கே.செட்டியார் தம்முடைய குமரி மலர் இதழ்களில் சிலவற்றைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

**மதுவிலக்கு வினா? விடை!**

இதுவும் விமோசனத்தின் குறிப்பிடத் தக்க பகுதிகளில் ஒன்றாகும். மதுவிலக்குத் தொடர்பான வினாக்கள் எழுப்பப்பட்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. மிகவும் பயனுள்ள கருத்துக்கள்; எளிமையான சொற்றொடர்கள்; படிப்படியாகச் செய்திகளைப் புரியவைக்கும் பாங்கு; தர்க்க ரீதியான வெளிப்பாட்டுத் திறன் - இவை மதுவிலக்கு வினா விடையின் சிறப்பியல்புகள்.

இப்பகுதி எல்லா இதழ்களிலும் இடம்பெறவில்லை. ஐந்து இதழ்களில் (இதழ்கள் ஒன்று, நான்கு,ஐந்து,ஏழு,பத்து) மட்டுமே அமைந்துள்ளது. இருபத்து மூன்று பக்கங்களில் அமைந்துள்ள மதுவிலக்கு வினாவிடையின் செய்திகள் படித்து மகிழத்தக்கன.

**அட்டை**

முன்பக்க அட்டையின் மேல் பகுதியில் சாராய ப்ரவாகம், கள் பானையும், சீமைச்சரக்கு அடங்கிய புட்டியும் பொதுமக்களால் விரட்டப்படுவதாகப் படம் ஒன்று வரையப்பட்டுள்ளது. ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் இடம் பெற்றுள்ள அப்படத்தில் ஆண்கள் கால்களால் எட்டி உதைக்கிறார்கள். ஒருவர் காலிலிருந்து செருப்பு ஒன்று பறந்து சென்று சாராயப் புட்டியைத் தாக்குகின்றது. ஒரு பெண்ணின் கையில் துடைப்பமும், இன்னொரு பெண்ணின் கையில் முறமும் உள்ளன. சிறுவர்களில் ஒருவன் காலால் எத்துகிறான்; ஒருவன் கையில் கோல் இருக்கின்றது. கதிரவன் வருகையும் காட்டப்பட்டுள்ளது.

அதன் கீழ் விமோசனம் என்று பெரிய எழுத்துக்களில் இதழின் பெயர் தரப்பட்டுள்ளது. அதை அடுத்து, 'ஒரு மாதப் பத்திரிகை' என்னும் குறிப்பும், ஆசிரியர் பெயரும் உள்ளன. அதன்கீழ் வெளிவந்த ஆண்டும் மாதமும் (தமிழ் ஆண்டு, தமிழ் மாதம்) தரப்பட்டுள்ளன. அதனை அடுத்து இதழின் முகவரி அமைந்துள்ளது. இறுதிப் பகுதியாகச் சந்தா விவரம் தரப்பட்டுள்ளது.

முன் அட்டையின் உட்புறம் பொருளடக்கம் அமைந்துள்ளது. விமோசனம் இதழைப் பெறுவதற்கான வழிமுறைகள் அதன்கீழே தரப்பட்டுள்ளன.

பின்புற அட்டையின் உள்ளேயும் வெளியேயும் பெரும்பாலும் விளம்பரங்கள் - மதுவிலக்கு விளம்பரங்கள் இடம் பெற்றுள்ளன. 'மதுவிலக்குப் பிரசுரங்கள்', 'மதுவிலக்குப் பற்றிய படங்கள்' விளம்பரங்கள் வந்துள்ளன. ஒரே வழி கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

மதுவின் வயப்பட்டு வாழ்வென்னும் போர்க்களத்தில் தோற்று நின்ற ஏழைமக்களின் புண்களுக்கு மருந்திட்டு ஆற்றும் பணியைச் செய்வதற்காகத் தொடங்கப்பட்ட இதழ் விமோசனம். மக்களைத் துயரத்தின் பிடியினின்றும் மீட்பதையே நோக்கமாகக் கொண்டு செயலாற்றிய விதத்தில் தனிச்சிறப்பு பெறுவது விமோசனம். ●

# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம் ஆக்கனூர் அஞ்சல், இடைச்செருவாய் கிராமம் எங்கள் ஊராகும். எங்கள் ஊர் மக்கள் மானாவாரி புஞ்சை நிலங்களை நம்பிதான் விவசாயம் செய்து வருகிறோம். எங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை என்னவென்றால் "வெலிங்டன்" நீர்த் தேக்கத்தில்தான். வெலிங்டன் நீர்த் தேக்கத்தில் இப்பொழுது சுமார் 30 அடி நீர் பிடித்து வைத்துள்ளார்கள். இதனால் எங்களுக்குச் சொந்தமான "பட்டா" நிலங்களில் உள்ள அனைத்துப் பயிர்களும் நீரினால் மூழ்கி விட்டது. இது சுமார் 100 ஏக்கர் நிலங்களாகும்.

வெலிங்டன் ஏரி பல வருடங்களாகத் தூர் எடுக்காத காரணத்தால் ஏரியின் ஆழம் துந்துவிட்டது. இதனால் ஏரியில் தேங்கி நிற்க வேண்டிய நீர் எங்கும் பரவிவரும்போது எங்களுக்குச் சொந்தமான பட்டா நிலங்களில் உள்ள பயிர்கள் நீரினால் மூழ்கிவிடுகிறது. எங்களுடைய பட்டா விளைநிலம் நல்ல தரமான நிலங்களாகும். நல்ல நிலம் இருந்தும் எங்களால் விவசாயம் செய்ய இயலவில்லை. செய்த பயிர்களும் கைகூடி வரமுடியவில்லை.

இந்தப் பிரச்சினை எங்கள் ஊருக்கு மட்டும் இல்லை. "வெலிங்டன்" ஏரியைச் சுற்றி உள்ள கிராமங்களுக்கும் இதே நிலைதான். இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*- பொதுமக்கள், இடைச்செருவாய் கிராமம்,*
*கடலூர் மாவட்டம்.*

**தீர்வு:**

*இடைச்செருவாய் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மனு தொடர்பாக, திட்டக்குடி வட்டம் வெலிங்டன் ஏரியின் தண்ணீர் முழு நீர் மட்டம் 29.72 அடியாகும். முழு நீர் மட்டம் இருக்கும்போது அதன் கொள்ளளவு 25.80 அடியாகும். இது வெலிங்டன் ஏரியின் நீர்பிடிப்புப் பகுதியிலேதான் உள்ளது. 4-12-97ல் முழு நீர் மட்டம் வந்த நிலையில் 5-12-97ல் பாசனத்திற்கு மதகு மூலம் கரையின் தன்மை கருதி வடிகால் வழியாகவும் தண்ணீர் வெளியேற்றப்பட்டது. 11-12-97ல் தண்ணீர் 25 அடியாகக் குறைக்கப்பட்டது. இதனால் பட்டா நிலங்களை எந்த வகையிலும் பாதிக்காது. ஏரியினை ஆக்கிரமிப்பு செய்து பயிர் வைத்திருந்தால் மட்டுமே பாதிக்க வாய்ப்பு உள்ளது என்று பொதுப்பணித்துறையினரால் தெரிவிக்கப் பட்டுள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*- சி.பாவாடைசாமி,*
*வட்டாட்சியர்,*
*திட்டக்குடி*

**பிரச்சினை:**

மயிலாடுதுறையில் பெரியார் அரசு பொது மருத்துவமனை பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ளது. எனினும் மயிலாடுதுறை கும்பகோணம் மெயின் ரோட்டிலிருந்து மருத்துவமனைக்குச் செல்லும் சாலை குண்டும் குழியுமாக உள்ளது. மழைக்காலங்களில் எப்போதும் நீர் தேங்கி மருத்துவமனை வளாகமே அசுத்தமாகிவிடுகிறது. அவசரச் சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் இந்த மோசமான சாலைகளால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். மேலும், மருத்துவமனையைச் சுற்றியுள்ள பகுதிகள் குப்பை மேடாகக் காட்சியளிக்கின்றன. குப்பைகளை அகற்றி, சாலையைச் சீர்படுத்தி நோயாளிகளுக்கு உதவிட தாங்கள் தக்க நடவடிக்கை எடுக்கப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*- பொதுமக்கள் சார்பாக,*
*ஜெ.ரஜினி ராம்கி,*
*மயிலாடுதுறை.*

**தீர்வு:**

*மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனைச் சாலை தற்போது தேசிய நெடுஞ்சாலைத் துறையினால் சீரமைக்கப்பட்டு வருகிறது. மேலும் மருத்துவமனையைச் சுற்றியிருந்த மேடுபள்ளங்கள் சரி செய்யப்பட்டு அன்றாட குப்பைகள் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது குப்பை மேடுகள் ஏதும் இல்லை.*

*ஆணையாளர்,*
*மயிலாடுதுறை நகராட்சி.*



**பிரச்சினை:**

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டத்தில் உள்ள சுந்தரபாண்டியம் என்பது எங்கள் கிராமம். இங்கு சுமார் 25,000 மக்கள் உள்ளனர்.

தினமும் பள்ளி, கல்லூரி செல்லவும், வியாபார நிமித்தமாகவும் அருகில் உள்ள திருவில்லிபுத்தூர், இராசபாளையம் போன்ற நகரங்களுக்கு மாணவர்கள், சிறு வியாபாரிகள் மற்றும் பணிபுரிவோர் செல்ல வேண்டியுள்ளது.

இராசபாளையத்திலிருந்து எங்கள் ஊருக்குத் தினமும் 2 நகர்ப்புறப் பேருந்துகள் வருகின்றன. தினமும் 7 டிரிப்புகள் வரவேண்டும். ஆனால் பெரும்பாலும் இவை சரியாக வருவதில்லை. திடீர் திடீரென்று நிறுத்தப்பட்டும் விடுகின்றன. எனவே மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

*- ஊர்ப் பொதுமக்கள்,*
*விருதுநகர் மாவட்டம்.*

**தீர்வு:**

*இராசபாளையத்திலிருந்து சுந்தரபாண்டியம் கிராமத்திற்கு இயக்கப்படும் இரண்டு பேருந்துகள் பயணத் தடை இல்லாமல் உரிய நேரத்திற்கு இயக்க நடவடிக்கை எடுத்து தற்பொழுது இயக்கிக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

*- மேலாண்மை இயக்குநர்,*
*தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,*
*மதுரை - கோட்டம் V - லிட்*



**பிரச்சினை:**

*குடியாத்தம்-பரவக்கல் (வழி-செட்டிகுப்பம், ராஜாகுப்பம், கோகுலபுரம்) வழித்தடத்தில் சாலைப் போக்குவரத்து வசதி கோரி பலமுறை மனு செய்தும் எவ்விதப் பலனும் இல்லை. மேற்படி வழித்தடத்தில் இருதனியார் பேருந்துகள் இயக்கப்படுவதாகத் தமிழக அரசுக்குத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தவறான தகவல் தரப்பட்டுள்ளது. இவ்வழித்தடத்தில் தற்போது ஜி.15ஏ என்ற ஒரே ஒரு நகரப்பேருந்து மட்டும் இயக்கப்படுகிறது. எனவே மேற்படி பேருந்து வழித்தடத்தில் காலை 8-15, பகல் 12-15, மாலை 17-15, இரவு 21-15 நேரத்தில் கூடுதல் நகரப்பேருந்து இயக்கி எங்கள் பிரச்சினையைத் தீர்க்குமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.*

*- யாதவர் நற்பணி மன்றம்,*
*குடியாத்தம் வட்டம்,*
*வேலூர் மாவட்டம்.*

**தீர்வு:**

*பரவக்கல்-கிராமத்திற்குத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழக நகரத்தடம், குடியாத்தத்திலிருந்து தினசரி 8 நடைகள் கால அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நேரப்படியும் நடை இழப்பின்றியும் இயக்கப்பட்டு வருகிறது எனத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.*

*இதுதவிர, தனியார் பேருந்துகள் கீழ்க்கண்டுள்ள விவரப் படி பேருந்து தினசரி இயக்கப்படுவதாக வேலூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பார்வை-3ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளரார்.*

*டி.எண்.231எ-5959*

*1. வேலூர்-பரவக்கல் 8 நடைகள்*

*2. குடியாத்தம்-பரவக்கல் 2 நடைகள்*

*3. வேலூர் - குடியாத்தம் - 2 நடைகள்*

*மேலும் டிஏவி 3767 என்ற தனியார் பேருந்து வேலூர்-சயனகுண்டா செல்லும் வண்டியானது இரண்டு முறை பரவக்கல் கிராமத்திற்கும் சென்று வருவதாகவும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் தெரிவித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*- ரா.சிவகுமார், இ.ஆ.ப.,*
*மாவட்ட ஆட்சியர்,*
*சத்துவாச்சாரி, வேலூர்.*

**பிரச்சினை :-**

நீலகிரி மாவட்டத்தில் இயங்கும் தமிழ்நாடு பொது நூலகத்துறையின் கீழ், ஐந்து ஊர்ப்புற நூலகம் திறப்பதற்கு 27.3.1996-ஆம் ஆண்டு மாவட்ட நூலக அலுவலர் மூலம் அரசு ஆணை பெறப்பட்டு, உடன் எங்கள் ஊர் / கிராம கமிட்டி மூலமாக இந்த ஐந்து ஊர்களிலும் தேவையான அதாவது இலவச நிலம், புரவலர்கள், உறுப்பினர்கள் ஆகியவை மற்றும் இலவசக் கட்டடம் தளவாடப் பொருட்கள் அனைத்தும் செய்தும் இன்னும் ஊர்ப்புற நூலகம் திறக்கப்படவில்லை. எனவே, 1.கிண்ணக்கொரை 2. குறுத்துக்குளி 3. கேத்தி - பாலாடா 4. டில்லிகம்பை 5.கம்பட்டி ஆகிய ஐந்து ஊர்களிலும் ஊர்புற நூலகம் திறக்க தக்க நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*- ஐந்து ஊர்ப் பொது மக்கள்,*
*நீலகிரி மாவட்டம்.*

**தீர்வு :**

சின்னக்கொரை ஊர்ப்புற நூலகத்திற்கு நியமனம் செய்யப்பட்ட நூலகர் விருப்பமின்மை காரணமாகப் பணியில் சேரவில்லை. மேலும் ஊர்ப்புற நூலகர்கள் பணியிடம் இது. சுழற்சி முறைப்படி நியமனம் செய்யப்பட்டமையால் ஏற்கெனவே பணிபுரிந்து வந்த பகுதிநேர நூலகர்கள் நான்கு பேர் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப் பாயத்தில் வழக்குக் கொடுத்து நான்கு பணியிடத்தைக் காலியாக வைக்க தீர்ப்பாயத்தில் ஆணை வழங்கப் பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட ஊர்ப்புற நூலகங்கள் தற்காலிகமாகத் திறக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எனினும் விரைவில் மேற்படி ஊர்ப்புற நூலகங்கள் திறக்கத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*- பொது நூலக இயக்குநர்,*
*சென்னை.*

**பிரச்சினை :**

மதுரை மாவட்டம் மேலூர் தாலுகாவில் உள்ளது மேலவளவு கிராமமாகும். இவ்வூரில் உள்ள டிரான்ஸ்பார்மரில் இருந்து நிறைய வீடுகளுக்கு மின்சாரம் செல்வதால் போதிய மின்சாரம் கிடைப்பதில்லை. ஆதலால் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை சிம்னி விளக்கைக் காட்டிலும் குறைந்த அளவே வெளிச்சம் தெரிகிறது. டேப்ரெக்காடர்கள் இயங்குவதில்லை. இக்குறைகளைச் சம்பந்தப்பட்டவர்களிடம் பலமுறை கூறியும் பயனில்லை. இனியாவது கூடுதல் டிரான்ஸ்பார்ம் அமைப்பார்களா?

*- த இந்திரஜித்*
*மேலவளவு, மேலூர்*

**தீர்வு :**

மேலவளவு கிராமப்பகுதிக்கு மின்விசை வழங்கும் மின்பாதைக் கம்பிகள் பழுதடைந்த காரணத்தினால் குறைந்தழுத்தம் ஏற்பட்டது கண்டறியப்பட்டு, அக்கம்பிகளை மாற்றி புதிதாக `ACSR' கம்பிகள் அமைப்பதற்கான மதிப்பீடு அனுமதியளிக்கப்பட்டும், அதன்பின் பணிமேற் கொள்ளப்பட்டு, மின்பாதைக்கான புதிய கம்பிகள் இணைக்கப்பட்டும் தற்போதும் சீரான மின்விசை வழங்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

*- மேற்பார்வைப் பொறியாளர்*
*மதுரை மின்பகிர்மான வட்டம்.*

★ ★ ★


**PLI NEWS**

# மத்திய அரசு - அஞ்சல் துறை

அஞ்சலக ஆயுள் காப்பீடு
(113 வருட சிறப்பான சேவை)

PLI
பாலிசிதாரர்களுக்குப் புத்தாண்டு பரிசு
1995-96 ஆண்டிற்கான போனஸ் பற்றிய அறிவிப்பு

50ம் வருட சுதந்திர தினப் பொன்விழா - பரிசு
புதிய திட்டம் அறிமுகம்
(YUGAL SURAKSHA)
கணவன் மனைவி இருவருக்கும் ஆயுள் காப்பீடு

| முழு ஆயுள் | என்டோவ்மென்ட் | மணி பேக் பாலிசி |
|---|---|---|
| 95 | 76 | 76 |

(ஆண்டு ஒன்றுக்கு ரூ.1000 பாலிசிக்கு)

அரசு/அரசு சார்ந்த நிறுவன ஊழியர்களே !

ஊதியக் குழு மூலம் கிடைத்திடும் உயர் வருமானத்தை மத்திய அரசின், அரசு ஊழியர்களுக்கான நலத்திட்டத்தில் சேமித்து கீழ்காணும் பலனைப் பெறுங்கள்.

1. குறைவான பிரிமியம் மற்றும் அதிக போனஸ்
2. வருமான வரிச்சலுகை
3. குறைந்த வட்டியில் கடன் வசதி (10%)
4. ஆயுள் காப்பீடு மற்றும் சம்பளப் பட்டியல் பிடித்தம்
5. கமிஷன் ஏஜென்ட் இல்லாத நேரடி சேவை
6. கணிப்பொறி மூலம் கணக்குகள் நிர்வகிப்பு

*மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்க :*

1. உங்கள் பகுதி டெவலப்மென்ட் ஆபீஸர் (PLI)
2. அனைத்து தலைமை அஞ்சலகங்கள்

வெளியீடு :
முதன்மை அஞ்சல் துறைத் தலைவர்
(அஞ்சல் ஆயுள் காப்பீடு)
தமிழ்நாடு வட்டம்
சென்னை - 600 002.

## தீரன் சின்னமலை

ஆசிரியர் : புலவர் அ.தயானந்தம்,
வெளியிட்டோர் :
ராஜராஜேஸ்வரி பதிப்பகம்,
7-ஏ, வி.நகர், சாலை எண் : 8,
இராசிபுரம் - 637 408

பக்கம் : 246 விலை : ரூ.40

இந்திய சுதந்திரப் போரில் இணையற்ற வீரம் காட்டி, நிகரற்ற தியாகம் புரிந்த பெருமையாளன் தீரன் சின்னமலை; அந்த மாவீரனின் முக்கிய வரலாற்றுச் சம்பவங்களை வகைபட இணைத்து . இனிக்கும் புதினமாக்கித் தந்திருக்கிறார் நூலாசிரியர்.

## தமிழுக்குத் தோள் கொடுத்தோர்

ஆசிரியர் : புலவர் கோ.இராசேந்திரன்
வெளியிட்டோர் :
அறிவண்ணல் பதிப்பகம்,
9, கோவிந்தசாமிப் பிள்ளைத் தெரு,
கீழ்ப்பெரும்பாக்கம், விழுப்புரம்.

பக்கம் : 80 விலை : ரூ.20.

நல்லாசிரியர் விருது பெற்றவரான நூலாசிரியர், அறுசுவை தோன்ற எழுதிய ஆறு கற்பனை நாடகங்களின் தொகுப்பே இந்த நூல்; படிக்காசுப் புலவர், அறிஞர் அண்ணா, காஞ்சி சிவப்பிரகாசர், மகாகவி பாரதியார், அருட்கவி தாதி, நாராயண தீட்சிதர் ஆகிய அறுவரும் நாடகங்களின் கருப்பொருள் ஆக்கப்பட்டுள்ளனர்.


## இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்

பதிப்பாசிரியர் : இ.சுந்தரமூர்த்தி,
மா.ரா.அரசு

பக்கம் : 464 விலை : ரூ.100

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில், நாட்டு மக்கள் உள்ளத்திலே எழுச்சித் தீ மூட்டிய இதழ்கள் பலவாகும். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் மொழித்துறையில், அந்த ஏடுகள் ஒவ்வொன்றும் பற்றிய அரிய தொடர் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இந்திய விடுதலைப் பொன்விழா ஆண்டில் நடந்த அக்கருத்தரங்க. ல் 16 இதழ்கள் பற்றி இடம்பெற்ற அற்புதமான கருத்துரைகளின் தொகுப்பே இந்த நூல். தமிழறிஞர்கள், இதழியல் துறை ஆய்வாளர்கள், இறந்தகால இதழ்த் துறை பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வமுடையோர் விரும்பி வரவேற்பார்.

# நூல் நயம்



## குற்றாலநாத சுவாமிகோயில் வரலாறும் பண்பாடும்

ஆசிரியர் :
முனைவர் சொ.சுப்பிரமணிய கவிராயர்

பக்கம் : 272 விலை ரூ. : 60

புராணங்களின் கூற்றுப்படி, சிவபெருமான் நடனமாடிய பஞ்ச சபைகளில் ஒன்றான திருக்குற்றாலம் பற்றியும், திருக்குற்றாலநாதர் பற்றியும், அங்குள்ள கோயில் - அதுபற்றி இதுவரை வெளிவந்த தமிழ். ஆங்கில நூல்கள் பற்றியும் ஆய்வுசெய்து வெளியிடப்பட்டுள்ள நூல் இது. சிறப்புற உருவாக்கப்பட்டிருக்கிறது.

## காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் - ஓர் ஆய்வு

ஆசிரியர் : முனைவர் சி.இரத்தினம்

பக்கம் : 256 விலை : ரூ.60

சான்றோர் நிறைந்த தொண்டை நாட்டுக் காஞ்சி, புனிதத் தலங்களுள் ஒன்று எனப் போற்றப்படுவதாகும். நூலாசிரியர், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவிலை தமது பட்ட ஆய்விற்காக எடுத்துக்கொண்டு செய்த ஆய்வுரையே அருமையான இந்த நூலாக வெளிவந்துள்ளது.

மேற்கண்ட 3 நூற்களையும் வெளியிட்டோர் :

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை - 600 113.

## கலைஞரின் முரசொலி

ஆசிரியர் : பி.எல்.ராஜேந்திரன்
வெளியிட்டோர் : பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை - 600 004.

பக்கம் : 95 விலை : ரூ.18

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தம் இளமைக்காலத்தில் - 1942ல் கையெழுத்தேடாகத் தொடங்கிய 'முரசொலி'யின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி அந்த ஏடு தொடர்பான முக்கிய வரலாற்றுச் சம்பவங்களுடன் தெரிவிக்கும் நூல் இது.

## பாவலர் நெஞ்சில் பேராசிரியர்

ஆசிரியர் : முனைவர் கடவூர் மணிமாறன்
முனைவர் கருவூர் கன்னல்
வெளியிட்டோர் : விடியல் வெளியீட்டகம்,
109 மேலைத்தெரு,
கிருட்டிணராயபுரம் - 639 102

பக்கம் : 96 விலை : ரூ.20

இனமானப் பேராசிரியர், மாண்புமிகு கல்வியமைச்சர் க.அன்பழகனாரின் 76ஆம் பிறந்தநாள் அன்று வெளியிடப்பட்ட கவிதைத் தொகுப்பு நூல். புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் கவிதை முதலாக 76 தமிழ்க் கவிஞர்கள் எழுதியுள்ள கனிநிகர் கவிதைகள் - குறிப்பாக மரபுக் கவிதைகள் இதில் உள்ளன; சுவைத்து இன்புறலாம்.

## பிஞ்சு நிலா

ஆசிரியர் : தளவை இளங்குமரன்,
வெளியிட்டோர் : கண்மணி பதிப்பகம்,
ஈ.உ.அரசு அலுவலர் குடியிருப்பு,
செங்கற்பட்டு - 603 001.

பக்கம் : 144 விலை : ரூ.40

இனிய எளிய சிறுவர் பாடல்கள் 72 இந்நூலில் கைகோத்துக்கொண்டு காணப்படுகின்றன; ஒவ்வொன்றும் கனியிடை ஏறியசுளையாய், கவின் மலர்த் தேனாய் இனிக்கின்றன. சரளமான நடையில், தடுமாறாத சந்தத்தில் உருவான இளைஞர் இலக்கியமாய்த் திகழும் இதை மாணக்கர் உலகம் மகிழ்ந்து வரவேற்கும்.

# காவிரி உடன்பாடு

## தலைவர்கள் பாராட்டு

**கா**விரி நதிப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். அரசியல்வாதிகளால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்ற என் கருத்தினை (கலைஞர்) தாங்கள் பொய்ப்பித்து விட்டீர்கள். இந்த முடிவின் மூலம் இலட்சக்கணக்கான விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளீர்கள்.

**- சி.சுப்பிரமணியம்**
முன்னாள் ஆளுநர்

* * *

**கா**விரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை தொடர்பாகப் பிரதமர் முன்னிலையில் நான்கு மாநில முதல்வர்கள் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டினை மார்க்சிஸ்ட் கட்சி வரவேற்கிறது. இந்த உடன்பாடு சிறப்பானதொரு ஏற்பாடு என்று மார்க்சிஸ்ட் கட்சி கருதுகிறது.

காவிரிப் பிரச்சினை தொடர்பாக இப்பொழுது ஏற்பட்டுள்ள உடன்பாடு மற்ற மாநிலங்களுக்கிடையிலேயான நதிநீர் தாவாக்களைத் தீர்க்கவும் ஒரு முன்மாதிரியான உடன்பாடாக விளங்குகிறது.

இந்த உடன்பாட்டின்படி நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்புக்கேற்ப தமிழகத்திற்குக் காவிரியில் 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட கர்நாடகம் ஒப்புக்கொண்டுள்ளது. இது ஒரு முக்கியமான அம்சம். தமிழ்நாட்டிற்கு 205 டி.எம்.சி. தண்ணீர்விடக் கூடாது என்று கர்நாடகச் சட்டமன்றத்தில் இரண்டுமுறை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதை மனதில் கொண்டு பார்த்தால், இதன் முக்கியத்துவம் புரியும்.

**- சங்கரய்யா**
இ.கம். (மார்க்சிஸ்ட்)

* * *

**கா**விரி நதி நீர்ப் பங்கீடு குறித்து, பாரதப் பிரதமர் வாஜ்பாய் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்களோடு நடத்திய சமரசப் பேச்சுவார்த்தையின் விளைவாக நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக எவ்வித உடன்பாட்டிற்கும் வர முடியாத தமிழக மற்றும் கர்நாடக அரசுகள் சில அடிப்படையான விஷயங்களில் மனமொத்த கருத்துக்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பது, இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் முக்கியமான மைல்கல்.

இந்த அரசியல் நிர்ப்பந்தங்களைக் கடந்து, தங்கள் நிலைகளிலிருந்து சம்பந்தப்பட்ட அனைவரும் சற்று இறங்கி வந்து எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வினை உருவாக்க நல்ல முயற்சிகளை மேற்கொண்ட பிரதமர் வாஜ்பாயையும், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியையும், கர்நாடக முதல்வர் ஜே.எச்.பட்டேலையும் மற்றும் கேரள, புதுவை மாநிலங்களின் முதல்வர்களையும் தமிழ்மாநில காங்கிரஸ் சார்பாக நெஞ்சாரப் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

**- ஜி.கே.மூப்பனார்**
த.மா.கா.

* * *

**பா**ரதப் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற தமிழகம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி முதல்வர்கள் பேச்சுவார்த்தையில் காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வு கண்டறியப்பட்டிருக்கிறது. தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழக விவசாயிகள், பொது மக்களின் உணர்வுகளை மிகத் தெளிவாக எடுத்துக் கூறி சுமூகமான தீர்வுக்கு வழிகாட்டியிருக்கிறார். தமிழக முதல்வருக்குத் தமிழக மக்கள் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

**- அப்துஸ் சமது**
இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

* * *

**த**மிழக, கர்நாடக மாநிலங்களுக்கிடையே நீண்ட நாட்களாக நிலவி வந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்குச் சுமூகமான தீர்வு கிடைத்திருப்பது தமிழகத்திற்கு மகிழ்ச்சியான செய்தியாகும். உச்சநீதி மன்றத்தின் ஆணையின் வழியிலேயே தீர்மானம் கிடைத்திருப்பது மிகவும் நல்லதாகும். இந்த விஷயத்தில் முதல்வர் கலைஞர் நமது பாராட்டுக்குரியவராவார்.

**-திண்டிவனம் இராமமூர்த்தி**
தமிழ்நாடு காங்கிரஸ்

* * *

**ப**ல்லாண்டு காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. மாநிலங்களில் பயன்படுத்துவது போக மீதி தண்ணீரைக் கால்வாய் மூலம் இணைத்து அக்கால்வாய்க்குச் சுதந்திரக்

கால்வாய் என்று பெயர் சூட்டும் திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

- குமரி அனந்தன்
தமிழ்நாடு காங்கிரஸ்

★ ★ ★

காவிரி டெல்டா பகுதியில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்களும், தஞ்சை வாழ் மக்களும் காவிரிப் பிரச்சினையில் வெற்றி கண்டு தமிழக மக்களின் உரிமைகளை மீட்டுத் தந்த கலைஞரை நெஞ்சார வாழ்த்துகிறார்கள். அவர்களோடு இணைந்து தமிழ் மாநில முஸ்லிம் லீக் சார்பில் எங்களின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

- தமிழ் மாநில முஸ்லீம் லீக்.

★ ★ ★

காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பான 205 டி.எம்.சி. தண்ணீரை, தமிழகம் பெறுவதற்கு உறுதி செய்து கொடுத்த இந்தியப் பிரதமர் அவர்களையும், இந்த உறுதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை உச்சநீதி மன்றத்தின் மூலம் மேற்கொண்டு, தொடர்ந்து, நடுவர் மன்றம் அமைவதற்கும், இடைக்காலத் தீர்ப்பைப் பெறுவதற்கும் இப்பொழுது இடைக்காலத் தீர்ப்பைச் சட்டப்படி நிறைவேற்றுவதற்கும் முயற்சிகள் மேற்கொண்டு தன்னுடைய ஆட்சிக்காலத்தில் வெற்றி பெற்று, தமிழகத்திற்கு நன்மையைப் பெற்றுத் தந்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்கட்கு, பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆர்.எம்.வீரப்பன்
- எம்.ஜி.ஆர். கழகம்.

★ ★ ★

காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவது தொடர்பாக கர்நாடகம், தமிழ்நாடு மாநிலங்களுக்கிடையே ஏற்பட்டிருக்கும் உடன்பாட்டைத் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வரவேற்கிறது.

1924-ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்பாடு 1974-ஆம் ஆண்டுடன் முடிவடைந்து விட்டது. இனி தமிழ்நாட்டிற்குக் காவிரி நீர் பெறுவதில் உரிமை இல்லை என்று கர்நாடகம் கூறிவந்த நிலையில் இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கும் உரிமை உண்டு என்ற உத்தரவாதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழகக் காவிரி பாசன விவசாயிகள் அமைதியாக நடத்திவந்த வலுவான போராட்டங்களுக்குக் கிடைத்த பலனாகும். மேலும் அண்டை மாநிலங்களுடன் நல்லுறவும் தேச ஒற்றுமையும் வலுவடைய இந்த ஒப்பந்தம் துணை புரியும்.

காவிரிப் படுகை விவசாயத்தை நம்பி வாழும் இலட்சக்கணக்கான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் மகிழ்ச்சியடைவார்கள்.

- தமிழ்நாடு
விவசாயிகள் சங்கம்

★ ★ ★

நீண்டகாலமாக உள்ள காவிரி பிரச்சினை பிரதமர் வாஜ்பாயினால் தீர்ந்து உள்ளது. முதல்வர் கருணாநிதி வெற்றி பெற்றார். இது தமிழகத்திற்குக் கிடைத்த வெற்றி. இதை பிரதமர் வாஜ்பாய் செய்து சாதனை படைத்து உள்ளார்.

- இல. கணேசன்
பா.ஜ.க.


காவிரிப் பிரச்சினையில் சுமூகத் தீர்வு ஏற்பட்டிருப்பது முதல்வர் கலைஞரின் விடா முயற்சிக்கும், அணுகுமுறைக்கும் கிடைத்த வெற்றி.

- பேராயர் எஸ்ரா சற்குணம்
இந்திய சமூக நீதி இயக்கம்.

★ ★ ★

காவிரி நீர் தாவா பிரச்சினை குறித்து நடுவர் மன்றத் தீர்ப்பை அமல் படுத்துவது சம்பந்தமாக டில்லியில் பிரதமர் தலைமையில் 6.8.98 அன்று தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் மற்றும் பாண்டிச்சேரி மாநில முதலமைச்சர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வரவேற்கக் கூடியதாகும். கடந்த பல்லாண்டுகளாக இருந்துவந்த பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு எட்டப்பட்டது குறித்துத் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பிரதமர் தலைமையில் 4 மாநில முதலமைச்சர்களும் கொண்ட ஆணையம் அமைக்கப்பட்டு 205 டி.எம்.சி. தண்ணீர் உத்தரவாதம் செய்வது என்று தீர்மானித்திருப்பது



தமிழ்நாடு விவசாயத்தைப் பாதுகாக்கப் பெரிதும் உதவும். மேலும் இந்த முடிவு சம்பந்தப்பட்ட மாநில மக்களின் ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் அதிகம் உதவுவதாக இருக்கும் என்பதுடன், சுமுகமான நிரந்தரத் தீர்வுக்கு நம்பிக்கை தரும் விதத்தில் அமைந்துள்ளதும் வரவேற்கத்தக்கதாக உள்ளது.

**வி.ஏ.கருப்புசாமி**
- விவசாயிகள் சங்கம்.

★ ★ ★

காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு ஏற்பட்டுள்ளது தமிழக மக்களுக்குக் கிடைத்துள்ள மகிழ்ச்சியான செய்கியாகும். நீண்ட நெடுங்காலமாகத் தீர்க்கப்படாத காவிரி நதிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது என்று என்னும் போது ஏதோ ஆச்சரியம் நிகழ்ந்துள்ளதாகத் தோன்றுகிறது. முயன்றால் எதையும் சாதிக்கலாம் என்ற பெருமைக்கும் பெருந்தன்மைக்கும் உரிய சாதனையாளராகத் திகழ்கின்றார் தமிழக முதல்வர் கலைஞர்.

தமிழக வரலாற்றில் காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு கண்டு வரலாற்றில் பொன்னெழுத்தில் பொறிக்கக்கூடிய புதிய சரித்திரத்தைப் படைத்துள்ளார் தமிழக முதல்வர் கலைஞர். நல்ல உள்ளம் கொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களின் துணையோடு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது.

**வை.பாலசுந்தரம்**
- அம்பேத்கர் மக்கள் இயக்கம்.

★ ★ ★

காவிரி நதி வளநாட்டின் விவசாயிகளுக்கு வாழ்வு அளிப்பதோடு, தமிழ்நாட்டின் வளமார் - வரலாற்றிலும் தமிழர்தம் இலக்கிய வாழ்விலும் நடு நாயகமாக விளங்கி வருவதை எல்லோரும் அறிவர். இந்நிலையைக் கேள்விக்குறியாக்க, செய்யப்பட்ட முயற்சிகள் அனைத்தையும் பொன்னியின் செல்வர் கலைஞர் முறியடித்து உள்ளார். எத்தனையோ வகையில் தமிழ்நாட்டுக்குத் தொண்டாற்றி உள்ள கலைஞர் அவர்கள் விடா முயற்சியும், விவேகமும் நிறைந்தவர் என்பதற்குக் காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டுக்கு அவர் தேடித்தந்துள்ள இந்த வெற்றி வரலாற்றில் இடம் பெறக்கூடிய ஒன்று.

**-எம்.ஏ.லத்தீப்**
இந்திய தேசிய லீக் தலைவர்.

★ ★ ★

கடந்த 7 ஆண்டுக் காலமாக நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருந்த காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பான 205 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைத்திட பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற மாநில முதல்வர்கள் கூட்டத்தில் திறம்படச் செயலாற்றி, சாதுர்யமாக முதற்கட்ட வெற்றியைப் பெற்று வந்துள்ள தமிழக முதல்வர் கலைஞர் அவர்களையும் அதற்கு ஒத்துழைப்பு நல்கி பேச்சுவார்த்தைக்கு அனுப்பி வைத்த தமிழகத்தின் அனைத்துக் கட்சி மற்றும், அனைத்துச் சமுதாய, விவசாயச் சங்கங்களைச் சார்ந்தவர் களுக்கும் செயற்குழு பாராட்டுக் களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது. காவிரி நதி நீரில் தமிழ்நாட்டின் உரிமையை முதற்கட்டமாக வெற்றியுடன் பெற்றுத்தந்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்குப் பா.ம.க. (2) மாநிலச் செயற்குழு "காவிரி கொண்டான்" என்னும் பட்டத்தைப் பெருமையுடன் வழங்கிப் பாராட்டுகிறது.

**- தீரன்**
பா.ம.க.(2)

★ ★ ★

தீரவே தீராது என்று பலராலும் கருதப்பட்ட காவிரி நதிநீர்ப் பிரச்சினை நல்ல முறையில் தீர்ந்திட வழிவகை பிறந்துள்ளது.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களது விவேகத்திற்கும், கர்நாடக முதல்வர் பட்டேல் அவர்களது இணக்கமான அணுகுமுறைக்கும் நல்ல பயன் கிட்டியிருக்கிறது.

பிரச்சினைக்கு ஏதாவது சுமுகத் தீர்வு வேண்டுமென்று ஒன்பது மணி நேரத்திற்கு மேல் தீர்க்கமாகச் செயல்பட்ட பிரதமர் வாஜ்பாய் அவர்களையும் நாம் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம்.

**- திருவாரூர் தங்கராசு**

★ ★ ★

நீண்டகாலமாகத் தீர்வு ஏற்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வழியில் ஒரு மைல்கல்லாக இம்முடிவு ஏற்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

தொடர்ந்து பல ஆண்டுகளாகப் போராடி வந்த காவிரிப் பாசன விவசாயிகளுக்கு நம்பிக்கை தருவதாகும். இரு மாநில விவசாயிகள் நலனும் பாதுகாக்கக் கூடிய வகையில் தீர்ப்பை அமலாக்கக் காவிரி நதி நீர் ஆணையம் ஏற்பட்டுள்ளது.

காரைக்கால் உள்ளிட்ட தமிழ்நாட்டுக்கு 205 டி.எம்.சி தண்ணீர் வழங்க வேண்டுமென்ற நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பைக் கர்நாடக அரசு அங்கீகரிக்காமல் இருந்தது. இந்த முடிவின்படி நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பை ஒத்துக்கொண்டிருப்பது தமிழக விவசாயிகளின் சாகுபடிக்கு உத்தரவாதமளிப்பதாக அமைந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும். தமிழ் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு, மிகக் கடுமையான பிரச்சினையாக இருந்துவரும் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் அனைத்துத் தரப்பினர் கருத்தறிந்து, இடைவிடாத முயற்சிமேற்கொண்ட தமிழக முதல்வர் கலைஞரின் அக்கறையும், தமிழ்நாடு அரசின் செயல்பாடும் இந்த உடன்பாடு ஏற்பட முக்கியக் காரணமாகும். இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு வரவேற்கிறது.

**- இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி**
தமிழ்நாடு மாநிலச் செயற்குழு

★ ★ ★

கடந்த முப்பது ஆண்டுகளாகத் தீராமல் இருந்த காவிரி நீர்ப் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு காண்பதற்கு முயன்ற பிரதமர் வாஜ்பாயையும் நான்கு மாநில முதல்வர்களையும் பாராட்டுகின்றோம். காவிரிப் பிரச்சினையில் தமிழக முதல்வர் கருணாநிதி அரசியல் ஆதாயக் கண்ணாடி அணிந்து தமிழர்களின் உணர்வுகளை உசுப்பிவிடும் தவறான நோக்கில் தன் பார்வையைச் செலுத்தாமல் தேசிய நலன் சார்ந்த பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டது அவருடைய அரசியல் முதிர்ச்சியைக் காட்டுகிறது.

**- லோக்சக்தி**

8 ஆண்டுகளுக்குப் பிறகு நடுவர் மன்ற இடைக்கால உத்தரவு நிறைவேற்றப்பட்டிருப்பதை வரவேற்கிறோம்.

**- எஸ்.திருநாவுக்கரசு**
எம்.ஜி.ஆர். அ.தி.மு.க

★ ★ ★

தமிழகத்தின் உயிர்நாடி பிரச்சினையான காவிரி நதிநீர்ப் பிரச்சினையினை, எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல், தனது அரசியல் முதிர்ச்சியாலும், தமிழக விவசாயிகளைக் காப்பாற்றுகின்ற வகையில், ஒரு முடிவுக்குக் கொண்டு வந்த விவசாயிகளின் பாதுகாவலனாக இருக்கும் தமிழக முதலமைச்சரை வாழ்த்தி தமிழக விவசாயிகள் சார்பாகவும், உழவர் உழைப்பாளர் கட்சி தனது பாராட்டையும், நன்றயையும் தெரிவித்துக் கொள்கிறது.

**ஆர்.பி.ராமசாமி**
- உழவர் உழைப்பாளர் கட்சி.

# காவிரி உடன்பாடு :

# பத்திரிகைகள் பாராட்டு

காவிரி நடுவர்மன்றத்தின் 1991-ஆம் ஆண்டு இடைக்கால உத்தரவை அமல்படுத்துவதற்கான "திட்டம்" குறித்து முதலமைச்சர்கள் கூட்டத்தில் ஏற்பட்டுள்ள விரிவான ஒப்பந்தம் பிரச்சினைக்குரிய மாநிலங்கள் எதார்த்த உணர்வுடன் செயல்பட்டுள்ளன என்பதைக் காட்டுவதால் பாராட்டுக்குரியது. குறிப்பாகக் கர்நாடக மாநிலம் தேவையில்லாமல் 7 ஆண்டுகளாக நீடித்து வந்த மோதலுக்குத் தீர்வு காண்பதில் எதார்த்த உணர்வை வெளிப்படுத்தியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மிகவும் ஆக்கபூர்வமான அம்சம், இதுவரை அங்கீகரிக்க மறுத்துவந்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைக்கு மதிப்பளிக்கக் கர்நாடகமே உறுதி அளித்துள்ளது. இதற்கு நடைமுறை அர்த்தம் தமிழ்நாட்டுக்கு ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. தண்ணீர் தருவதற்குக் கர்நாடகம் ஒத்துக் கொண்டுள்ளது என்பதாகும்.

தமிழ்நாட்டின் தரப்பில் இது ஒரு "லாபம்" ஆகும். மேல்நிலை தீர மாநிலம் (கர்நாடகம்) நீதித்துறை ஆணையத்திற்குக் கீழ்ப்படியாமை என்று கருதக்கூடிய, நடுவர்மன்ற ஆணையை நிறைவேற்றுவதில்லை என்ற தெளிவாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலிருந்தும், அந்த ஆணையை அமல்படுத்துவதற்கான எந்த அமைப்பை உருவாக்குவதையும் எதிர்த்து வந்த நிலையிலிருந்தும் பின்வாங்கியுள்ளது. தன்னுடைய முந்தைய எதிர்மறை மனோபாவத்திலேயே கர்நாடகம் தொடர்ந்து பிடிவாதத்துடன் இருந்திருந்தால், மாநிலத்தின் உண்மையான வெற்றிக்கான அறிகுறிகளைத் தவறான பகுதிக்குத் தள்ளி, தற்போது நடைபெற்றுவரும் வழக்கில் அதற்குத் தீமையை விளைவித்திருக்கும்.

டெல்லி கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள திட்டத்தின் அமைப்பு ஏற்கெனவே மத்திய அரசால் கூறப்பட்ட திருத்தப்பட்ட வரைவுத் திட்டத்திலிருந்து மாறுபட்டுள்ளது. இதில் காவிரி நதி ஆணையம் அதிகாரிகளும், வல்லுநர்களும் அடங்கிய பிரதிநிதித்துவ அமைப்புக்குப் பதிலாக பிரதமரையும் (தலைவர்) காவிரி தீர முதலமைச்சர்களையும் கொண்ட அரசியல் தோற்றம் கொண்டுள்ளது. இந்த ஆணையத்திற்கு உதவியாகச் சட்டபூர்வமல்லாத 'கண்காணிப்புக் குழு' சம்பந்தப்பட்ட மாநிலங்களால் நியமிக்கப்படும் அதிகாரிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.


தங்களுடைய அறிவிக்கப்பட்ட நிலைகளில் கண்காணிப்புக்குழுவின் பங்கு மற்றும் நடைமுறைச் செயல்பாடுகள் குறித்து கடுமையான வேறுபாடுகள் இருந்தபோதிலும், கர்நாடகமும் தமிழ்நாடும் அதிக பரபரப்பின்றி அதை ஒத்துக்கொண்டுள்ளன. இதன் மூலம் இடைக்கால ஆணையைச் செயல்படுத்து வதற்கான திட்டம் ஒன்றை உருவாக்கி, அதை அரசிதழில் வெளியிடும் தன்னுடைய சட்டபூர்வக் கடமையை நிறைவேற்ற மத்திய அரசு தயார் நிலையில் உள்ளது. கண்காணிப்புக் குழுவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் பற்றிப் பரிசீலிக்கும்போது, அது, வழக்கமான புள்ளி விவரங்கள் சேகரித்தல், நன்கு வடிவமைக்கப்பட்ட நீர் மற்றும் வானிலை இணைப்பு அமைப்பை (நெட்வொர்க்) தீரத்தில் உருவாக்குதல் என்ற அளவிலேயே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்து முடிவுகள் எடுத்தல் மற்றும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அதிகாரங்கள், கட்டுப்படுத்தும் அமைப்புக்குப் பதிலாக ஆணையத்தில் பிரதிநிதிப்படுத்தப்பட்டுள்ள அரசாங்கங்களின் அரசியல் நிர்வாகிகளிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. தனது செயல்படும் முறைகளைத் தாங்களே வகுத்துக் கொள்ளச் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ள - அதன் முடிவுகள் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலேயே இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன - ஆணையம், இணக்கமான நிர்பந்தமற்ற அமைப்பாக இருக்கும்.

**- இந்து (10.8.98)**

மத்தியில் உள்ள கூட்டணி அரசுக்கு இது ஒரு சிறப்புச் சேர்க்கும் நல்ல செய்தி. காவிரி பேச்சு வார்த்தையில் சாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் வெற்றியின் மூலம், நதிதீர மாநிலங்களுக்கு இடையிலான தாவாவால் தொடர்ந்து வந்த அச்சுறுத்தலிலிருந்து விடுதலை கிடைத்துள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியதன் மூலம் ஒரு அரசியல் சிக்கல் தவிர்க்கப்பட்டுள்ளது. காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக உச்சநீதிமன்றம் விதித்த கெடுவுக்குள் பிரச்சினையைத் தீர்க்க இந்த ஒப்பந்தம் அரசுக்கு உதவியுள்ளது. குறிப்பாகப் பொறுமையான தொடர்ந்த முயற்சிகளின் பின்னணியில் பிரதமர் கொண்டிருந்த அரசியல் உறுதி குறிப்பாகப் பாராட்டுக்கு உரியது.

பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் தனிப்பட்ட தலையீடு மாநில அரசியலால் தொடர்ந்து நிலவி வந்த தேக்க நிலையிலிருந்து, விடுவிக்க நிச்சயமாகத் துணை புரிந்துள்ளது. காவிரி நதிநீர் தாவா நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை அமல்படுத்துவது தொடர்பான 7 ஆண்டு மோதலுக்கு ஒரு முடிவு ஏற்பட்டுள்ளது என்ற முக்கியத்துவத்தை அலட்சியப் படுத்திவிடக்கூடாது. அதை அமல்படுத்துவதற்குக் காவிரி தீர ஆணையம் அமைக்க



ஒப்புக் கொண்டதன் மூலம்'கர்நாடகம் கடைசியாக அந்தத் தீர்ப்புக்கான கொள்கை ரீதியான ஒப்புதலை வெளிப்படுத்தியுள்ளது. தமிழ்நாடு தனது பங்குக்கு, மேல்நிலை நதிதீர மாநிலத்திற்குக் கடுமையான சட்ட அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதால் தனது முந்தைய வற்புறுத்தலை விட்டுக்கொடுத்து காவிரி தீர ஆணையம் உருவாக வாய்ப்பளித்துள்ளது. இந்த ஒப்பந்தம் கேரளா மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் நலன்கள் புறக்கணிக்கப் படாமல் பார்த்துக் கொண்டுள்ளது.

**- இந்தியன் எக்ஸ்பிரஸ் (10.8.98)**

**கா**விரிப் பிரச்சினையில் முதல் முறையாக ஆக்கபூர்வமான முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. பிரதமர் தலைமையில் நான்கு மாநில முதல்வர்கள் கூடி, நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கான திட்டத்தை இறுதி செய்தது பாராட்டத்தக்க சாதனை.

தமிழகத்துக்கு 205 டி.எம்.சி. நீர் அளிக்க கர்நாடகம் சம்மதித்திருக்கிறது. பாசன அணை களின் மீதான கட்டுப்பாடு பறிபோய் விடுமோ என்ற கர்நாடக விவசாயிகளின் அச்சம் நீக்கப்பட்டு விட்டது. இரு மாநில விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்காக நடத்திய பேச்சு தோல்வி யடைந்தபோதிலும் இம்முறை அம்முயற்சியில் வெற்றி கண்டுவிட்டனர்.

விவசாயிகளுக்குக் கிடைத்த சுதந்திரப் பொன்விழாப் பரிசாக இந்த உடன்பாட்டைக் கூறலாம். நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பை நிறைவேற்றுவதிலும் இதுபோன்ற அணுகுமுறை மேற்கொள்ளப்படும் என்ற நம்பிக்கை துளிர்விட்டுள்ளது....

**- தினமணி (10.8.98)**

**கா**விரி நடுவர் மன்றம் 1991-இல் அளித்த இடைக்காலத் தீர்ப்பை அமலுக்குக் கொண்டுவர ஏழு ஆண்டுகள் ஆகியிருக்கின்றன!

காவிரி கண்காணிப்புக் குழுவுக்கு இந்த இடைக்காலத் தீர்ப்பு வழங்கிய அதிகாரங்கள் கர்நாடக மாநிலத்துக்கு ஏற்புடையனவாக இல்லை. 205 டி.எம்.சி தண்ணீர் தமிழகத்துக்குத் தந்தே ஆக வேண்டும்; அவ்வாறு தராவிட்டால், கண்காணிப்புக் குழு கர்நாடக மாநிலத்தில் பலவந்தமாகச் செயல்பட்டு, தண்ணீரைத் திறந்துவிடச் செய்யலாம் என்கிற அளவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இடைக்காலத் தீர்ப்பின் இப்பகுதியைத்தான் கர்நாடகா அரசு பலமாக எதிர்த்தது. இதில் வியப்பில்லை.

ஆட்சேபணைக்குரிய இதுபோன்ற பகுதிகளை மாற்றி, காவிரி நதி ஆணையம் ஒன்றை நிறுவி, அதற்கு இந்தியப் பிரதமரைத் தலைவராக்க, சம்பந்தப்பட்ட நான்கு மாநிலங்களும் ஒப்புக்கொண்டுள்ளன. உச்சநீதி மன்றத்தின் தலையீட்டினாலும் அது நிர்ணயித்த ஆகஸ்ட் 12 கெடுவினாலும்தான் இக்காரியம் நிகழ்ந்திருக்கிறது.

காவிரி பிரச்சினைக்குப் பிறந்துள்ள 'தீர்வை' பி.ஜே.பி. ஒரு வெற்றியாகவே கொண்டாடுகிறது; தமிழக முதல்வர் அதை நன்றியுடன் வரவேற்றிருக்கிறார்; எதிர்பார்த்தது போலவே ஜெயலலிதா, புதிய காவிரி பகிர்வுத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்துச் சாடியிருக்கிறார்.

நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அப்படியே அமல்படுத்தியிருந்தால் என்ன ஆகியிருக்கும்...?

இதற்கென்றே காத்திருந்தது போல பிரச்சனையை அரசியலாக்கி, உள்ளூர் தமிழர்களை 'உண்டு - இல்லை' என்று பண்ணிவிட கர்நாடகத்தில் வன்முறைக் கூட்டம் காத்திருக்கிறது. இலட்சக்கணக்கான தமிழர்களின் உயிர், உடைமைக்கும் வேலை வாய்ப்புகளுக்கும் பெரும் கேடு உண்டாகும்.

எவ்வகையில் அணுகித் தீர்க்கப்பட்டிருந்தாலும் காவிரிப் பிரச்சனையானது ஏதேனும் ஒரு தரப்புக்கு அதிருப்தியையும் ஏமாற்றத்தையுமே அளித்திருக்கும். தற்போது கண்டுள்ள தீர்வு இருதரப்புக்கும் அதிருப்தியைக் குறைந்தபட்சமாக ஆக்கியிருக்கிறது என்று சொல்லலாம். எனவே எதிர்க்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக இந்தத் திட்டத்தை ஜெயலலிதா எதிர்ப்பதென்பது அவருக்குக் கௌரவத்தைச் சேர்க்கப்போவதில்லை, குறைக்கவே செய்யும்.

**- கல்கி (23.8.98)**

ஒரே ஒரு சொல்-காவிரி. ஆனால் அது எழுப்பும் நினைவலைகள் எத்தனை! கரிகாலன், ராஜராஜன், இளங்கோ, கம்பன், ஞானசம்பந்தர், ஆழ்வார்கள், தாயுமானவர், தியாகய்யர், அருணாச்சல கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதி, ஊத்துக்காடு வெங்கட சுப்பையர், உ.வே.சா., மாயூரம் வேதநாயகம் பிள்ளை, கல்கி, நபிச்சுமூர்த்தி, தி.ஜானகிராமன் கால வெள்ளத்தில் கரைந்து போகாத கல்வெட்டாய் நிலை கொண்ட பெயர்கள். அனைத்திற்கும் வளம் சேர்த்தவள் காவிரி. தமிழர்களுக்குக் காவிரி தண்ணீர் அல்ல, தாய்ப்பால். கலாச்சாரத் தொட்டில். இசை, இலக்கியம், பக்தி, சரித்திரம், ஞானம், புத்திக்கூர்மை என்று எத்தனையோ முத்திரைகளின் முகவரி.

காவிரி நீர் இனித் தமிழர்களுக்குக் கானல் நீராக ஆகி விடுமோ என்ற அச்சம் கடந்த வாரம் தீர்ந்தது. நெருடலாகத் துவங்கிய பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்தது குறித்து மகிழ்ச்சி அடையாதவர்கள் இருக்க முடியாது. அக்கறை, அனுபவம், சீண்டப்படுகிற நேரத்திலும் சிதறி விடாத பொறுமை, என்ற தங்கள் பலங்களைப் பயன்படுத்தி மூத்த தலைவர்கள் இந்தத் தீர்வினைக் கண்டிருக்கிறார்கள்.

**- குமுதம் (20.8.98)**

காவிரிப் பிரச்சினையில் இருக்கும் சிக்கல்கள் குறைவதற்கு, பல வருடங்கள் கழித்து இப்போது ஒரு வாய்ப்பு உருவாகி இருக்கிறது. பிரச்சினை தீர்ந்து விட்டது என்று நினைப்பது சிறுபிள்ளைத்தனமாக இருக்கும்; அதே சமயத்தில், பிரச்சினை தீர்வதற்கான பாதை போடப்பட்டிருக்கிறது என்பதை உணர மறுப்பது வெறும் அடாவடித்தனமாகத்தான் இருக்கும்.

பலரும் சேர்ந்து இரு மாநிலங்களுக்கிடையே உணர்ச்சிகளைக் கிளப்பி விட்டு, ஒரு குரோத பாவத்தை வளர்த்துவிட்ட நிலையில், பேச்சு வார்த்தைகள் மூலம் இந்த அளவு ஒருமித்த கருத்து ஏற்பட்டதே ஒரு சாதனைதான் என்பதில் சந்தேகமில்லை. இதற்காகக் கடும் முயற்சி செய்த பிரதமர் வாஜ்பாய், அரசியல் விவேகத்தைக் காட்டிய தமிழக முதல்வர் கருணாநிதி, துணிவுடன் செயல்பட்ட கர்நாடக முதல்வர் பட்டேல் ஆகிய மூவரும் அரசியல் ஆதாயங்களுக்கு அப்பாற்பட்டு நின்று, இரு மாநில மக்களுக்கும் நன்மை செய்ய முயற்சித்திருக்கிறார்கள்.

"காவிரி ட்ரிப்யூனலின் இடைக்கால உத்தரவின்படி 205 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டிய கர்நாடகம், அதற்குச் சற்றுக் குறைத்துக் கொடுக்க ஒப்புக் கொண்டாலும், தமிழகம் அதை ஏற்று, பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும்" என்பதுதான் நமது கருத்தாக இருந்து வந்திருக்கிறது. இப்போதோ தமிழகம் இப்படி விட்டுக் கொடுப்பதற்குக் கூட அவசியம் இல்லாமல், 205 டி.எம்.சி. தண்ணீர் தர கர்நாடகம் இசைந்துள்ளது. ஏழு ஆண்டுகளாகத் தான் காட்டி வந்த பிடிவாதத்தை, இப்போதுதான் முதன் முறையாகக் கர்நாடகம் தளர்த்தி இருக்கிறது.

காவிரிப் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக நாம் கூறவில்லை. ஆனால் நாம் ஏற்கெனவே சொன்ன மாதிரி அதற்கான பாதை போடப்பட்டிருக்கிறது. அதில் பயணம் செய்யும்போது ஆங்காங்கே தடங்கல்கள் வரத்தான் செய்யும். அவ்வப்போது பேச்சு வார்த்தை மூலம்தான் அந்தத் தடங்கல்களைத் தீர்த்து கொள்ள வேண்டும். தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. என்ற உத்திரவை, கர்நாடகம் ஏற்கிறது என்பது - ஏழு வருடங்களாக நடக்காத அதிசயம். அவர்கள் இதில் விட்டுக் கொடுத்திருக்கும் போது தமிழகமும் கொஞ்சம் விட்டுக் கொடுத்து, அவ்வப்போது ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டால், அதில் தவறில்லை.

இரு மாநில மக்களிடையே விரோதத்தை வளர்த்துக்கொண்டிருந்த ஒரு விவகாரத்தில், ஒரு உடன்பாடு ஏற்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விஷயம். வாஜ்பாய், கருணாநிதி, பட்டேல், மற்றும் கேரள, பாண்டிச்சேரி முதல்வர்கள் பாராட்டுக் குரியவர்கள்.

**- துக்ளக் (19.8.98)**

அப்பாடா, நினைக்கும்போதே உள்ளத்தில் காவிரி பாய்கிறது, எத்தனை ஆண்டுகள்! எத்தனைப் போராட்டங்கள்! எத்தனைப் பிடிவாதம்! எத்தனை அரசியல்! எல்லாமே முடிந்து போய் இப்போது சுபம்.

காவிரி வரட்டும்; பயிர்களுக்கு விளைச்சல் தரட்டும். பூமித்தாய் தாகத்தைக் காவிரித்தாய் தீர்க்கட்டும். பார்த்துப் பரவசப்படுவோம்.

வயிற்றுக்குக் கிருஷ்ணா நீர், வயலுக்குக் காவிரி நீர் என்று கொண்டு வந்தவர் கலைஞர் என்று வரலாறு குறித்துக் கொள்வதை விட, அவருக்குப் பெரிய பாராட்டு விழா வேறு என்ன இருக்க முடியும்!

**- சாவி (20.8.98)**

பிரதமர் தலைமையில் புதிதாக ஒரு காவிரி ஆணையம், அதை அடுத்துக் கண்காணிப்புக் குழு

உருவாகப் போகிறது. இடைக்காலத் தீர்ப்பாக 205 டி.எம்.சி.காவிரி நீர் தமிழகத்துக்குத் திறந்து விடப்படுகிறது. ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு தீர்ப்பு அமலாகிறது!

"காவிரிப் பிரச்சினையை வெறும் அரசியல் ஆக்க விடாமல், நியாய உணர்வோடு அணுகுவோம்... முழு உடன்பாடு காணுவோம்" என்று இரு மாநிலத்திலும் மக்கள் சுமுகமாக நினைத்தாலேயே பிரச்சினை தீர்ந்துவிடும்.

சுதந்திரப் பொன்விழா கொண்டாட்டங்கள் முடிவடையும் இத்தருணத்தில் காவிரிப் பிரச்சினையும் ஒரு முடிவுக்கு வந்தால், அதுவே நமக்கெல்லாம் சிறந்த பொன்விழாப் பரிசு!

**- ஆனந்த விகடன் (16.8.98)**

பல வருடங்களாகத் தீராமல் இருந்த காவிரிப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைத்திருக்கிறது. ஒரு மவுன யுத்தம் முடிவுக்கு வந்திருக்கிறது. மக்கள் மத்தியில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

தனது அரசுக்குக் கிடைக்கும் வாக்குகளை விட, வாக்குறுதியை மதிப்பவர் என்பதை பிரதமர் வாஜ்பாய் நிரூபித்திருக்கிறார். அரசியலமைப்புக்கு உட்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரும், மற்ற நான்கு மாநில முதலமைச்சர்களும் கூடிப்பேசி, விவாதித்து எடுத்த முடிவு இது. புதிய வரைவுத்திட்டம் உடனடியாக அரசிதழில் மத்திய அரசால் வெளியிடவும் பட்டிருக்கிறது. பத்திரிகைகள், பொது மக்கள் உட்பட எல்லோரும் இதை வரவேற்றுக் கொண்டாடுகிறார்கள்.

**- குங்குமம் (21.8.98)**

காவிரிப் பிரச்சினையில் புதிய திருப்பம் கிடைத்திருக்கின்றது. தமிழ்நாட்டுக்குப் பெரும் வெற்றி - கடந்த பல ஆண்டுகாலமாக நிலுவையில் இருந்த பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வு கிடைத்துள்ளது - வரைவுத் திட்டத்தை உச்சநீதி மன்றத்தில் மய்ய அரசு சமர்ப்பிக்கும் என்கிற செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எல்லாம் நல்லவிதமாக அமைந்து யாரும் பாதிக்கப்படாமல் இந்தப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு கிட்டுமானால் அதைக்கண்டு மகிழ்ச்சி அடைவது திராவிடர் கழகமாகத்தான் இருக்கும்.

**- விடுதலை (10.8.98)**

பிரதமர் முன்னிலையில் தமிழக, கர்நாடக, கேரள, புதுவை முதல்வர்கள் நடத்திய பேச்சு வார்த்தையின் பலனாக நீண்ட காலமாக இருந்துவந்த காவிரி நதி நீர்ப் பங்கீட்டு பிரச்சினையில் நல்லதொரு உடன்பாடு ஏற்பட்டுள்ளது. பிரச்சினையில் தொடர்புடைய அனைத்து மாநிலங்களாலும் இந்த உடன்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி கர்நாடகம் தமிழகத்திற்கு ஆண்டொன்றுக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிடுவது என்பது இந்த உடன்பாட்டின் மூலம் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நான்கு மாநிலங்கள் தொடர்புடைய காவிரிப் பிரச்சினையை நீதிமன்ற நடவடிக்கை மூலம் மட்டும் தீர்த்துவிட முடியாது, பரஸ்பர நலனைக் கருத்தில்கொண்டு எந்த ஒரு தரப்பிற்கும் பாதகம் ஏற்படாமல் பேச்சு வார்த்தை மூலமே தீர்க்கப்பட முடியும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. இதன்படி இப்பொழுது நான்கு மாநில முதல்வர்களும் பேச்சு வார்த்தை நடத்தி நல்லதொரு உடன்பாட்டினை ஏற்படுத்தியுள்ளனர்.

**- தீக்கதிர் (11.8.98)**

பிரதமர் வாஜ்பாய் அவர்களின் தீவிர முயற்சி காரணமாகவும், முதல்வர் கலைஞர் அவர்களின் அறிவார்ந்த அணுகுமுறை காரணமாகவும், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களின் முதல்வர்கள் அளித்த ஒத்துழைப்பின் காரணமாகவும் காவிரிப் பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வு ஏற்பட்டிருக்கிறது.

நாட்டோரும், நடுநிலையாளர்களும், ஏடுகள் பலவும் இந்த ஒப்பந்தத்தைப் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பாராட்டியிருக்க - இலட்சக்கணக்கான விவசாயிகளின் மனங்களைக் குளிரச் செய்யும் வகையில் அமைந்துள்ள இந்த ஒப்பந்தத்தைப் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் பாராட்டியிருக்கிறார்கள்.

1968ஆம் ஆண்டு தொடங்கி சுமார் முப்பது ஆண்டுக்காலமாகக் காவிரி டெல்டாப் பகுதி விவசாயிகளைத் தவிக்கவைத்துக் கொண்டிருந்த காவிரிப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வர அரும்பெரும் முயற்சிகளை மேற்கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள் மிக்க அடக்கத்துடன்,


"இந்த வெற்றியை எனது தனிப்பட்ட வெற்றியாகக் கருதவில்லை. நான்கு மாநில விவசாயப் பெருமக்களுக்குக் கிடைத்த வெற்றியாகவே இதைக் கருதுகிறேன்"

- என்று ஒருமுறை அல்ல; இருமுறை அல்ல; திரும்பத் திரும்ப இந்தக் கருத்தை வலியுறுத்தியபடியே இருக்கிறார்.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும், அரசியல் பகை காரணமாகவும் ஆத்திரப்பட்டு - காவிரிப் பிரச்சினையைச் சிலர் அரசியலாக்க முனைவது எந்த விதத்தில் நியாயம்?

அறுபதாண்டுக் காலத்திற்கு மேல் இந்தத் தமிழினத்திற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு அரும்பணியாற்றி வரும் கலைஞர் ஒரு நெருப்பு. அந்த நெருப்பில் ஈக்கள் மொய்ப்பதாக - யாராவது கூறினால் அப்படிச் சொல்பவரின் புத்திசாலித்தனம் சந்தேகத்திற்குரியது என்பதை தமிழ்மக்கள் அறிவார்கள். மொத்தத்தில் சொல்லப்போனால் - காவிரிப் பிரச்சினையில் கலைஞரை குறை சொல்வது - பெற்ற தாயையே சந்தேகப்படுவதற்கு ஒப்பாகும்.

**- முரசொலி (12.8.98)**



# மாரடைப்பு நோய் :

## அரசு பொது மருத்துவமனையில் 'ஸ்டென்ட்' சிகிச்சை முறை

மாரடைப்பு நோய்க்கு, அறுவை சிகிச்சை இல்லாமல் 'ஸ்டென்ட் சிகிச்சை' முறையினால் இப்பொழுது குணப்படுத்த இயலும். இதற்கு, 'கார்டியாலஜிஸ்ட்' எனப்படும் இருதய நோய் மருத்துவ நிபுணர்கள் அதிநவீன 'கார்டியாக் கேத் லேப்' **(Cardiac Cath Lab)** கருவியினைப் பயன்படுத்தி சிகிச்சை அளிக்கின்றார்கள்.

இருதயத்திற்கு இரத்தம் செலுத்தும் 'கரோனரி' இரத்தக் குழாய் **(Coronary Artery)** அடைப்பினை 'பலூன் ஆஞ்சியோபிளாஸ்டி **(PTCA)** மூலம் சரி செய்தபின், ஸ்டென்ட் சிகிச்சை செய்து கரோன்ரி இரத்த நாளங்கள் மீண்டும் அடைப்பு **(Restenosis)** ஏற்படாமல் தடுக்க இயலும்.


கார்டியாலஜிஸ்ட் செய்யும் இப்புதிய ஸ்டென்ட் சிகிச்சை முறையால் பைபாஸ் அறுவை சிகிச்சை **(CABG)** செய்யும் நிர்ப்பந்தம் தவிர்க்கப்படுகின்றது. ஸ்டென்ட் முறை செய்யும்போது, நோயாளிக்கு மயக்க மருந்து கொடுக்கத் தேவையில்லை; இதனால், சிகிச்சையின்பொழுது நோயாளி முழுநினைவோடு சாதாரணமாக இருக்கலாம். மிக நூதன முறையில், மேல் தொடையில் உள்ள 'பெஃமோரல் ஆர்ட்டரி' **(Femoral Artery)** வழியாக ஒரு சிறு ஊசியின் மூலம் இந்த ஸ்டென்ட் சிகிச்சை செய்யப்படுகின்றது. மேலும் இம்முறையில் அறுவை சிகிச்சையில் ஏற்படும் காயங்கள் மற்றும் வடுக்கள் இருக்காது. பைபாஸ் அறுவை சிகிச்சைக்கு நோயாளி மருத்துவமனையில் பத்து நாட்களாவது தங்கி இருத்தல் வேண்டும். மேலும், பல பாட்டில்கள் இரத்தமும், தவிர பலவகை மருந்துகளும் தேவைப்படும். ஆனால், ஸ்டென்ட் சிகிச்சைக்கு இருநாட்கள்தான் மருத்துவமனையில் தங்கவேண்டும்.

சென்னை, அரசு பொது மருத்துவமனையிலுள்ள இருதய இயல்துறை **(Cardiology Department)** பிரிவில், முதன்முறையாக, இருதய மருத்துவ நிபுணர்களால் இந்த ஸ்டென்ட் சிகிச்சை ஒரு ஏழை நோயாளிக்கு, வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளது.

'மெட்ரானிக்' **(Medtronic)** நிறுவனத்தின் 'பிஸ்டென்ட் ஆர்ட்டிஸ்ட் **(Bestent Artist) (3mm x 15 mm)** எனப்படும் ஸ்டென்ட், இந்த நோயாளியின் கரோனரி இரத்த நாளத்தில் **(Left Anterior Descending Artery)** பொருத்தப்பட்டு அடைப்பு நீக்கப்பட்டுள்ளது.

சுமார் ரூ.65,000 மதிப்புள்ள ஸ்டென்ட் மற்றும் உபகரணங்களை இந்த ஏழை நோயாளிக்கு நன்கொடையாக வழங்கிய 'மெட்டெக்-மெட்ரானிக்' **(Medtech-Medtronic)** நிறுவனத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றியும், பாராட்டும் உரித்தாகுக! மேலும் இந்தச் சிகிச்சையைத், தனியார் மருத்துவமனைகளில் செய்வதானால் **(Corporate Hospitals)** சுமார் ரூ.1½ (ஒன்றரை) இலட்சம் ரூபாய் வரை செலவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பலூன், ஸ்டென்ட் உபகரணங்கள், இப்பொழுது மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நலவாழ்வு நிதியின் **(Chief Minister's Health Fund)** மூலமாகக் கிடைக்கப்பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், வசதிமிக்க நோயாளிக்குத் தனியார் மருத்துவமனைகளில் கிடைக்கும் சிகிச்சை இப்பொழுது ஏழை, எளியவர்கட்கு அரசு மருத்துவமனைகளில் அளித்து, நலம்பெறச் செய்ய இயலும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.




**பேராசிரியர்.S.D. ஜெயராஜ்**
பேராசிரியர் மற்றும் தலைவர்,
இருதய இயல் துறை
அரசு பொதுமருத்துவமனை,
சென்னை - 600 003.

# பசுமைப் புரட்சியில் பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் பங்கு !

அகில இந்திய ரீதியில் தேசிய வேளாண் ஆராய்ச்சித் திட்டத்தினை 1981ஆம் ஆண்டு ஆரம்பித்து, இந்தியாவை 153 வேளாண் தட்பவெப்ப மண்டலங்களாகப் பிரித்தனர். இதன்படி தமிழகத்தை மொத்தம் ஏழு வேளாண்மை தட்பவெப்ப மண்டலங்களாக பிரித்துள்ளனர். அதில் வடமேற்கு மண்டலத்தில் தலைமை இடமாகக் கொண்டு செயல் படுவதுதான் பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையம். இது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கம். இம்மண்டலம் தருமபுரி, சேலம், நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு நீங்கலாகவும், திருச்சி மாவட்டத்தின் பெரம்பலூர் பகுதியையும் உள்ளடக்கியது. இம்மண்டலம் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்படும் வேளாண்மை பிரச்சினைகளுக்கு, பகுதிக்கு ஏற்ப ஆய்வுகளை மேற்கொண்டு, அவைகளுக்குத் தீர்வு கண்டு, கண்ட தீர்வுகளை மாநில வேளாண் விரிவினைத்துறை மூலம் குறிப்பாக அப்பகுதி மக்களுக்குச் சென்று அடையச் செய்வது இம்மண்டல ஆராயச்சி நிலையத்தின் பணி.

இம் மண்டலத்தில் மொத்தம் 10.15 இலட்சம் எக்டேர் பரப்பில் முக்கியப் பயிர்களான சிறுதானியங்கள், நெல், தோட்டப்பயிரான மா, தென்னை, கரும்பு மற்றும் எண்ணெய் வித்துப் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

இம்மண்டலத்தில் சுமார் 80 சதம் செம்மண் மேலோட்டமான நிலவாகுவைச் சேர்ந்தது. இது ஈரப்பிடிப்பும், வளமும் மிகவும் குறைந்த வண்ணப்பட்டி என்ற மண்பிரிவைச் சார்ந்தது.

**ஆராய்ச்சியின் நோக்கங்கள்:**

சோளம், ராகி, வரகு, சாமை மற்றும் சிறுதானியங்கள், பயறுவகைகள் மற்றும் எண்ணெய்வித்துக்களில் வறட்சியைத் தாங்கவல்ல புதிய இரகங்களை உருவாக்குதல். ஈரத்தன்மை பிடிப்பற்ற, வளம் குன்றிய மண்வாகில் பயிர் விளைப்பதற்கான மானாவாரி சாகுபடிக்கேற்ற தொழிற் நுட்பங்களை உருவாக்குதல். அதிக இலாபம் தரக்கூடிய பயிர்த் திட்டங்களை உருவாக்குதல். இம்மண்டலத்திற்கேற்ற தோட்டக்கலைப் பயிர்களில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல். பயிர் பாதுகாப்பிற்கான ஒருங்கிணைந்த பூச்சி, நோய்க் கட்டுப்பாடு முறைகளை உருவாக்குதல்.

கண்டுபிடிக்கப்பட்ட வேளாண் தொழிற்நுட்பங்களை மண்டல ஆராய்ச்சி மற்றும் விரிவினைக் குழுக் கூட்டங்கள், மண்டல பணிமனைக் கூட்டங்கள் மற்றும் கருத்துக் காட்சி, கருத்தரங்கு மற்றும் பயிற்சி போன்றவற்றின் மூலம் வேளாண்மைத்துறை மற்றும் விவசாயிகளுக்குச் சென்றடையச் செய்தல் ஆகியவைகள் இம்மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு மற்றும் விரிவினை நோக்கங்களாகும்.

**ஆராய்ச்சித் திட்டங்கள்:**

தற்பொழுது இந்நிலையத்தில் மொத்தம் 73 ஆராய்ச்சித் திட்டங்கள் 11 துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளின் முக்கியக் கண்டுபிடிப்புகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.




**ஆய்வின் சாதனைகள் - நெல்:**

தருமபுரி மாவட்டத்தில் பின்சம்பா பருவத்தில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற நெல் இரகத்தினை கண்டறிய மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஐ.ஆர்.45, 95-54-1-13 என்ற வளர்ப்பு ஒரு எக்டருக்கு சராசரியாக 5933 கிலோ தானியமும், 12990 கிலோ வைக்கோலும் மகசூலாகக் கொடுத்துள்ளது. இது எம்டியு-4 என்ற இரகத்தை விட 8.3 சதம் கூடுதல் மகசூல் கொடுத்துள்ளது. மேலும், இந்த வளர்ப்பு புகையான் தாக்குதலுக்கு மிதமான தாங்கும் தன்மையையும் பின்சம்பாவில் நிலவும் கடுங்குளிரையும் தாங்கவும் வல்லது. பின்சம்பா பருவத்திற்கு ஏற்ற இரகமாக வெளியிடப்பட உள்ளது.

குறுகிய காலத்தில் சாகுபடி செய்ய ஏற்ற நெல் இரகங்களில் மேற்கொண்ட ஆய்வில் டிபிஜ-2502 என்ற 110-லிருந்து 112-நாள் வயதுடைய சிறந்த, அதிக மகசூல் தரக்கூடிய சன்ன இரகமாக நெல் இரகம் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வளர்ப்பு ஏ.எஸ்.டி. இரகத்தைவிட 25.8 சதமும், ஏ.டி.டீ.36 இரகத்தைவிட 7.1 சதமும் கூடுதல் மகசூல் தரக்கூடியது. வெள்ளை நிறமுடைய நடுத்தர நீளம் கொண்ட சன்ன இரக அரிசியைக் கொண்டது. இதன் மகசூல் திறன் எக்டருக்கு 5900 கிலோ தானியம் ஆகும். இந்த வளர்ப்பு முன்சம்பா, பின்சம்பா, நவரை மற்றும் சொர்ணவாரி ஆகிய பருவங்களிலும் பயிரிட ஏற்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**வருந்துகிறோம்**

திருவாரூர் மாவட்டச் செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர் **திரு.வி.பாலசுப்பிரமணியம்** அவர்கள், 14.8.1998 அன்று இயற்கை எய்தினார். செய்தி - மக்கள் தொடர்புத்துறை சார்பிலும், 'தமிழரசு' சார்பிலும் அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- ஆசிரியர்.

நீண்ட நாட்கள் வயதுடைய (150 நாள்) அதிக மகசூல் கொடுக்கக் கூடியதும், களர், உவர் நிலத்தில் தாங்கி வளரக்கூடியதுமான எஸ்.ஏ.டீ.இ.டீ.-2118 என்ற நெல் வளர்ப்பு வடமேற்கு மண்டலத்திலுள்ள களர், உவர் நிலங்களுக்கு சாகுபடி செய்ய ஏற்றது எனக் கண்டறியப் பட்டுள்ளது. இது எக்டருக்கு 5,846 கிலோ தானிய மகசூல் கொடுக்கக் கூடியது. இது கோ-43 என்ற இரகத்தைவிட 32.2 சதம் அதிக மகசூல் தரக்கூடியது.

**ராகி:**

நடுத்தர வயதுடைய டீ.பி.ஜ.-1862 என்ற ராகி வளர்ப்பு, பையூர்-1 இரகத்தைவிட 17 சதம் அதிக தானிய மகசூல் கொடுத்துள்ளது. இது அனுசரனை ஆராய்ச்சியில் உட்படுத்தப் பட்டுள்ளது. டி.பி.ஜ.2134 மற்றும் 1894 ஆகிய இருவளர்ப்புகளும் தற்பொழுது பலவித பரிசோதனை ஆய்வில் உள்ளது.

**கொள்ளு:**

பையூர்-2 என்ற கொள்ளு இரகம் மானாவாரியில் இரண்டாம் போக சாகுபடிக்கு ஏற்றது. இது ஜனவரி 1998-ல் உழவர்களின் சாகுபடிக்காக பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டது. இது 100 முதல் 105 நாட்கள் வயதுடையது. எக்டருக்கு 879 கிலோ பயறு மகசூல் கொடுக்கக் கூடியது. இது பையூர்-1ஐ விட 19.6 சதமும், கோ-1ஐ விட 26.8 சதம் கூடுதல் மகசூல் ஆகும்.

**பயறுவகைப் பயிரில் களை நிர்வாகம்:**

மானாவாரி பயறுவகை சாகுபடியில் களையைத் திறம்பட கட்டுப்படுத்த களைக் கொல்லி இட்டு செய்த ஆய்வில், களை எடுக்க கூலியாட்கள் தட்டுப்பாடு உள்ள பகுதியில் புளுகுளோரலின் என்ற களைக் கொல்லியை எக்டருக்கு 1 லிட்டர் என்ற அளவில் நட்ட மூன்றாம் நாள் தெளித்து பிறகு 35-ம் நாள் ஒரு கைக்களை எடுப்பதினாலும், கூலி ஆட்கள் தட்டுப்பாடு இல்லாத இடங்களில் விதைத்த 15 மற்றும் 35-ம் நாட்களில் இரு கைக்களை எடுப்பதின் மூலம் மானாவாரி தட்டைப்பயறு மற்றும் பாசிப் பயறில் அதிக மகசூல் அடையலாம்.

**ஒருங்கிணைந்த உர நிர்வாகம்:**

மானாவாரி சோளத்தில் அதிகபட்ச மகசூலையும் 1498 கிலோ எக்டேர் என்ற அளவில் பரிந்துரைக்கப்பட்ட இரசாயன உரம் மற்றும் தொழுஉரம் இடுவதினாலும் அல்லது 75 சதம் பரிந்துரைக்கப்பட்ட இராசாயன உரம் மற்றும் உயர் உரங்கள் இடுவதினாலும் அடையலாம். மானாவாரி இராகியில் அதிகபட்ச தானிய மகசூலாக 1598 கிலோ/எக். பரிந்துரை செய்யப்பட்ட இரசாயன உரத்துடன் ஊட்டமேற்றிய தொழுஉரம் இட்டதில் கிடைத்துள்ளது.

மானாவாரி தட்டைபயரில் டி.ஏ.பி.2 சத கரைசலை பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், 15-நாள் இடைவெளியில் இரண்டாவது முறையும் தெளிப்பதன் மூலம் அதிக பயறு மகசூல் பெற்று லாபம் பெறலாம்.

இறவை ராகியில் அதிக மகசூல் அடைய இம்மாவட்ட செம்மண் நிலங்களுக்கு 75 சதம் செயற்கை உரமாகவும், 25 சதம் இயற்கை உரமாக இட்டதில் 22.69 குவிண்டால் அதிக மகசூலாக கிடைத்துள்ளது.

பையூர்-2 சோளத்தில் 75 சதம் செயற்கை உரமாக இடும்போது 24.66 குவிண்டால் அதிக மகசூலாக கிடைத்துள்ளது. இது பொதுபரிந்துரை மூலம் கிடைக்கும் மகசூலைவிட 11.9 சதம் அதிக மகசூல்.

பையூர்-1 பாசிப்பயிறு ஒரு கிலோ விதைக்கு 20 கிராம் சூப்பர் பாஸ்பேட் விதை நேர்த்தி செய்வதுடன் 25 சத மணிச்சத்தை (18.75 கிலோ/எக்டருக்கு) என்ற அளவில் மண்ணில் இடுவதன் மூலமும் மிக அதிக மகசூலாக எக்டருக்கு 1577 கிலே பயறு மகசூல் பெறலாம்.

பையூர்-1 நெல்லில் தூர் கட்டும் மற்றும் புடை பருவம் ஆகிய நிலைகளில் டைஅமோனியம் 2 சத கரைசலுடன் ஒரு சத யூரியா கரைசல் சேர்த்துத் தெளிப்பதன் மூலம் குளிரைத்தாங்கி எக்டருக்கு 3750 கிலோ தானிய மகசூல் கொடுப்பது அறியப்பட்டுள்ளது.

**பயிர்ப் பாதுகாப்பு:**

**பூச்சியியல்:**

சோளத்தில் தட்டைப்பயறு ஊடுபயிர் செய்தால் (4:1) தண்டு துளைப்பானின் தாக்குதல் 1.4 சதவிகிதமாகக் குறைகிறது.

துவரையில் எள்ளை ஊடுபயிராகச் செய்தால் தேமல் நோய் அதிகமாகக் காணப்படுகிறது. டைக்கோபால் 18.5 இசி. தெளிப்பதன் மூலம் இலைப்பேனைக் கட்டுப்படுத்தி தேமல் நோயைக் குறைக்கலாம்.

**தோட்டக்கலை:**

இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து 24 'மா' வீரிய ஒட்டு இரகங்கள் கொண்டுவரப்பட்டு தேர்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது.

சீத்தாவில் இதுவரை 11 இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டுக்கள் சேகரிக்கப்பட்டு சிறந்தவைகளைத் தேர்வு செய்வதற்காகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதைப்போன்று திராட்சைகளில் ஒட்டு இரகங்களைத் தேர்வு செய்வதற்காக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**சமூகவியல்:**

தோட்டக்கலைப் பயிர்களில், தக்காளி, பீன்ஸ், மா மற்றும் கொய்யா ஆகியவற்றில் தொழில் நுட்பத் தாக்கங்களில் ஆய்வு செய்வதில் ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டா ஆகிய இடங்களில் தக்காளியில் மட்டும் 96.6 சத தொழில் நுட்பத் தாக்கங்கள் (Technology Intervention) உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

வேளாண்மையில் அறுவடைக்குப் பின்செய் நேர்த்தி, பயிர்ப்பாதுகாப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றிலும், தோட்டக்கலையில், காய்கறி விதை உற்பத்தி மற்றும் ஒட்டுச் செடி உற்பத்தி, பால் பண்ணையத்தில், பால் மாடுகளை வாங்குதல் மற்றும் பாலைப் பதப்படுத்துதல் ஆகியவை வேளாண் மகளிரின் பயிற்சி தேவை எனக் கண்டறியப்பட்டது.

**வேளாண் பயிற்சி மற்றும் விரிவினைப் பணிகள்:**

ஒவ்வொரு மாதமும் மாவட்ட வேளாண் விரிவினைப் பணியாளர்களுக்குப் பயிர்ச் சாகுபடித் தொழில் நுட்பங்களில் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

மாதந்தோறும் 7-ந் தேதி ஆண், பெண் மற்றும் விவசாயிகளுக்கும் சுயதொழிலை ஏற்கும் வகையில் காளான் வளர்ப்பில் செயல்முறைப் பயிற்சி வழங்கப்படுகிறது.

தேசிய வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் மேலாண்மைக் கழகத்தின் 10- இளம் வேளாண் விஞ்ஞானிகளுக்கு வயல்வெளிப் பயிற்சியின் அடிப்படையில் பிரச்சனைகளைக் கண்டறிந்து ஆராய்ச்சித் திட்டங்களை வகுப்பதற்கு ஒரு மாதம் சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டது.

தருமபுரி மாவட்ட மேம்பாடு திட்ட வளர்ச்சியின் மூலம் 200 விவசாயிகளுக்குச் சுயதொழில் ஏற்கும் வகையில் உயிரியல் முறையில் பூச்சிக் கட்டுப்பாடு மற்றும் காளான் சாகுபடி பற்றிய பயிற்சிகள் கொடுக்கப்பட்டது.

இந்நிலையத்திலிருந்து ஒட்டு மாங்கன்றுகள், கொய்யா, மாதுளை, தென்னங் கன்றுகள், கறிவேப்பிலை, முருங்கை போன்ற செடி வகைகளும், வல்லுநர் வித்துக்கள், நெல், பயறுவகை, சிறுதானியம் ஆகியவற்றிலும் நெல், சோளம், கொள்ளு போன்றவற்றில் விதைகளும் விவசாயிகளுக்கும், வேளாண் துறையினருக்கும் அபிவிருத்திக்காக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், வயல்வெளிப் பிரச்சனைகளுக்கு வேளாண் விரிவினைப் பணியாளர்களுடன் இம்மண்டல விஞ்ஞானிகளும் ஒருங்கிணைந்து சென்று தீர்வு கண்டு பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன. ❑

*ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு. சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.*
*தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906*


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

